THE MANJARI DIGEST JULY 2004


நம் நாட்டு மொழிகளில்
நம்பர் 1 டய்ஜெஸ்ட்

# மஞ்சரி

5/- ஜூலை 2004

## ஒரு பாம்பின் பழிவாங்கல்

– உண்மைச்சம்பவம்





## உத்திரப் பிரதேச உலா

# இலக்கியவீதி

மஞ்சரி டய்ஜெஸ்ட்

இணைந்து நடத்தும் இலக்கியவீதி

## கல்லூரி மாணவர்களுக்கான

# அற்புத அறிவியல் கட்டுரைப் போட்டி

இன்றைய உலகம் அடைந்துள்ள அறிவியல் வெற்றிகள் சாதனைகள் குறித்துப் பழகு தமிழில் கட்டுரைகளை வழங்க, கல்லூரி மாணவர்களை அழைக்கிறோம். கணினி, மருத்துவம், பொறியியல், விண்வெளி, தகவல்தொடர்பு, சுற்றுச்சூழல் போன்ற துறைகளில் கட்டுரைகள் அமையலாம். உதாரணத்திற்கு சில தலைப்புகள் இங்கே...

1. நன்னீர் பெருக்கி நானிலம் காப்போம், 2.விண்வெளியில் ஒரு விஞ்ஞான நகரம், 3.ஓசோன் மண்டலக் கிழிசலைத் தைப்போம், 4. நாளைய உலகில் கணினி, 5. டி.என்.ஏ (D.N.A) என்றொரு அற்புதம்!, 6. சூரிய மூலதனம்

✪ கட்டுரைகள் மஞ்சரியில் பத்து பக்கங்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும். தெளிவாகவும் சுவையாகவும், தேவைப்படும் விளக்கப் படங்களுடன் அனுப்ப வேண்டும்.

✪ கட்டுரைகளோடு, தாம் இன்ன கல்லூரி மாணவர் என்பதற்கான சான்றும் இணைக்கப் பட்டிருத்தல் அவசியம்.

✪ போட்டிக்கட்டுரைகள் இலக்கியவீதி அமைப்பாளர், மஞ்சரி ஆசிரியர் மற்றும் அறிவியல் அறிஞர்களால் தேர்வு செய்யப்படும்.

*போட்டிக்கட்டுரைகளை அனுப்ப கடைசித் தேதி: 07.08.2004*

**முதல் பரிசு : ரூ. 1500/-**

**இரண்டு இரண்டாம் பரிசுகள் : ரூ. 1000/-**

**மூன்று மூன்றாம் பரிசுகள் : ரூ. 500/-**

★ இவை தவிர ஆறு கட்டுரைகள் பிரசுரத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப் படும். கட்டுரைகள் ***அறிவியல் தமிழ்*** தலைப்பில் மஞ்சரியில் ஒரு வருடத்திற்கு தொடராக வெளியாகும்.

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்
நிறுவுனர்: அமரர் என். ராமரத்னம்

மலர் : 57 தாரண - ஆடி ஜூலை - 2004 இதழ் : 7

# மஞ்சரி

உள்ளே ...

பிரார்த்தனையின் மகத்துவம் ... 3
களப்பிரர் யார்? ... 5
நெட்டோ எழுதிய புத்தகம்
பிரேசில் சினிமாக் கதை ...10
ஒரு நாகத்தின் பழிவாங்கல் ... 19
தாயகம் நோக்கி ... 21
விழித்துக் கொள் வெற்றி பெறு
- நன்னம்பிக்கைத் தொடர் ...26
உத்திரப் பிரதேச உலா ... 32
இந்த மாதம் எப்படி வந்தது? ...48
ஒரு சர்வாதிகாரியின்
மறுபக்கம் (தொடர்ச்சி) ...50
வாஸ்து பெங்ஸூயி சிறுகதை ...58
தென்கச்சி பதில்கள் ... 64
வல்லாரை - மருத்துவம் ... 68
பாலர் மஞ்சரி ... 71
ஆரியக் கொள்கை ... 76

## வரலாற்றுப் புத்தகமா? ம்.. கற்பனை நாவலா?

இதி-ஹா-ஆஸ் = உள்ளதை உள்ளபடி விவரிப்பது. அதுவே இதிஹாஸம்/வரலாறு/சரித்திரம். எக்காரணம் கொண்டும் உண்மையை விலக்கி மாற்றி எழுதுவது, புத்தியைக் கொலை செய்ததாகவே அமையும். இந்தியாவிலோ, வரலாற்றை நாவல்களாக்கும் முயற்சி வெளித் தெரியாமல் நடந்து வருகிறது.

பொதுவாக வரலாற்று அறிவோடு நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதில் அக்கால இந்தியர் ஆர்வம் காட்டவில்லை என்ற கருத்து உண்டு. முறையான ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாறு இங்கில்லாத காரணத்தால் மேனாட்டு வரலாற்றாளர்கள் தங்கள் போக்கில் தொகுத்துக் கொடுத்தவைகளையே இன்றளவும் நமது நாட்டின் வரலாறாக நாம் வைத்துக் கொண்டிக்கிறோம்.

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை (HRD)யின் கீழ் இயங்கும் தேசிய கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்றுக் கழகம் (NCERT) தேசிய அளவிலான பள்ளிப் பாடநூல்களைத் தயாரித்து வடிவமைப்பதில் புகழ் பெற்றது. 1961 முதல் இந்த அமைப்பின் நவீன செயல்பாடுகளால் கவரப்பெற்ற யுனெஸ்கோ மற்றும் வளரும் நாடுகளின் கல்வி அமைப்புகள் பலவும் NCERTயின் ஒத்துழைப்போடு ஆராய்ச்சி மற்றும் பயிற்று நிகழ்வுகளைப் பெருமளவில் நடத்தியிருக்கின்றன. இதுமட்டுமல்ல, இந்திய மாநிலங்களின் கல்வித்துறை வளர்ச்சிக்கு நவீன முறையில் குறைந்த விலையில் பாடப் புத்தகங்களை (சி.பி.எஸ்.ஸி மற்றும் மெட்ரிக் பாடப் புத்தகங்களை) அச்சிட்டுக் கொடுப்பதிலும் கைதேர்ந்தது இந்த அமைப்பு.

இந்த அமைப்பின் பிரபலத்தால், பல மாநிலங்கள் தங்கள் பாடத்திட்டத்தில் NCERTயின்

புரிந்துரைப்படி தயாரிக்கப்பட்ட புத்தகங்களைக் குறைந்த விலையில் வாங்க முன்வந்தன. 2001-02 இல் பழைய பாடத்திட்டத்தின்படி உள்ள சற்றேறக் குறைய 2கோடி புத்தகங்களை NCERT அச்சிட்டு விற்பனை செய்தது. 2003-04 இல் தேவை அதிகரித்ததால், 5 மற்றும் 8 ஆம் வகுப்பு தவிர்த்து 4.5 கோடி புத்தகங்களை அச்சிட்டது NCERT... அதுவும் திருத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தில்!

ஆனால் சொல்லிவைத்தாற்போல் பல மாநிலங்கள் இந்தப் புத்தகங்களை வாங்க மறுத்துவிட்டன. அதற்கு அவை சொன்ன காரணம் - NCERTயின் திருத்தப்பட்ட காவிமயமாக்கப்பட்ட பாடங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே! அத்துடன் இரண்டு வருடங்களுக்குள்ளாக டெல்லி உள்ளிட்ட அரசுகள் மறுபதிப்புப் புத்தகங்களை வெளியிட்டு பெற்றோர்க்கு நிதிச்சுமையையும் அதிகரித்திருக்கின்றன.

இந்த முடிவால் நஷ்டமடைந்தது NCERT மட்டுமல்ல, அந்தந்த மாநிலங்களும்தான்! குறைந்த விலையில் தரமான புத்தகங்களை NCERTயிடமிருந்து பெறாமல், அதிக செலவில் தாங்களே தயாரித்திருக்கின்றன. காரணம் - காவிமயமாக்கல் படுத்திய பாடுதான்!

இப்படி காவிமயமாக்கல் என்று எதைத்தான் சொல்கின்றனர்...? 1986 இல் அனைத்து மாநிலங்களையும் ஆலோசித்து ராஜீவ் காந்தி அரசு தேசிய கல்விக் கொள்கையை அறிவித்தது. அதற்கு முன்னர் இருந்த பாடத்திட்டங்களில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தது. இதில் NCERTயும் அடக்கம். 1986க்கு முன் வரை NCERTயோடு எந்த வகையிலும் மோதல் போக்கு கொண்டிராத மேற்கு வங்கம், தேசியக் கல்விக் கொள்கைக்கு எதிரான அரசியல் நிலைப்பாடு எடுத்ததோடு, NCERTயின் வழிகாட்டலை மறுக்கவும் செய்தது. காரணம் - இடதுசாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த NCERTயில் எந்தவித மாறுதலையும் ஏற்றுக்கொள்ள மறுத்ததுதான்!

ராஜீவ் காந்தி கொண்டுவந்த சீர்திருத்தங்களை அதற்குப் பின் வந்த எந்த அரசுகளுமே நடைமுறைப்படுத்த முன்வரவில்லை... ஆனால் கடந்த முறை அமைந்த தே.ஜ.கூ அரசின் மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் முரளிமனோகர் ஜோஷி, ராஜீவ் காந்தியின் சீர்திருத்த அம்சங்களுடன் கூட சில பாரம்பர்ய அம்சங்களைச் சேர்க்க, அது காவிமயமாக்கல் கோஷத்திற்கு அடிகோலியது என்றுதான் சொல்லவேண்டும்...

அதில் குறிப்பிடத்தகுந்த, சர்ச்சைக்குள்ளான அம்சங்கள் சில...

* சீக்கிய மதகுரு குருதேஜ் பகதூர், ஒரு கொள்ளைக்காரர், கலகக்காரர்... அவரை ஔரங்கஜீப் கொலை செய்தது நியாயமானது என்ற போதனை - பதினோராம் வகுப்புப் புத்தகத்தில் - 1675 இல் குருதேஜ்பகதூரை அஜீஸ் அதாம் கைது செய்து டெல்லிக்குக் கொண்டுவந்திருப்பதன் மூலம் அமைதியை நிலைநாட்டினார் என்பது - இவற்றை ஜோஷி சென்ற முறை நீக்க முயன்று பாடம் திருத்தப்பட்டது. இத்திருத்தம் காவிமயமாக்கம் என்று அறிவுஜீவிகளுக்கு உதித்துள்ளதால், இப்போது பழைய பாடத்திட்டமே தொடரும் நிலை... மன்மோகன் 'சிங்' தான் பிரதமராக இருக்கிறார் என்பதை நினைவில் இருத்த வேண்டியிருக்கிறது...

* 7 ஆம் வகுப்புப் புத்தகம் 18 ஆம் பக்கத்தில் 1947க்கு முன் இந்தியக் குடிமகன் யாருமில்லை என்ற பிரசாரம் மூலம், சுதந்திரத்திற்குப் பிறகே இந்தியா ஒரு நாடானது என்றும், அதற்கு முன் இது ஒரே நாடல்ல என்றும் கூறும் ஆங்கிலப் பிரிவினைவாத சிந்தனையை விதைப்பது...


* அறிவியல் மற்றும் விண்வெளித்துறை சாதனைகளின் பட்டியலில் ராகேஷ் சர்மாவின் விண்வெளிப் பயணத்தைக்

தொடர்ச்சி 79 ஆம் பக்கத்தில்





# மகத்துவம் வாய்ந்த பிரார்த்தனை



மனப்பூர்வமான பிரார்த்தனையுடன் ஒரு நாளைத் தொடங்கும் பொழுது, நமக்கு அமைதியான இணக்கமான மன நிலை அமைகிறது. நமது தன்னம்பிக்கையை அது பலப்படுத்துகிறது. மேலும் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளை எதிர்கொள்ள, நமது உள்ளத்தை பிரார்த்தனை தயார்படுத்துகிறது.

தினசரி பிரார்த்தனையின் சக்தி எல்லையற்றது. தினம்தோறும் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே பிரார்த்தனை செய்தால் கூட, அகத் தூய்மையும் மன சாந்தியும் கிடைக்கிறது. எனவே தினம்தோறும் கொஞ்ச நேரத்தைப் பிரார்த்தனைக்காக ஒதுக்குவது அவசியம். அப்படிச் செய்யும் பொழுது காலப்போக்கில் அது ஒரு பழக்கமாகி விடுகிறது. தினசரி பிரார்த்தனை என்பது, தனிப்பட்ட சலுகைகளைப் பெறுவதற்காகவும், அன்றாடத் தேவைகள் நிறைவேறுவதற்காகவும் மட்டுமே செய்யப்படுவதன்று. நமக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் அருளியுள்ள ஆண்டவனுக்கு நன்றி தெரிவித்துப் போற்றும் முகமாகவும் அது அமைகிறது. நமது வழியில் நமது மொழியில் பிரார்த்தனை செய்யலாம், ஏனெனில் ஆண்டவன் மௌனப் பிரார்த்தனையைக் கூடக் கேட்கிறார்.

நாம் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்வது போல் சாதாரணமாக ஆண்டவனிடமும் பேசலாம். நமது சொற்களின் நேர்மையும் எண்ணத்தின் தூய்மையும் உணர்வுகளின் பரிமாணமும்தான் முக்கியம். ஆண்டவனிடம் முழுமையாக சரணாகதி அடைவதே, பிரார்த்தனையின் முக்கியமான அடிப்படைத் தத்துவம்.

வாழ்க்கையில் தினந்தோறும் நாம் என்

**Consecration** இதழில் திருமதி. சுஷ்மா மேனன் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்
தமிழில் : ஆழ்வார்குறிச்சி பேராசிரியர் இல. ஞானகிராமன்

ணற்ற பிரச்னைகளை எதிர் நோக்குகிறோம். உளங்கனிந்த பிரார்த்தனை, அல்லது பூஜை நம்மை உயர்த்தி, இந்தப் பிரச்னைகளை சமாளிக்க, நமது உறுதிப்பாட்டிற்கு பலம் அளிக்கிறது. மேலும் பதட்டப்படாமல், உலகத்துடன் இணைந்து வாழ வழிவகையும் அமைத்துக் கொடுக்கிறது. நம்முடைய தினசரி பாதிப்புகளை எதிர்கொள்ள நமக்கு தன்னம்பிக்கையும் புத்துணர்வும் அளித்து, புதுப் புது சவால்களை சமாளிக்க புதிய தைரியத்தைக் கொடுக்கிறது.

இதயப் பூர்வமான பிரார்த்தனைக்கு தெய்வீக ஆற்றலை நமக்கு அருளும் சக்தி உண்டு. எங்கும் நிறைந்து, முக்கியமாக நமது உள்ளத்தில் உறையும், அழிவில்லாத பரமாத்மா, பல்வேறு விதங்களில் நமக்குத் தீர்வு அளிக்கும். ஏனெனில் நாம் பிரார்த்தனை செய்யும் பொழுது, நமது ஆன்மா இறை உணர்வில் துடிக்கிறது. அப்பொழுது நாம் கடவுளுடன் ஒன்றுவதை உணர்கிறோம்.

இதயத்திலிருந்து எழும் நமது பிரார்த்தனை, ஆன்மாவை ஊடுருவ வேண்டும். இல்லையென்றால், நமது பிரார்த்தனை உதட்டளவில் நின்று விடும். அதற்குப் பெரிதாக பலன் ஒன்றும் இருக்காது. மனிதன் உளமார உருகி பிரார்த்தனை செய்யும் பொழுது, ஆண்டவன் உணர்வில் அவனுடைய ஆன்மா துடிக்கிறது. அப்பொழுது ஆண்டவனின் ஆசீர்வாதம் இடையறாது, அவன் மீது பொழிய ஆரம்பிக்கிறது.

பிரார்த்தனை ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். அது உங்கள் சிந்தனைப் போக்கையே மாற்றுகிறது. பிரார்த்தனையின் பொழுது, நமது எண்ணங்களை எல்லாம் கடவுளிடம் ஒருமுகப்படுத்துகிறோம். அப்பொழுது நம்மில் பலர், உலக வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் அச்சங்களையும், கவலைகளையும் புறம் தள்ளி, நமக்கு எழுச்சியூட்டும் பரிசுத்தமான ஒரு வகை ஆறுதலை முழுமுதல் பரம்பொருள் அருளுவதை உணர ஆரம்பிக்கிறோம்.

பிரார்த்தனையைப் பற்றி மற்றொரு அருமையான விஷயம் என்னவென்றால், அதை எந்த இடத்திலும் செய்யலாம். உங்களை ஒரு அறையில் அடைத்துக் கொண்டுதான் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் உங்கள் சிந்தனையை பகவான் மீது செலுத்தி, பிரார்த்தனை செய்யலாம். உங்கள் பிரார்த்தனை தூய்மையான உள்ளத்திலிருந்து வெளிப்படும் வரை, பகவான் உங்களுக்கு எவ்விதக் குறையுமின்றி நல்லதையே அருள் செய்வான்.... இதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம்.

''எப்பொழுதும் என்னிடம் பக்தி பூண்டு என்னை சிந்திக்கிறவனின் நலத்திற்கு நான் பொறுப்பு'' என்று கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறியதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த கீதை வாக்கியம், கடவுள் தனது பக்தர்களைத் துன்பங்களிலிருந்து காப்பாற்ற, எப்பொழுதுமே தயாராக இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது.

எல்லாம் வல்லவன், நாம் புரிந்து கொள்ள முடியாத பற்பல அரிய விதங்களில் தன்னுடைய கருணையை வெளிப்படுத்துகிறான்...







# களப்பிரர் யார்?

**கி.பி. 250-600** காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர் வலிவிழந்து சிறப்பின்றிப் போக, வடமன்னராலும் பல்லவராலும் தமிழர் ஆளப்பட்டனர். இக்காலமானது 'களப்பிரர் இடையிட்டுக் காலம்' எனத் தமிழக வரலாற்றில் குறிக்கப் பெறுகிறது. இந்த மூன்று நூற்றாண்டு கால தமிழக வரலாறு பற்றிய செய்திகளைத் தெளிவாக அறிய இயலாததால், இக்காலத்தைத் தமிழகத்தின் இருண்ட காலம்' எனக் கொள்வர் வரலாற்றாளர். யார் அந்த களப்பிரர்? எங்கிருந்து, எப்படி தமிழகம் நுழைந்தனர்? எங்ஙனம் தமிழகத்தை ஆண்டனர்? என்பன போன்றவை இன்னும் புரியாத புதிர்களாகவே உள்ளன.

களப்பிரரைப் பற்றிய சான்றுகளுள் வேள்விக்குடிப் பட்டயம் இன்றியமையாத ஒன்று. இது சில செய்திகளைச் சொல்கிறது. சங்க காலப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி, வேள்விக்குடி என்னும் சிற்றூரை அந்தணர் சிலருக்கு அன்பளிப்பாக வழங்கினான். பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதிக்குப் பின் களப்பிரர் மதுரையைக் கைப்பற்றிய போது பாண்டியனால் தானமாகத் தரப்பட்ட வேள்விக்குடியையும் தாங்கள் கொண்டனர்.

கி.பி. 600ல் பாண்டியன் கடுங்கோன், களப்பிரரை முறியடித்துத் திரும்பவும் மதுரையில் பாண்டிய அரசைக் கொணர்ந்தான். கி.பி. 767-ல் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் அரியணை ஏறியபோது வேள்விக்குடியை மீண்டும் அந்தணர் பரம்பரையினர்க்கே உரிமையாக்கினான். இச்செய்திகளை விளக்கவே நெடுஞ்சடையன் வேள்விக்குடிச்செப்பேடுகளை வெளியிட்டான் என வரலாறு கூறுகிறது.

● இரா.கு. பாலசுப்பிரமணியன்

தளவாய்புரச் செப்பேடு, கொற்றமங்கலம் செப்பேடு, முதலாம் நரசிம்ம வர்மனின் கூரம் செப்பேடு, இரண்டாம் சாளுக்கிய விக்கிரமாதித்தனின் நேரூர் பட்டயம், ஹொய்சாளன் விநயாதித்தனின் ஹரிஹர் பட்டயம், திருப்புகலூர்க் கல்வெட்டு போன்றவை களப்பிரர் சிலரைப் பற்றிய குறிப்புகள் தருகின்றன.

வரலாற்று அறிஞர் து.அ. கோபிநாத்ராவ் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டுச் செய்திகளைத் துணையாகக் கொண்டு முத்தரையரே களப்பிரர் எனக் கருதுவார். இக்கல்வெட்டானது முத்தரையச்சிற்றரசன் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் (எ) சுவரன்மாறன் என்பான் இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லனை முடிசூட்டு விழாவின் போது, எதிர்கொண்டு அழைத்து வரவேற்ற செய்தியைச் செப்புகிறது.

செந்தலைத் தூண் கல்வெட்டு 'கள்வர் கள்வன்' என்று தன்னை வழங்கிக் கொண்ட பெரும்பிடுகு முத்தரையனைப் பற்றிக் கூறுகிறது. தமிழில் கள்வர் என வழங்கும் சொல்லே வடமொழியில் களப்பிரர் என ஆயிற்று எனக் கூறும் வரலாற்று அறிஞர் தி.ந. சுப்பிரமணியன் கருத்துக்கு அரண் சேர்க்கிறார் கோபிநாத்ராவ்.

அறிஞர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார், வேங்கடத்தின் தலைவன் புல்லி எனும் கள்வன் பற்றி சங்க இலக்கியக் குறிப்புகளை சான்றாகக் காட்டி வேங்கடமலை அருகில் வாழ்ந்த கள்வரோடு களப்பிரரை இணைத்துச் சொல்கிறார். தக்காணத்தின் கீழைப் பகுதியை ஆண்ட பல்லவர் தெற்கு முகமாக காஞ்சி வரை வரவே, காஞ்சியில் இருந்த கள்வர் அங்கிருந்து தெற்குப்புறமாகச் சென்று மூவேந்தரை வென்று தமிழகத்தில் தம் ஆட்சியை நிறுவினர். தஞ்சையை அடைந்த களப்பிரர் தம் குழாம்களை பல்வேறு பகுதிகளில் தங்க வைத்தனர். முத்தரையர் என்பார் அப்பிரிவுகளுள் ஒரு சாரார் என்றும், அவர்களுள்


அச்சுத
விக்கந்தன்



என்பான் ஒருவன் என்றும் அய்யங்கார் கருதுகிறார்.

நந்தி மலையை ஆண்ட அச்சுத விக்கந்தன் எனும் களப்பிர அரசன், கல்வியிற் சிறந்த அந்தணர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துப் பாதுகாத்து வந்தான் என யாப்பருங்கலம் எனும் நூல் சொல்வதாலும், இந்த நந்திமலை தமிழகத்திற்கு வடக்கே உள்ள கர்நாடகத்தின் மலை என்பதாலும் களப்பிரர் தமிழர் அல்லர் என்றும் கூறுகிறார் அய்யங்கார். அச்சுதக் களப்பாளன் எனும் அரசன் மூவேந்தர்களையும் முறியடித்துச் சிறையிலிட்டதைத் தமிழ் நாவலர் சரிதை நவிலும். தம்மை வென்ற களப்பாளனைப் புகழ்ந்து பாடிய முறையில் மூவேந்தர் பாடியதாக 4 செய்யுட்கள் அதில் உள்ளன. இதைப் பற்றிய சுவையான செய்தி ஒன்றும் வழங்கி வருகிறது.

சேர சோழர், களப்பாளனைப் புகழ்ந்து பாட, பாண்டியன் இகழ்ந்து பாடியதால் வெகுண்ட களப்பாளன் பாண்டியன் காலில் தளையிட்டான். உடனே பாண்டியனும் புகழ்ந்து பாடினான் எனக் கூறப்படுகிறது. அச்சுதக் களப்பாளன் சிறந்த சைவன் என்றும், நந்தினியின் பெயரைப் புனிதப் பெயராகக் கொண்டான் என்றும், வேதியர்களை ஆதரித்தான் என்னும் அந்நூல் கூறுகிறது. ஆனால் களப்பிரர் பொதுவாக சமணராகவோ பௌத்தராகவோ இருப்பது தான் வழக்கம்; எனவே களப்பாளரைக் களப்பிரராகக் கருதுதல் பொருந்தாது என்னும் கூறுவார் அய்யங்கார்.

களப்பிரரின் ஒரு பிரிவினரே முத்தரையர்; அவர்கள் காலப் போக்கில் தமிழராக மாறித் தமிழறிஞரை ஆதரித்தனர்; அவர்கள் சமணரை ஆதரித்ததை சமணப் பள்ளிகள் உணர்த்தும்; அவர்கள் பாண்டியர்க்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தமையால் மாறன் எனும் பட்டப் பெயரைத் தம் இயற்பெயருடன் இணைத்துக் கொண்டனர்; பிற்காலச் சோழப் பேரரசை விஜயாலயன் நிறுவுவதற்கு முன் பாண்டியர்க்கு உட்பட்ட சோழநாட்டுப் பகுதியில் அவர்கள் வாழ்ந்தனர் எனக் கருதுவர் அறிஞர் பெருமக்கள்.

''வேளாள களப்பாளரே பின்னர் களப்பிரர் என்று வழங்கப்பட்டனர்; அவர்கள் முத்தரையர் அல்லர்'' என்பார் மு. ராகவ அய்யங்கார், சைவ சித்தாந்தத்தில் சிறந்தவரான மெய்கண்டாரின் தந்தையார் அச்சுதக் களப்பாளர் ஒரு வேளாளரே என்று கூறும் இவர், களப்பிரர் தமிழகத்தைச் சேர்ந்தோரே; புறத்தார் அல்லர் என்றும் கருதுகிறார்.

களப்பிரரும் களப்பாளரும் வேறு வேறானவர், ஒருவரல்லர் எனக் கூறும் அண்ணாமலைப் பல்கலைக்கழக கல்வெட்டியல் அறிஞர் சதாசிவ பண்டாரத்தார், களப்பிரர் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த நாடோடிக் கூட்டத்தார் என்றும், கும்பகோணம் அருகிலிருக்கும் தஞ்சையைச் சார்ந்த களப்பாழ் என்ற இடத்திலிருந்து வந்த வேளிர் (அ) வேளாளர் இனத்தின் ஒரு பிரிவினரே தமிழர்களில் ஒருவரான களப்பாளர் என்றும் கூறுகிறார்.

கூற்றுவ நாயனார் எனும் அரசர் ஒரு சிறந்த சிவபக்தர்; சோழநாட்டை வென்ற அவர் தனக்குத் தில்லைவாழ்

அந்தணர் முடிசூட்ட வேண்டுமெனப் பேரவா கொண்டார். அதற்கு அந்தணர் மறுக்கவே, சிவபெருமானே அந்தணர்களை அவருக்கு முடிசூட்டச் சம்மதிக்க வைத்ததாகப் பெரியபுராணம் புகலும். கூற்றுவ நாயனார் களப்பாளரே தவிர களப்பிரர் அல்லர் என்றும், சிற்றரசர்களான வேளிர்குடியைச் சார்ந்தவராகக் கூற்றுவ நாயனார் இருந்ததே அந்தணர் மறுத்ததற்குக் காரணம் என்றும் பகர்கிறார் பண்டாரத்தார்.

தொண்டை மண்டலத்தைச் சார்ந்த ஒழியரைக் களப்பிரர் என்று வரலாற்று அறிஞர் டி.வி. மகாலிங்கம் கூற, அதனை மறுத்து தமிழகத்தின் தென்கிழக்குப் பகுதியைச் சார்ந்த ஒலிநாடே ஒழியர்க்கு உரியது என்றும், வேங்கடப் பகுதியில் இருந்து வந்த களப்பிரர்க்கும் ஒழியர்க்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்றும் கூறுவார் அறிஞர் தி.ந. சுப்பிரமணியன். மேலும் இவர், தமிழகத்தை வென்று சோழ பாண்டிய நாடுகளில் தங்கிய களப்பிரரைச் சமணர் என்கிறார்; தமிழில் பல அறநூல்கள் இயற்றிய சமணர் களப்பிரர் குலத்தவர் எனக் கருதி, ஏறத்தாழ கி.பி. 470ல் மதுரையில் திராவிட சங்கம் நிறுவிய வஜ்ரநந்திக்கும் களப்பிரர்க்கும் இடையே ஓர் இயைவு ஏற்படுத்திக் கூறுவார்.

பெங்களூர், சித்தூர் பகுதிகளில் கடம்பரால் விரட்டப்பட்டு கிழக்கே தமிழகத்தை நோக்கிப் படையெடுத்து வந்தனர் களப்பிரர். கலியரசர் பற்றிச் சாசனங்கள் காட்டுவதால் கலியுகம், கலிகுளம் போன்றன களப்பிரரோடு தொடர்புடையன எனக் கூறும் அறிஞர் கே.ஆர். வெங்கட்ராம ஐயர், களப்பிரர் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தது ஏறக்குறைய கி.பி. 5ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் எனக் கூறுகிறார்.

வரலாற்றாளர்களின் இவ்வாறான பலதரக் கருத்துகளால் களப்பிரர் யார் என்பது பற்றித் தெளிவான ஓர் இறுதிக்கு வர இன்றுவரை இயலவில்லை. ஏறக்குறைய 3 நூற்றாண்டு காலம் தமிழகத்தை ஆண்ட களப்பிரர் தமிழரின் வாழ்விலும் சமுதாயத்திலும் பண்பாட்டிலும் மிகப்பெரிய மாறுதல் ஏற்பட வழிவகுத்து விட்டனர்; அவரது வரவால் தமிழர் வாழ்வின் அடிப்படைக் கொள்கைகள் கூட ஆட்டம் கண்டன எனலாம். ★



## 'அனுபவ' பாடம்!

சர்ச்சில் தமது அரசியல் வாழ்வில் சந்தித்த சோதனைகளையும், வேதனைகளையும் பற்றி ஒரு நாள் நாடாளுமன்றத்தில் விவரித்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஓர் உறுப்பினர் எழுந்து, ''உங்கள் அனுபவங்கள் மூடர்களுக்குத்தான் பாடம் புகட்டுவதாக இருக்கும்'' என்று கூறினார்.


உடனே சர்ச்சில், ''நண்பரே உங்களுக்குப் பயன்படும் என்றல்லவா நான் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்றார். - நெ. இராமன்



# என்னைக் கண்டுபிடி

**1861**-இல் பிறந்தேன். ஒரு புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானியாக உயர்ந்தேன். நான் மெட்ரோபொலிடன் இன்ஸ்டிட்யூட்டில் (வித்யாசாகர் கல்லூரி) படித்து வந்தபோது, கில்கிரைஸ்ட் பரிசு பெற்று, இங்கிலாந்துக்கு மேல்படிப்புக்குச் சென்றேன். எடின்பர்க் சர்வகலாசாலையில் விஞ்ஞான டாக்டர் பட்டம் பெற்று, 1881 இல் இந்தியா திரும்பிய பொழுது எனக்கு வயது 27. பின்னர் ஜகதீஷ் சந்திர போஸ் ஆராய்ச்சிக் கூடத்தில் சிறிது காலம் பணிபுரிந்தேன். பிறகு கொல்கத்தா சர்வகலாசாலையில் ரஸாயனப் பேராசிரியராகப் பணியாற்றினேன்.

நன்கு பரிச்சயமான அடிப்படை மருந்துகளும் மாத்திரைகளும் இறக்குமதி செய்யப்பட்டு அதிகவிலையில் நம் நாட்டில் விற்கப்படுவதைக் கண்ட நான், எளிய மக்களுக்கு உதவ, வங்காள ரஸாயன மருந்து தயாரிக்கும் கூடம் (முதல் சுதேசி மருந்துக் கம்பெனி - தி பெங்கால் கெமிக்கல் அண்ட் பார்மாசூடிக்கல் வொர்க்ஸ்) ஒன்றை ஆரம்பித்தேன். பின்னர் பலர் இதைப் பின்பற்றினர்.



பாதரஸ நைட்ரேட், அதன் இதர மாற்றுப் பொருட்கள் நான் கண்டுபிடித்ததை உலக நாடுகள் பலவும் பாராட்டின. நம்முடைய முன்னோர்களின் ரஸாயன அறிவைக் கண்டு வியந்த நான் ''ஹிந்துக்களின் ரஸாயன அறிவின் சரித்திரம் (The History of Hindu Chemistry) என்ற ஆங்கில நூலை வெளியிட்டேன். அது பலரால் பாராட்டப்பட்டது. கொல்கத்தா ராஜதானிக் கல்லூரியிலிருந்து, 1916-ல் நான் ஓய்வு பெற்றதும், ஸ்ரீ ஆசுதோஷ் முகர்ஜியின் பல்கலை விஞ்ஞானக் கல்லூரியில், ரஸாயனப் பேராசிரியராகச் சேர்ந்து என்னுடைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்துவந்தேன்.

பின்னர் நான் இந்திய விஞ்ஞான மகாசபை, இந்திய ரஸாயன சங்கம் இவற்றின் தலைவராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஆங்கிலத்தில் ''வங்காள ரஸாயன விஞ்ஞானியின் வாழ்க்கையும் அனுபவங்களும்'' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதி என் சுயசரிதையை வெளியிட்டேன். இலக்கியப் பற்று கொண்டவன் ஆதலால், வங்காள இலக்கிய சம்மேளனத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

நான் வங்காள வெள்ள நிவாரண சேவையில் ஈடுபட்டதைக் கண்ட காந்திஜி என்னை 'வெள்ள நிவாரண மருத்துவர்' என நகைச்சுவையோடு பாராட்டினார். நான் 1944, ஜூன் 16 ம் தேதி உலக வாழ்க்கையிலிருந்து விடுபட்டேன். எனக்கு அப்போது வயது 83. இப்பொழுது நான் யார் என்று ஊகிக்க முடிகிறதா? நான் ஆச்சார்யா டாக்டர் பிரபுல்லா சந்திர ரே! (B.C.ரே)

யுவபாரதியிலிருந்து
தமிழில்: கே.ஆர்.கே

பிரேசில் சினி கதை

# நெட்டோ எழுதிய புத்தகம்

(2001) (இயக்குனர்: லெய்ஸ் போதான்ஸ்கி)

அப்பா எப்போதும் சிடுசிடுவென்று இருப்பார். அது நெட்டோவுக்குப் பிடிப்பதில்லை. மகனுக்கும் தந்தைக்கும் இடையே சுமுகமான உறவு இருக்கவில்லை. ஒரு நாள் நண்பர்களுடன் 'பிக்னிக்' போகக் கிளம்பிக் கொண்டிருந்தான். அப்பாவின் நச்சரிப்பு தாங்க முடியவில்லை. சீக்கிரமே வீட்டை விட்டுக் கிளம்ப நினைத்தான்.

''கையில் காசே இல்லாமல் வெளியே கிளம்புகிறாயே!'' - அவன் அப்பா கேட்டார். அன்று அவர் அவனுக்கு இன்னும் கைச் செலவுக்குப் பணம் தந்தபாடில்லை. அங்கிருந்து பிய்த்துக்கொண்டு போனால் போதும் என்ற முனைப்புடன் அவர் சொன்னது எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் பறந்தான் நெட்டோ.

தெருவில் இறங்கி நெடுந்தூரம் நடந்த பிறகுதான் அன்றைய செலவுகளுக்கு என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. பஸ்ஸுக்குப் பணம் வேண்டும். நீச்சல் குளத்திற்குக் கட்டணம் செலுத்தி உள்ளே செல்லவும் பணம் வேண்டும். இதற்கெல்லாம் என்ன செய்வது? பிச்சை எடுத்துக் காசு புரட்டிக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான் அந்த டீன் ஏஜ் பையன்.

எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் கையை நீட்டினான். பச்சாதாபப்பட்டுப் பலர் காசு போட்டனர்.

ஒரு இளம் பெண் டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர் ஒன்றில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்தாள். அவளிடம் சென்று பஞ்சப் பாட்டுப் பாடினான். அவளிடம் அவன் கேட்டது கொஞ்சம் பெரிய தொகைதான். அவள் அவனுக்கு ஒரு ரெஸ்டாரண்டில் உணவு வாங்கிக் கொடுத்ததோடு கைச் செலவுக்கும் பணம் கொடுத்தாள். கொஞ்ச நேரமே பேசிக் கொண்டிருந்தாலும் நெட்டோவை அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டது. தன் ஃப்ளாட்டுக்கு அழைத்துச் சென்றாள். அவர்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டது. இருவரும் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டார்கள். நெட்டோவுக்கு அந்தக் கூடல் அனுபவம் சிலிர்ப்பூட்டக் கூடியதாக இருந்தது.

அப்புறம் அங்கிருந்து கிளம்பி அவன் தன் நண்பர்களைச் சந்திக்கச் சென்றான். நீச்சல் குளத்தில் களேபரம் செய்தார்கள். தாங்கள் வழக்கமாகச் செல்லும் ரகசிய இடத்திற்கும் சென்றார்கள்.

வீடு திரும்பிய பின் தன் அறையில் படுத்து நன்றாக உறங்கினான் நெட்டோ.

அடுத்த நாள் நெட்டோவின் தந்தை ஒரு ப்ரவுன் சுகர் பொட்டலத்தை அவன் தலையணைக்கு அடியில் கண்டெடுத்தார். உடனே அவர் ஒரு முடிவுக்கு



வந்தார். அந்த முடிவு அவர் மகன் வாழ்க்கையில் எத்தனை பெரிய ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அவர் அப்போது அறியவில்லை. அவர் எடுத்தது அவசர முடிவு. ஆனால் தன் மகன் மேல் கொண்ட அன்பின் காரணமாகத்தான் அவர் அந்த முடிவுக்கு வந்தார்.

அன்று நெட்டோ தன் அறையில் தரையில் படுத்தபடி பாட்டு கேட்டுக் கொண்டிருந்தான். அப்பா அறைக்குள் நுழைந்தார்.

''படுக்கையில் படுக்காமல் ஏன் தரையில் படுத்திருக்கிறாய்?''

''சும்மா படுத்திருக்கிறேன் அப்பா!''

''என் நண்பர் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரைப் பார்க்கச் செல்ல வேண்டும். நீயும் என்னுடன் வருகிறாயா?''

''அப்படியானால் நான்தான் காரை ஓட்டிக் கொண்டு வரு



எஸ். குரு

வேன்.'' - என்றான் நெட்டோ.

இருவரும் வீட்டின் வரவேற்பறைக்கு வந்தனர். அங்கே நின்றிருந்த மூவரிடம் 'இவன்தான்' - என்று ஜாடை காட்டினார் அப்பா. மூவரும் சூழ்ந்து கொண்டு, நெட்டோவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றார்கள்.

''யாரப்பா இவர்கள்? என்னை எங்கே கூட்டிச் செல்கிறார்கள்?'' கத்தினான் நெட்டோ.

''நீ போதைப் பொருள்களுக்கு அடிமை ஆகிவிட்டாய்!''

''இல்லை அப்பா, இல்லை!'' கதறினான் நெட்டோ.

ஆனால் 'அவர்கள்' அவனைத் தரதரவென்று இழுத்துச் சென்று மருத்துவமனை வேனில் ஏற்றினார்கள். வண்டி புறப்பட்டது.

தான் மனநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பது சீக்கிரத்திலேயே அவனுக்குப் புரிந்துவிட்டது. அப்பா இப்படிச் செய்துவிட்டாரே என்று எண்ணி எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தான் நெட்டோ.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மறுநாள் தலைமை மருத்துவரிடம் தன் உண்மை நிலை பற்றிப் பேச விரும்பினான் நெட்டோ. மருத்துவர் தன்னைப் பரிசோதித்து முடித்துவிட்ட பிறகு அவன் பேச்சை ஆரம்பித்தான்.

''டாக்டர் நான் நார்மலான ஆசாமிதான். அப்பா தப்பு செய்துவிட்டார். நான் போதைப் பொருள்களுக்கு அடிமை ஆனவனில்லை...''

டாக்டர் அவனை சட்டை செய்யாமல் அப்பால் போய்விட்டார். நெட்டோவுக்கு ஏமாற்றமாக இருந்தது. எப்போது அவன் டாக்டரிடம் பேச முயன்றாலும் அவன் முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. அவன் தடுக்க நினைத்தபோது அவனுக்கு வலுக்கட்டாயமாக மருந்தும் மாத்திரைகளும் கொடுக்கப்பட்டன.

அன்று ஆஸ்பத்திரியில் சாப்பாட்டுக் கடை நடந்து கொண்டிருந்தது...

ஒரு நோயாளி கையில் ஒரு செய்தித்தாளை வைத்துக் கொண்டு படிப்பதாகப் பாவலா செய்து கொண்டிருந்தான். குள்ள தாமஸ் நெட்டோவிடம் அந்தப் பேப்பரை வாங்கித் தருமாறு கேட்டான். நெட்டோ அந்த செய்தித் தாளை அவனிடமிருந்து எடுத்தவுடனேயே அவன் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினான். உச்சக் குரலில் கத்தி, கையில் கிடைத்த பொருள்களை எல்லாம் எடுத்து வீசத் தொடங்கினான். பல நோயாளிகள் தாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டுகளை எடுத்து வீசினார்கள். பலர் உணவுப் பொருள்கள் வைத்திருந்த பாத்திரங்களில் இருந்து பண்டங்களை இறைக்கத் தொடங்கினர். ஒரு சின்ன சம்பவம் பெரிய சண்டையில் முடிந்தது. வார்டு



பாய்கள் ஓடோடி வந்தார்கள். முரட்டுத்தனமாக நோயாளிகளைத் தாக்கினார்கள்.

ஒரு முறை டாக்டர் கொடுத்த மாத்திரைகளை விழுங்குவது போல நடித்துப் பின் கையேந்தித் துப்பிவிட்டான் நெட்டோ. டாக்டர் ஒருவர் இதைக் கண்டுவிட்டார். அவனைத் தரதரவென்று இழுத்துச் சென்று ஊசி குத்தினார்.

''நீ மருந்தாக உட்கொள்ளாவிட்டால், அது உன் உடம்பில் ஊசியாகச் செலுத்தப்படும்'' என்று டாக்டர் கோபத்துடன் சொன்னார்.

அவனைப் போல ஒரு சிலர் அங்கு இருந்தார்கள். மனநிலை சரியாக இருந்தும் சந்தர்ப்பவசத்தால் அந்த மருத்துவமனையின் கைதிகளாக்கப்பட்ட அபாக்கியவான்கள் அவர்கள். அவர்களில் ஒருவன் நெட்டோவிடம் அனுசரணையாகப் பேசினான்.



''முரட்டுத்தனமே கூடாது! டாக்டர்களை எதிர்த்துக் கொள்ளாதே! அவர்கள் கொடுக்கும் மாத்திரைகளைத் தூக்கி எறியாதே. மருந்துகளைக் குடிக்காமல் அடம் பிடிக்காதே! சமத்துப் பிள்ளையாக நடந்துகொள்ளாவிட்டால், உன்னை உண்மையிலேயே பைத்தியமாக ஆக்கிவிடுவார்கள். இங்கு தரப்படும் மாத்திரைகள் பசியைக் கிளறிவிடும். உனக்கு நன்றாகச் சதை போட்டுவிடும். உன்னைப் பார்க்க வரும் உன் வீட்டார் சந்தோஷப்படுவார்கள். ஆனால் அது செயற்கைச் சதை என்று அவர்களுக்குத் தெரியாது!'' என்றான் அந்த சக நோயாளி.

## கம்பரின் திறமை

ஒரு முறை கம்பரும் சோழ மன்னரும் ஆற்றங்கரையோரம் நடந்து சென்றனர். அப்போது கம்பர் காலில் பட்ட ஆற்று நீரை அள்ளிக் குடித்தார்.
அதைப் பார்த்த சோழமன்னன் ''கம்பரே என் காலில் விழுந்த நீரைத்தானே பருகினீர்'' என்றார். உடனே கம்பர், ''நீரே என் காலில் விழுந்தால் நான் என்ன செய்வது?'' என்று சிலேடையாகக் கூறினார்.

- நெ. இராமன்

''மருத்துவமனையில் நம் மகன் எப்படி 7இருக்கிறானோ?'' - நெட்டோவின் அம்மா கவலைப்பட்டாள்.

''எல்லாம் அவன் நல்லதுக்குத்தான் செய்திருக்கிறேன். போதைப் பொருள்கள் எடுத்துக் கொள்பவர்களை ஆரம்பத்திலேயே கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் சீரழிந்து விடுவார்கள். முடிவு அபாயகரமாக இருக்கும்'' - என்றார் நெட்டோவின் அப்பா.

நெட்டோவைச் சுற்றிலும் இருந்தவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள். அவர்களது செயல்கள் பல சந்தர்ப்பங்களில் வக்கிரமாக இருந்தன. மனநிலை பாதிப்புக்கு ஆளாகாத தன்னை இப்படிப் பைத்தியங்களோடு உட்கார வைத்துவிட்டது அப்பாவின் அவசர புத்திதான் என்று எண்ணி அவஸ்தைப்பட்டான் நெட்டோ. சக நோயாளிகளின் செயற்கைத் தனமான பேச்சும் சிரிப்பும், அழுகையும் அவனுக்கு சலிப்பை ஏற்படுத்தி மனநிம்மதியைக் கெடுத்தன.

'அப்பா கொஞ்சம் என்னிடம் மனம் விட்டுப் பேசி இருந்தால் நன்றாக இருந்திருக்குமே! நான் போதைப் பொருள்களுக்கு அடிமை இல்லையே - என்று எண்ணிப் புழுங்கினான் நெட்டோ.

நெட்டோவின் அம்மாவும் அப்பாவும் சகோதரியும் மருத்துவமனைக்கு வந்தார்கள்.

''இன்னும் எத்தனை நாள் நெட்டோ இங்கு இருக்க வேண்டும் டாக்டர்?'' - தலைமை மருத்துவரைக் கேட்டார்கள்.

''எத்தனை நாட்களா? இன்னும் பல மாதங்கள் நெட்டோ இங்கு இருக்க வேண்டும். போதைப் பொருள்களை மறக்கச் சிகிச்சை அளித்து வருகிறோம். இங்கு இருக்கும் நோயாளிகள் முரண்டு செய்வார்கள். வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று அடம் பிடிப்பார்கள். ஆனால் நீங்கள் எதையும் காதில் போட்டுக் கொள்ளக் கூடாது. நாங்கள் செய்வது எல்லாம் நோயாளிகளின் நன்மைக்குத்தான்!'' - என்றார் தலைமை மருத்துவர்.

பெற்றோர்கள் பார்ப்பதற்காக நெட்டோவை அழைத்து வந்தார்கள்.... ''நீ முன்னை விடச் சதை போட்டுப் பார்க்க நன்றாக இருக்கிறாய் நெட்டோ!'' அம்மா சந்தோஷப்பட்டாள்.





''எல்லாம் மாத்திரைகள் செய்யும் வேலை அம்மா! எனக்கு இங்கிருக்கப் பிடிக்கவில்லை'' - சிணுங்கினான் நெட்டோ.

''டாக்டர் பேச்சைக் கேட்டு நடந்து கொள். எல்லாம் உன் நன்மைக்கே'' - என்றாள் அம்மா.

வார்டு பாய் ஜானுக்கு நெட்டோவின் சண்டித்தனத்தைக் கண்டால் பிடிக்காது. நெட்டோவின் விஷயத்தில் ஜான் கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டான். ஒரு சந்தர்ப்பத்தில் நெட்டோவை அவன் ஒரு இருட்டான தனி அறையில் பூட்டியபோது நெட்டோவுக்கு மனப் புழுக்கம் அதிகரித்தது.

நெடுநேரம் ஜான் அறைக் கதவைத் திறந்துவிடவே இல்லை. பல மணி நேரங்கள் சென்ற பிறகு ஜான் மெல்லக் கதவைத் திறந்தான். நெட்டோ அசந்து போய்த் தூங்கிக் கொண்டிருந்தான். அறைக்குள்ளிருந்து துர்நாற்றம் வீசியது. பேண்ட்டிலேயே மலம் கழித்திருந்தான் நெட்டோ. ஜானுக்கு ஒரு குரூரத் திருப்தி ஏற்பட்டது. அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

ஒரு நாள் பகல் உணவு வேளையின்போது எல்லோரும் சாப்பாட்டு அறையில் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் சாப்பிடுவது போல் நடித்துவிட்டு நெட்டோ மெல்ல அங்கிருந்து நழுவினான். பின்புறக் கதவு ஒன்று திறந்தபடி இருந்தது. அதன் வழியாக வேகமாக வெளியேறிய நெட்டோ, பின்பு

வெறி பிடித்த மாதிரி ஓடத் தொடங்கினான்.

இதற்குள் மன நோயாளி ஒருவன் கண்காணிப்பாளர்களிடம் நெட்டோவின் வெளியேற்றம் பற்றிச் சொல்லிவிட்டான். வார்டுபாய்கள் நெட்டோவை விரட்டிச் சென்றார்கள். அவன் பிடிபட்டான். தரதர வென்று இழுத்து வந்தார்கள். டாக்டர் ஒருவர் மயக்க ஊசி போட்டார்.

குறுகிய தனி அறையில் நெட்டோ அடைக்கப்பட்டான்.

இன்னொரு முறை அவன் முரட்டுத்தனம் காட்டிய போது அவனுக்குத் தலையில் கரண்ட் வைத்து 'ஷாக் ட்ரீட்மெண்ட்' கொடுத்தார்கள்.

பலமுறை உணர்வு இழக்கும் ஊசி, போடப்பட்டதையும், மின்சார சிகிச்சை அளிக்கப்பட்டதையும் நெட்டோ மன்னிக்க முடியாத அராஜகச் செயல்களாகக் கருதினான். அவை எல்லாம் தேவை இல்லாத துஷ்பிரயோகங்கள் என்று நினைத்தான்.

'இந்த நரகத்தில் இருந்து எனக்கு விடுதலையே இல்லையா?' - என்று புழுங்கினான். அவனுக்குள் வெறி வளர்ந்தது...

ஒரு நாள் இரவு!

திடீரென்று விழிப்பு வந்தது! நர்ஸுகள் ஓய்வு எடுக்கும் அறைக்குச் சென்றான்... நெட்டோவுடன் சக நோயாளி ஒருவனும் வந்தான்.

மயக்க மருந்தை ஒரு கைக்குட்டையில் கொட்டி, படுத்திருந்த பருத்த நர்ஸின் மூக்கில் வைத்து அழுத்தினான் நெட்டோ! ஒரு பக்கெட்டை எடுத்துக் கொண்டான். அதில் பல டிஸ்போஸபிள் சிரிஞ்சுகளையும் ஊசி மருந்துகளையும் கொட்டி, தீக்குச்சியை உரசித் தீ வைத்தான். குபுகுபுவென்று தீப்பற்றிக் கொண்டது! எங்கும் புகை சூழ்ந்தது!

டாக்டர்களும், வார்டுபாய்களும் நர்ஸுகளும் ஓடோடி வந்தார்கள்.

ஒரே களேபரம்!

நெட்டோவின் தோழன் ஜார்ஜ் அங்கு வந்து பார்த்துவிட்டுக் கத்தத் தொடங்கினான்.

''நர்ஸ்! சீக்கிரம் வா! நெட்டோவைக் காப்பாறு!''

வார்டு பாய் ஜான் அங்கு வந்தான்.

''அவன் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து விட்டான். இனிப் பிரயோசனமில்லை.''

''நர்ஸ்! சீக்கிரம் வா!'' - ஜார்ஜ் கத்திக் கொண்டே இருந்தான். கடைசியில் ஒரு நர்ஸ்தான் பதறிப் போய் ஓடிவந்தாள். அந்த அறையில் இருந்து நெட்டோ மீட்டு எடுக்கப்பட்டான்.

ஒரு வழியாக நெட்டோவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் முடிந்து அவன் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டான்.

அம்மா அவனைக் கட்டிப் பிடித்து கதறி அழுதாள்...



நடந்ததை எல்லாம் நினைத்துப் பார்க்கப் பார்க்க அம்மாவின் மனதில் துக்கம் மேலோங்கியது. சகஜமாக இருந்த பையன் மனநல மருத்துவமனைக்கு அழைத்துப் போக வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டதே என்று அவள் புழுங்கினாள். தாயாரின் அணைப்பும், கண்ணீரும் நெட்டோவுக்கு ஆறுதலாக இருந்தன. நரகத்திலிருந்து மீண்டு அவன் இப்போது தாயாரிடம் வந்து சேர்ந்துவிட்டதை எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

பள்ளிக்குப் போகச் சொன்னாள் அம்மா. பள்ளிக்கூடம் செல்வதைத் தவிர்க்க நினைத்தான் இவன். மனநோயாளி என்று முத்திரை குத்தியாகிவிட்டது. பள்ளிக் கூடத்திற்குச் சென்றால் சகமாணவர்கள் பரிகசிக்கக்கூடும். மனநல மருத்துவமனை பற்றியும், அங்கு அவனுக்கு நேர்ந்த அனுபவங்களைப் பற்றியும் தோண்டித் துருவிக் கேட்கக் கூடும். நெட்டோ அதையெல்லாம் தவிர்க்க நினைத்தான்.

அம்மா, அவன் போக்கில் அவனை விட்டுப் பிடிக்க எண்ணினாள்.

''சரி! நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம். வேலைக்குப் போ!'' - என்றாள் அம்மா.

அவன் சகோதரியின் சிபாரிசால் ஒரு சேல்ஸ் ரெப்ரசண்ட்டேடிவ் வேலை கிடைத்தது. அதற்கான பயிற்சி முகாமுக்கும் சென்று வந்தான்.

இடையில் ஒரு முறை தன் பள்ளித் தோழன் ஒருவன் வீட்டுக்குச் சென்றான். அந்த நண்பன் எந்த பேதமும் காட்டாது நட்போடுதான் பழகினான். ஆனால் அந்த நண்பனின் தாயாருக்கு நெட்டோ அங்கு வந்தது பிடிக்கவில்லை. மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவனோடு தன் மகன் நட்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்தாள். அதை வெளிப்படையாகத் தன் மகனிடம் சொல்லவும் செய்தாள்.

உள்ளே கொஞ்ச நேரம் தன் தாயாரிடம் பேசிக்

## பாடல்

புகழ் வாய்ந்த பாடல்கள் புனைபவரான மோகார்டோவைக் கண்ட ஒரு இளைஞன் தமக்கும் பாடல் புனையக் கற்றுத்தரும்படி வேண்டினான். அதற்கு அவர் ''நீ மிகவும் சிறியவனாக இருக்கிறாய். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துவா பார்க்கலாம்'' என்றார். உடனே அந்த இளைஞன் ''நீங்கள் மட்டும் ஏழு வயதிலேயே பாடல் புனையக் கற்றுக் கொண்டு விட்டீர்களே?'' என்று எதிர் கேள்வி கேட்டான்.

அதற்கு அவர் ''தம்பி! ஏழு வயதில் நான் பாடல் இயற்றியது உண்மைதான்! ஆனால் நான் உன்னைப் போல அதற்காக யாரையும் தேடி அலையவில்லை தெரியுமா?'' என்றார். வெட்கிப் போன இளைஞன் வேறெதுவும் கேட்காமல் வீடு திரும்பினான்.

**புதுவை. கே.என். மகாலிங்கம்**

கொண்டு இருந்து விட்டு வந்த அந்த நண்பன் திரும்பி வந்த போது நெட்டோவின் முகத்தைப் பார்க்கக் கூசினான்.

''இனிமேல் இங்கே வராதே நெட்டோ. என் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை'' - தயங்கித் தயங்கி சொன்னான். நண்பனின் வார்த்தைகள் கத்தி மாதிரி பாய்ந்தன. நெட்டோவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

முன்னொரு சமயம் நண்பர்களுடன் அவன் 'பிக்னிக்' போனபோது கைச் செலவுக்காக அவன் கையேந்தினான் அல்லவா? அப்போது பணம் தந்து, கட்டித் தழுவி முத்தமிட்ட 'அந்த'ப் பெண்ணை அவன் மீண்டும் கடைத் தெருவில் சந்தித்தான்.

''ஹாய்! நெட்டோ!'' - சொல்லிவிட்டு அந்தப் பெண் அவன் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தாள். அவ்வளவுதான். அதற்கப்புறம் அவள் அவனை சட்டை செய்யவே இல்லை. தன் ஆண் ஸ்நேகிதன் ஒருவனோடு பேசியபடி அவள் கடையை விட்டுப் புறப்பட்டுப் போனாள். நெட்டோவுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் இன்னும் இரண்டொரு வார்த்தைகள் தன்னிடம் பேசியிருக்கக் கூடாதா என்று நினைத்தான். மனித உறவுகள் ஆழமே அற்றவையா? தற்காலிகமானவைதானா? என்று சிந்தித்தான்.

**கல்வெட்டுகள்**

கோயிலுக்கு நியமம், நகரம், கோட்டம், பள்ளி என்ற பெயர்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தளி, தானம் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. சிவன் கோயிலை ஈச்சரம் என்றும், விஷ்ணு கோயிலை விண்ணகரம் என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

- நெ. இராமன்

பல கசப்பான அனுபவங்களால் அவன் மனதில் ஒரு வெறி வளர்ந்தது. மனநல மருத்துவமனை அனுபவங்களை அவன் மனம் அசைபோட்டுப் பார்த்த போது, உன்மத்தம் பிடித்தவன் போல் ஆனான். அதன் வடிகாலாக அவனிடமிருந்து வன்முறைச் செயல்கள் வெளிப்பட்டன.

ஆனால் இத்தனை வெறித் தனத்துக்கும் மத்தியில் அவன் ஒரு காரியம் செய்தான். தன் வாழ்க்கை அனுபவங்களை ஒரு புத்தகமாக எழுதினான். மனநல மருத்துவமனையின் உள் உலக மர்மங்களைப் பிட்டுப் பிட்டு வைத்தான்.

''பெற்றோர்களே! உங்கள் வீட்டு டீன் ஏஜ் பையன்கள் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அசாதாரணமாக நடந்து கொண்டால் உடனே வண்டியில் ஏற்றிப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைத்து விடாதீர்கள். கொஞ்சம் மனம் விட்டுப் பேசுங்கள். நல்ல யோசனைகளைச் சொல்லி திருத்த, கொஞ்சம் முயற்சி செய்யுங்கள். மனநல மருத்துவமனை என்பது சொர்க்கபுரி அல்ல'' என்று நெட்டோவின் புத்தகம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ●



ஒரு நாகத்தின் பரபரப்பூட்டிய பழிவாங்கல்!

# கதைதான்

நாகப்பாம்பு பழிவாங்குவதைப் பற்றி நாம் கதைகளில் படித்திருப்போம். ஆனால் உண்மையிலேயே பன்னா நகரில் ஒரு நாகப்பாம்பு பழிவாங்கியதைக் கண்டு மக்கள் வியந்து பூஜித்தனர் என்றால் நம்ப முடியாதுதான். ஆனால் உண்மையில் நடந்த சம்பவம் இது.

இந்த நாகம் 900 வயதுடையது என்றும், தனது குட்டிகளைக் கொன்றதற்குப் பழிவாங்க ஒரு டிரைவரைக் கடித்தது என்றும், பூஜை வழிபாட்டுக்கு பின்னர் அதே டிரைவரின் மூலமாக பிழைக்க உபாயம் கூறியதாகவும் கூறப்படுகிறது. அப்படி நாகம் என்னதான் சொன்னது?



''டிரைவர் தன்னை எடுத்துச் சென்று திரிவேணியில் (அலகாபாத்) விட்டுவிட வேண்டும்.'' என்பதுதான்.

ஆறுமாதங்களுக்கு முன் சங்கர் என்பவர் தமது பெண்களுடன் புத்து மண் எடுத்துவர மாஞ்சி என்ற பகுதிக்குச் சென்றான். அவனுடைய ஒரு பெண் நாகதேவதையின் இரண்டு குட்டிகளை மிதித்துவிட்டாள். உடனே குட்டிகள் இறந்தன. இதற்குப் பழிவாங்க நாகம் சங்கரின் வீட்டைத் தேடி வந்து விட்டது. வீட்டிற்கு வந்த நாகம் ஜீப்பில் மறைந்துகொண்டது. டிரைவர் மதன் வண்டியை எடுக்கும்போது பாம்பை மிதித்துவிட்டான். சீற்றமடைந்த நாகம் டிரைவர் மதனைக் கடித்துவிட்டது.

மதனை உறவினர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். என்ன செய்தும் மதனைக் காப்பாற்ற முடியவில்லை. நகரின் கல்லூரியில் எழுத்தராகப் பணியாற்றிவரும் பர்வத்ராஜ் என்பவரை அழைத்து வந்து நிலைமையை விளக்கினர். அவரும் மந்திரங்களை ஜபித்து பாம்பின் விஷத்தை நீக்க முயன்றார். அப்போதுதான் டிரைவர் மதன் ஆவேசம் வந்து, பாம்பின் நிலையை விளக்கினான். ''என்னுடைய குட்டிகள் கொல்லப்பட்டுவிட்டன. அதனால் நான் உங்களை விடமாட்டேன். பழிதீர்ப்பேன்'' மதனின் ஆவேசம் அடங்கியது.

பின்னர் 15 கி.மீட்டரில் உள்ள சூரிய பிரகாஷ் திவாரியிடம் சென்றனர். அவர் பாம்புக் கடியை குணப்

# ஆனாலும் நிஜம்தான்!

படுத்துவதில் வல்லவர். மறுபடி இங்கும் மாந்திரீகம்... மதன் மூலமாக ஆறுமாதத்திற்கு முன்னர் நடந்த சம்பவத்தை நாகதேவதை இங்கும் விவரித்தது. ''எனது வயது 900 ஆக இருக்கலாம்'' என்று கூறிய நாகத்தை மாந்திரீகர் ஜோகிபாபா சமாதானப்படுத்தினார். அவர் கங்கா ஜலத்தின் மீது சத்தியம் செய்து, மன்னித்து விட்டு விடுமாறு கூறினார். அவர் நாகதேவதையை அலகாபாத்தில் திரிவேணியில் விட்டுவிடுவதாகவும் உறுதி அளித்தார். இந்த உறுதிமொழிக்குப் பின் நாகம் சாந்தமடைந்ததாகத் தெரிகிறது.

பின்னர் உறவினர்கள் மதனை தங்கள் கிராமத்திற்கு அழைத்து வந்து பகல் வேளைகளில் தூங்க விடாமல் பார்த்துக் கொண்டனர். அப்படி இருந்தும் மதனின் கால்கள் வலுவை இழந்தன. மதன் கீழே விழுந்ததால் மண்டையில் அடிபட்டது. ''எனது கண்கள் பார்வையை இழக்கின்றன. எல்லாம் மங்கலாகத் தெரிகின்றன'' என்று கூறிய மதனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர்.

எல்லா விவரங்களையும் கேட்டு அறிந்த டாக்டர், மதனை குவாலியரில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஆலோசனை கூறினார். ஆனால் மதன் நினைவிழந்து விட்டதை அறிந்த டாக்டர், மருத்துவமனையில் சேர்த்துக் கொண்டார். உறவினர்கள் மீண்டும் மாந்திரீகம் செய்யும் முயற்சியில் இறங்கினர். அந்த வட்டாரத்தில் புகழ்பெற்ற சந்தோஷ் மகாராஜ், மருத்துவமனையை அடைந்தார். அவர் மதனின் தலையில் கையை வைத்து அழுத்தினார். இப்போது மதன் தெளிவு பெற்றான்.

பின்னர் உறவினர்கள் மதனை சந்தோஷ் மகாராஜின் ஊருக்கே அழைத்துச் சென்றனர். அங்கு பூஜையும் அர்ச்சனைகளும் நடந்தன. மந்திரங்களின் பலத்தால் இடுப்பிற்குக் கீழே உள்ள விஷம் இறங்கியது. அப்போது அங்கு வைத்திருந்த பால் கருப்பு நிறமடைந்தது. நாகதேவதை மதன் மூலமாகப் பேசியது: ''15 நாள் கடந்த பின்னர் நான் அலகாபாத் செல்ல மறுபடியும் வருவேன். நீங்கள் ஒரு பானையை தயாராக வைத்திருங்கள். நான் அதற்குள் புகுந்துகொள்வேன். நீங்கள் பானையின் வாயை சிவப்புத் துணியால் மூடி கட்டி விடுங்கள். அலகாபாத் எடுத்துச் சென்று கங்கையில் சேர்த்துவிடுங்கள். மதன் அந்த சமயம் இருக்க வேண்டும்'' - இவ்வாறு நாகதேவதை கூறியது.

நாகம் கூறியபடியே மே மாதம் 10 ஆம் தேதியும் வந்தது. ஒரு மரத்தின் மீதிருந்து நாகம் ஒரு தொட்டியில் விழுந்தது. மீண்டும் மதன் மூலமாக ''நான் தண்ணீரில் விழுந்து கிடக்கிறேன்'' என்றும் கூறிவந்தது. நாகம் நீரில் நீந்திக் கொண்டிருப்பதை சங்கரும் பார்த்தார். உடனே மதன் நாகதேவதையைக் கையில் எடுத்து பானைக்குள் வைத்தான். அது கூறியிருந்தபடி சிவப்புத் துணியில் பானையின் வாய் கட்டப்பட்டது. இதன் பின் மதன் மூலமாக நாகதேவதை பேசியது...

கடந்த சில வாரங்களாக பன்னா நகரில் நாகதேவதை, மதன், சங்கர் பற்றிய பேச்சு தான். இப்போது நாகம் பானைக்குள் அடங்கி விட்டதை அறிந்த மக்கள் சங்கரின் வீட்டில் கூடினர். நாகதேவதையை நேரில் தரிசித்து அதன் அருளைப் பெற கூட்டம் திரண்டது. 12.5.04ல் நாகத்தை பூஜை வழிபாட்டுக்காக எடுத்து வந்தனர். பூஜை விமரிசையாக நடந்தது. நாகதேவதையை பானையுடன் அலகாபாத் எடுத்துச் சென்று கங்கையில் விட்டுவிட முடிவானது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வழிபாட்டுக்கும் தரிசனத்திற்கும் மக்கள் கூட்டம் அலைமோதியது. அங்கே மாந்திரீகர்களுக்கும் தட்சிணைக்கும் குறைவில்லை.

இந்தச் சம்பவத்தைப் பற்றி சில நாளிதழ்கள் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளன. அவற்றில் சில....

''பாம்பின் குழந்தைகள் காலில் மிதியுண்டு இறந்தன. மிதித்த பெண்மணியைப் பழிவாங்குவதுதான் விரோதி என்ற முறையில் பாம்பின் இயல்பு. குட்டிகளை மிதித்துக் கொன்ற பெண்ணைப் பழிவாங்காமல் டிரைவர் மதனை பாம்பு கடித்தது ஏன்?''

''பானையில் உள்ள சர்ப்பம் பழிவாங்க வந்த சர்ப்பம் தான் என்பதற்கு என்ன ஆதாரம்? யாராவது ஒரு பாம்பாட்டியிடமிருந்து வாங்கிவரப்பட்டதா?''

''நாகதேவதை கூறியது போல் சர்ப்பம் 30.4.04 அன்று வந்திருக்க வேண்டும். அது 10 நாள் தாமதித்து வரக் காரணம் என்ன!

இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டாலும் மக்கள் கூட்டம் கூடுவது நின்றபாடில்லை. காணிக்கையாக - பணம் போடப்படுவதும் நின்றபாடில்லை.

**செய்தி: பாஸ்கர் மற்றும் நவபாரத் ஹிந்தி நாளிதழ்கள் - ஜபல்பூர்**

**தமிழில் தியாகி - டி.எஸ். ராஜுசர்மா.**

அறிவாளிகளின் புதிய சிந்தனை


# தாயகம் நோக்கி...

**சே**த்தன் ராகவன் உற்சாகத்தில் துள்ளுகிறார். வாயைப் பிளக்க வைக்கும் சம்பளத்துடன் உள்ள பணி, மூன்று அறைகளுடன் இருப்பிடம் மற்றும் கம்பெனியின் கார் என வசதிகள்.

ஆனால் இந்த கலிஃபோர்னியா வாசி தன் நண்பர்களுடனும் குடும்பத்தாருடனும் இருக்கப் போவதை எண்ணி குதூகலிக்கிறார்.

ஆம்! அவர் பெங்களூருக்கு வரப்போகிறார்.

''ஒருநாள் நாங்கள் திரும்பிப் போவோம் என்பது எங்களுக்குத் தெரியும்'' என்கிறார் ராகவன். அவர் மனைவி, சரிதா ஆம் என்று தலையசைக்கிறார். இந்தியா வர ஒருவழி பய



ணச்சீட்டிற்கு அவர்கள் ஏற்பாடுகள் செய்கின்றனர். அவர்கள் மட்டுமா என்ன?

கலிஃபோர்னியாவின் பொதுக் கொள்கைக் கூட்டமைப்பு எடுத்த ஆய்வில், வெளிநாட்டில் பிறந்த 40 விழுக்காடு மக்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பச் செல்ல நினைப்பதாகச் சொல்கிறார்கள்.

பெர்கலியில், கலிஃபோர்னிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அன்னா லீ சாக்சேனியன், கலிஃபோர்னியாவின் சிலிகான் (மென்பொருள்) பள்ளத்தாக்கு இப்போது இந்தியாவின் நகரங்களுடன் சேர்வதாகக் கூறுகிறார்.

''எதிர்காலத்தில் மற்ற நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் இம்மாதிரியான மூளை சுழற்சி விரிவடையும்'' என்கிறார் அவர். ''அமெரிக்காவில் பொருளாதார வாய்ப்புகள் இருப்பினும் கொள்கை ரீதியான சங்கடங்களும் உண்டு. வியாபாரம், குடிபெயர்வு, கண்டுபிடிப்பு சம்பந்தப்பட்ட காப்பு உரிமைகள் எல்லாம் வரையரைக்குட்பட்டவையே! குறிப்பாக பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில்தான் திறமையும் தொழில்நுட்பமும் உள்ளன. இதுதான் இன்றைய புதிய உண்மை நிலை'' என்றும் சொல்கிறார்.

இந்தியாவிற்கு மீண்டும் குடியேறுவது என்பது 'சமீபகால நிகழ்வு' தான் என்று கலிஃபோர்னியாவில் தலைமையகத்தைக் கொண்ட, இந்தியாவில் பணிகளைத் தேர்ந்தெடுக்கும் நிறுவனமான நெனகரி டாட்காமின் சுஷீல் மிக்சந்தானி கூறுகிறார்.

மேலும் அவர் ''தாயகம் திரும்புவோர் பெரும்பாலும் பணியிலிருந்து நீக்கம் பெற்றவர்களோ அல்லது சில ஆண்டுகளுக்குப் பின் செல்லலாம் எனக் கருதியவர்களோ தான்...'' என்கிறார்.

இந்தியாவில் பணிகள் ஈர்ப்புக்குக் காரணம் மூன்று என்கிறார் மிக்சந்தானி. கணினி விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்தில் இந்தியாவில் கிடைக்கின்றனர்... அடுத்து அமெரிக்க நிறுவனங்களுக்கு மிகச் சுலபமான தொலைதொடர்பு வசதிகள், செலவைக் குறைக்க போட்டியின் அழுத்தம் - இவையே.

'இந்தியாவிற்குத் திரும்புவோம்' என்ற தொடர் கருத்தரங்குகளை சிலிகான் இண்டியா இதழின் மேலாண்மை ஆசிரியர் கார்த்திக் சுந்தரம் சென்ற ஆண்டு நடத்தினார்.

அமெரிக்க வாழ் இந்தியர்கள் அநேகம்பேர் இந்தியா திரும்புவதைப் பற்றி கனவு காண்கின்றனர். ஆனால் அச்சப்படுகின்றனர். அந்த மாறுதலை எப்படிச் செய்வது எனத் தெரியாமல் இருக்கின்றனர்.


தன்னுடைய கூட்டங்கள் மூலமாக வழிகளைத் தேடவும், ஐயப்பாடுகளை நீக்கவும் ஏற்பாடு செய்தார். இருநகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியானது, அமெரிக்காவெங்கும் விரிவுபடுத்தப்பட்டது. அதேபோல் அரங்கம் கொள்ளாமல் கூட்டமும் அலைமோதியது.



வெளிநாடுகளில் பிறந்தோர் தாயகம் திரும்ப விரும்பும் அதே நேரத்தில், அமெரிக்க நிறுவனங்களோ வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பை விரிவுபடுத்த ஆர்வம் கொண்டுள்ளன.

மைக்ரோசாஃப்ட், இன்டெல், ஆரக்கிள் கார்ப்பரேஷன் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் அவர்களது அலுவலகங்களை நிர்வகிக்க திறமைசாலிகளைத் தேடுகின்றன.

''முன்பெல்லாம் எவை முக்கியச் செயல்கள் என எண்ணியிருந்தனரோ அவற்றை வெளியிலிருந்து




கொண்டு வரவும், பிற நாட்டிலிருந்து பெறவும் விருப்பம் உள்ளவர்களாக உள்ளனர்'' என்று ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் தெற்கு ஆசிய ஊக்குவிப்பு அமைப்பின் இயக்குனர் ரஃபீக் தொசானி கூறுகிறார்.

'முன்னேறிய நாடுகளின் பொருளாதாரத்திற்கு சேவைப்பணிகள் முக்கியமானது என்றாலும், அவை வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புகள் பெரும் அளவில் இருக்கும்' என்று எழுதுகிறார் அவர்.

'அமெரிக்க வணிகச் சூழலுக்கு ஏற்றாற்போல் செயல்படும் இந்தியத் தொழிலதிபர்கள், இந்தியாவுடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளனர். இம்மாதிரியான தொடர்புகள், உலக அளவில் வணிகத்தை வளரச் செய்து, பொருளாதாரத்தை பெங்களூர் போன்ற நகரத்தில் ஊக்குவிக்கிறது' என்கிறார் சாக்சேனா.

**தா**யகம் திரும்பி வர விரும்புவோரின் பட்டியலில் பெங்களூர் அவர்கள் விரும்பும் நகராக முதலிடத்தில்

உள்ளது. ஹைதராபாத்தும் புனேயும் அடுத்த இடங்களில் உள்ளன. நவீனமயமான இண்டெல் வளாகம் பெங்களூரில் இருப்பதே காரணம்! மேலும் அமெரிக்காவில் உள்ள தங்கள் அலுவலகங்களில் அளிக்கப்படுவதைப் போன்ற ஊதியம், ஊழியர் பயன்கள், முதலீட்டுப்பத்திரங்கள் என இன்டெல் நிறுவனம் தருகிறது.



இங்கே, கால் பதித்திருக்கும் நிறுவனம் இன்டெல் மட்டுமல்ல, ஐபிஎம், புதுடெல்லியில், இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி வளாகத்தில், இண்டியா ரிசர்ச் லேபரட்டரி எனும் நிறுவனத்தை 1998-லேயே ஆரம்பித்து விட்டது.

அமெரிக்காவையும் சேர்த்து, உலகெங்கிலும் உள்ள முக்கிய இடங்களில் நவீன நுட்பங்களைக் கொண்டு பணியாற்றுகின்றனர்.

''இன்று இந்தியாவிற்கு நீங்கள் திரும்ப எண்ணினால், உங்கள் வாழ்க்கையை நீங்கள் தியாகம் செய்யத் தேவையில்லை'' என்கிறார் ஆரகிள் கார்ப்பரேஷனின் மூத்த இயக்குனர் அமித் ஜாவேரி.

ஆயினும் இந்தியாவிற்குத் திரும்பும் அநேகர் வெளிநாட்டு பணிமையத்தின் அமெரிக்க நிறுவனங்களின் பணியையே விரும்புகின்றனர்.

அநேக இளம் குடும்பங்கள் இந்தியா திரும்பி, தங்கள் பெற்றோர் மற்றும் குடும்பத்தின் அருகில் இருப்பதையே கணக்கிடுகின்றனர். அமெரிக்க நிறுவனங்களுக்கோ, இந்தியாவிற்கு அவர்களது செயல்பாடுகளைக் கொண்டு வருவது என்பதுடன் மற்றும் பல காரணங்களுடன், செலவையும் குறைப்பதாகும்.

இந்தியாவில் செலவினங்கள் குறைவுதான்... ஆரக்கிள் நிறுவனத்தில், 24/7 பணி சூழ்நிலைதான். திரும்பி வருவதற்கு இதுவே முக்கிய தூண்டுகோல். ''இரு இடங்களிலும் அதுபோன்ற திறமை இருக்குமேயானால் வாடிக்கையாளர்களுக்கு வெற்றிதான்'' எனக் கூறுகிறார் ஜாவேரி.

''இந்தியாவுக்கு ஏன்?'' என மக்கள் இப்போதெல்லாம் கேட்பதில்லை. இந்தியாவில் அக்கறை காட்ட, அநேக அமெரிக்க நிறுவனங்களில் மேல்மட்டத்தில் தேவையான அளவில் இந்தியர்கள் இருக்கின்றனர். தங்கள் ஊழியர்களை தெரிந்த இடங்களிலும் பழகிய கலாசாரத்திலும் மறுவாழ்வு தர அநேக நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன. அமெரிக்க நிறுவனங்களின் பெரிய கவலை - எப்படி நிறுவனத்தின் கலாசாரத்தை சமப்படுத்துவது என்பது



தான். அமெரிக்க நிறுவன அதிகாரிகள் இதை கவனிக்காவிடில், ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்த முடியாது என்று கூறுகிறார் ஜாவேரி.

தாயகம் திரும்ப எண்ணுபவர்களில் அநேகர் அமெரிக்க குடியுரிமையோ அல்லது பச்சைநிற அட்டை வைத்திருப்பவர்களோதான். இவர்களுக்கு இரு இடங்களிலும் இருக்கும் வாய்ப்புள்ளது. ஆனால் எச்ஒன்பி விசா வைத்திருப்பவர்களுக்கு இம்மாதிரியான சலுகைகள் கிடையாது.

நியூ ஜெர்ஸியின் கணினிப் பொறியாளர் எச் ஒன்பி விசா வைத்துள்ள ஷாலினி ராய் கூறுகிறார்: ''என் வாழ்நாள் முழுவதும் இங்கு தங்கும் உத்தேசம் எனக்கில்லை. நான் திரும்பவே விரும்புகிறேன் இது என் வீடல்ல.''

''அமெரிக்கப் பொருளாதாரம் ஏற்றம் கண்டபோதிலும் வேலை வாய்ப்புகள் பெருகவில்லை'' என்கிறார் பிக்சந்தானி. ''இந்தியா திரும்ப முக்கியமான காரணம் அங்கே நல்ல வேலைகள் கிடைக்கின்றன; அமெரிக்க பொருளாதாரம் மீண்டு கொண்டிருந்தாலும், இந்தியா திரும்ப நல்ல காரணங்களும் உள்ளன''

''முடிவில், பணிகள் எங்கெல்லாம் உள்ளனவோ அங்கெல்லாம் மக்கள் செல்வார்கள். இந்தியாவில் அதிசயிக்கத்தக்க வகையில் வேலைவாய்ப்புகள் புதிதாக உள்ளன'' என்கிறார் அவர்.

''இந்தியா திரும்ப வாய்ப்புகள் உள்ளன என்பதை அறியும்போது நிறைவாக உள்ளது. இப்போதுபோல் இந்தியாவில் இச்சூழ்நிலை இருந்ததில்லை'' என்கிறார் பத்ரா.

**(ஸ்பேன் இதழில் ஆஷிஷ் குமார் சென் எழுதிய From Braindrain to Barin Circulation கட்டுரையின் சுருக்கப்பட்ட தமிழ் வடிவம்)**

**தமிழில்: கே. ராமச்சந்திரன்**

## இலக்கிய இன்பம்

ஒரு காதலன். அவன், தன் காதலியை ஆற்றங்கரையோரத்தில் சந்திக்கிறான். அவள் காலை நொண்டிக் கொண்டே நடந்து வருகிறாள்.

காதலன்: காலிலே என்ன? ஏன் நொண்டுகிறாய்?

காதலி: நெருஞ்சிமுள் குத்தி விட்டது இடுப்பு வரை வெடுக்வெடுக் என்று இழுத்து வலிக்கிறது.

அதை இப்படியேவா பேசுவார்கள். அப்படிப் பேசினால் ஏது நயம். கவி நயத்துடன் இருவரும் பேசிக் கொள்கிறார்கள் இப்படி...

அவன்:
தேஞ்சாறு தேய்த்து
தின்னாதது அரைத்து
முத்தூணி கொண்டு
மூன்றிரண்டு போகும்
கன்னியே! உந்தன்
நால் மாகாணியில் என்ன?

அவள்:
ஐங்கால் புலி வந்து
ஐயா எந்தன்
நால் மாகாணி கடிக்க
எண் மாகாணி தன்னில்
எடுக்குதே வலி

கால், இடுப்பு என்பதை மாகாணி (1/16) வாய்பாட்டில் சொல்கிறார்கள். நால் மாகாணி = கால்

எண் மாகாணி = அரை = இடுப்பு

சேஞ்சாறு = தேங்காயெண்ணெய்

தின்னாதது = இலுப்பைப் பிண்ணாக்கு. (யாரும் அதிகம் தின்னாதது. இலுப்பைப் பிண்ணாக்கைத் தின்றுகொண்டு செல்கிறாள்)

முத்தூணி = குடம்

மூவிரண்டு = ஆறு (நீர்நிலை)

ஐங்கால்புலி = நெருஞ்சிமுள்

வை. தங்கவேலு
இடையன் காட்டு வலசு

# வீணாக்காதீர் வாடி நிற்காதீர்

## வீணாக்குதலும் வாட்டமும்

**விழித்துக்கொள்க! வெற்றிபெறுக!!**

'வீணாக்குதல்' எதிலும் கூடாது. தண்ணீர்த் தட்டுப்பாடு உடைய சென்னையில் தண்ணீரை வீணாக்கலாமா? பணத்தட்டுப்பாடுடைய குடும்பத்தில் வருமானமாக வரும் பணத்தை வீணாக்கலாமா? கூடாது.

ஏன் எனில், அவசியத் தேவை எனும்போது வீணாக்கப்பட்ட பொருள் கிடைக்காமல் வாடி நிற்க வேண்டிவரும்.


கூடாது என்பதை கிட்டத்தட்ட நூறு விழுக்காடு மனிதருமே அறிவர். ஆனாலும் தம்மிடம் கிட்டுவதை வீணாக்காதவர் யார்? வாடிநிற்காதவர்தாம் யார்?

வசதியாக வாழ வேண்டும் என்று அனைவருமே நினைக்கிறோம். தப்பில்லை. ஆனால், 'வசதியாக வாழுகிறோம்' என்ற பெயரில் 'வீணாக்குதல்' இடம்பெற்றுவிடுகிறபோது தப்பு நடந்துவிடுகிறது. அதைத் தொடர்ந்து வாட்டம் வந்து சேர்ந்துவிடுகிறது. வாடிநிற்கையில், வசதி, சத்தம் போடாமல் ஓடிப் போய்விடுகிறது.

ஆகவே வீணாக்காதீர்; வாடி நிற்காதீர்!

சரி; வீணாக்கமாட்டோம். எது எதை அப்படி வீணாக்காமலிருக்க வேண்டும்?

வாழ்க்கையில் எது எது மிக அவசியமானதோ அது எல்லாவற்றையும் வீணாக்காமல் பார்த்துக் கொள்ளுதல் நலம்.



சிலவற்றைத் தனித்தனியாகவும் பார்ப்போம்.

1) காலத்தை 2) கையில் கிடைத்த பணத்தை 3) நட்பை 4) குழந்தைகளை 5) மனப்பண்பை 6) உடல், மன சக்தியை 7) பயன்படும் எப்பொருளையும் 8) கற்ற கல்வியை 9) ஆன்மிக நாட்டத்தை... என்று பலவற்றைப் பார்த்தாலும் மொத்தத்தில் வாழ்க்கையை மனித உறவை வீணடிக்கக் கூடாது.

'சும்மா இருப்பதே சுகம்' என்றார் தாயுமானவர். இதை வேலையில்லாத போது நன்கு ஓய்வெடுப்பதில் கடைப்பிடிக்கலாம். வேலைச் சுமை இருக்கும் போது, 'சும்மா இருக்கப் போகிறேன்' என்று போய்ப் படுத்துக் கொண்டு விடலாமா?

தாயுமானவர் சொன்னது, 'சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கிறதை, அதாவது தியான சமாதி சுகமடையச் சொன்னார்.





### காலம்

காலத்தை வீணடிக்காமல் பயன்படுத்தியவர்களே உண்மையில் விழித்துக் கொண்டவராவர். வெற்றியும் பெறுவர்.

புதிதாகக் கலியாணமாயிற்று. ஒரு பெரியவர் வாழ்த்தினார். ''தம்பீ, கவனமா விழிப்போட வாழ்க்கை நடத்து. இளமைல கவனிக்காம விட்டுட்டு, நாப்பது வயசுக்கு மேல 'இப்போதான் கவனம் வந்ததுங்கன்னா வாழ்க்கை வீணாய்டும். அப்புறம் வாட்டத்தோடதான் இருக்கணும்'' என்றார்.

'பருவத்தே பயிர் செய்' என்பதே காலத்தை வீணாக்காமல் எவ்வெப்போது எதைச் செய்ய வேண்டுமோ அவ்வப்போது அதைச் செய்கிறதுதான்.'

விதைக்கும் போது விதைத்து முடித்தால், அறுக்கும்போது ஆனந்தமாக இருக்கலாம். விதைக்கும் காலத்தை வீணடித்துவிட்டால் அறுக்கும் காலத்தில் வாடியே நிற்க வேண்டும்.

மாணவர்களில் முதல் ரேங்க் வாங்குபவர்கள் காலத்தைப் பாடத்தில் செலவிட்டது புரியும். விளையாடித் திரிபவர் தேர்வு முடிவு வரும்போது வாடித்தான் நின்றாக வேண்டும்.

கடமையில் காலத்தைக் கழித்த எவரும் வாட வேண்டியதில்லை. உடமைகள் அவர்களுக்கு உண்டாகும். காலத்தை மட்டும் வீணாக்காமலிருந்தால் கூடப் போதும், ஏறத்தாழ எல்லாவற்றையுமே வீணாக்காததற்கு நிகராக நன்மை உண்டாகும்.

அந்தந்தக் காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்யும்போது, போட்டி, பந்தயம், விளையாட்டு, பொழுதுபோக்கு என ஊதாரித்தனமாகச் செலவு செய்து ஊர் சுற்றித் திரிய முடியாதன்றோ!

### குழந்தைகளை வீணடித்தல்

ஒரு வீட்டில் பிள்ளைகள் சுமாராகப் படிப்பவரே! பரீட்சை நேரத்தில் விரட்டுவதும், மார்க் வந்தவுடன் அதட்டுவதும் அடிப்பதும் எனத் தாயும் தந்தையும் திண்டாடுவர். பிள்ளைகளையும் படுத்துவர்.

முழுப் பரீட்சை, அரைப்பரீட்சை விடுமுறை வந்தால் அந்த வீட்டிற்கு வரும் பையன்களுடன் அந்தப் பிள்ளைகளின் தந்தையும் சேர்ந்து, கேரம் விளையாடுவார். பிறகு சீட்டு விளையாடுவார். 16 வயதுப் பையனையும் 18 வயதுப் பெண்ணையும் உடன் வந்த பல பையன்களுடன் உட்கார்த்திக் கொண்டு சீட்டாடுவார். நாலைந்து மணி நேரம் நடக்கும். இரவு 8, 9 மணி வரைகூட நீளும்.

சாடைமாடையாகச் சொல்லிப் பார்த்தேன். ''இது தப்பில்லையா?'' என்று!

''என்ன பண்றது? இந்த ஒரு மாதம் விட்ற வேண்டியதுதான்'' என்றார். ஏனெனில் அவரும் அலுவலகம் விட்டு வந்ததும் சேர்ந்து ஆடும் சுவாரச்யம்... அவரால்

இழக்க முடியவில்லை,. ஆகவே விடுமுறை எனும் பெயரில் விளையாட்டை அனுமதித்தார்.

அப்பாவே சேர்ந்து விளையாடுவதால், பிள்ளைகளுக்கு மணிக்கணக்கில் சீட்டு விளையாடுவது தவறாகப்படவில்லை. இளமனம், சீட்டு மகிழ்வைப் பழகிக் கொண்டது.

அப்பா அலுவலகம் போனதும், வரும் பையன்களுடன் பிள்ளையும் பெண்ணும் உட்கார்ந்து பகல் முழுவதும் ஆடலாயினர்.

மாலை 5 முதல் வீதியில் பந்து விளையாடவும் அதே கோஷ்டி ஆரம்பித்தது. இரவு 8 1/2 மணி வரையில், ஒரு நாளில் மொத்தம் 10 மணி நேரம் விளையாட்டில்... அதுவும் பையன்களும் பெண்களும்! படிப்பில் சிறந்தவர்களுமில்லை.

"சின்ன வயது முதல் வீட்டிற்கு வரும் பையன்களே" என்றார். இருக்கட்டுமே, முற்றும் துறந்த முனிவர்களா? அல்லது அந்தச் சிறுவிடலைப் பெண்கள்தான் மனத்தை வசப்படுத்தியவர்களா?

முதலில் ஏகப்பட்ட நேரம் வீணாகிறது. அதோடு, வேறு நல்ல சங்கதிகள், பல நல்ல சமாசாரங்களைக் கற்க முடியாமல் போய், குணம்கெட வாய்ப்பாகிறது.

பெரும்பாலும் பகலில் தந்தை அலுவலகம் சென்றுவிட பையனும் பள்ளி திறந்துவிட்டதால் போய் விடுவான். வீட்டம்மாளுக்கு என்ன வேலையோ, 18வயதுப் பெண்ணை விட்டுவிட்டுத் தினமும் பகலில் வெளியே போய் விடுவாள்.

இந்தப் பெண், பையன்களுடன் பல மணி நேரம் கதவைச் சாத்திக் கொண்டு சீட்டு விளையாடும். பார்ப்பவர் என்ன நினைப்பர்?

இப்படி விடும் பெற்றோர் குழந்தைகளை வீணடிக்கிறவர்கள் தாமே? பிறகு எதாவது பிரச்னை என்றால் வாடி நிற்கிறவர்கள் தாமே?

இங்கே மாதிரிக்காக எழுதப்பட்ட நிகழ்ச்சி போலப் பலவகையிலும் நடப்பவை ஒவ்வொரு வகையில் பிள்ளைகளை வீணாக்குபவையே!

பிள்ளைகளை வைத்துக் கொண்டு ஒன்றுக்கும் உதவாத மெகா சீரியல்களைப் பார்க்கும் எத்தனை பெரியவர் உளர்!

கன்னாபின்னா பாடல்வரிகள் கழிசடைத்தன உடலசைவுகள் வரும் சினிமாக்கள் வேறு, வீட்டுக் கூடத்திற்குள் வந்து விட்டன. காலமும் கருத்தும் பிள்ளைகளும் இவற்றால் வீணாகின்றனர்.

இப்போதாவது விழித்துக் கொள்ளுங்கள், பிள்ளைகளை வளர்ப்பதில் வெற்றி பெறுங்கள்!

## சகிப்புத் தன்மை


மாலை வேளையில் தெருவில் பந்து விளையாடும் பெண்ணோ, சீரியல் காண்பவர்களோ, கை கால்களை அலம்பி, முகம் அலம்பி நெற்றிக்கு இட்டுக் கொண்டு 1/2 மணி நேரமாவது ஸ்வாமி படம் முன் ஒரு பக்திப்பாடலைப் பாடலாம். வீட்டில் வியாதி அணுகா வண்ணம் தோத்திரத்துதிப் பாடல்களைப் படிக்கவாவது செய்யலாமே. விஷ்ணு சஹஸ்ரநாமத்திற்கு அந்தச் சக்தி உண்டு. இதை எந்தப் பெற்றோர் எந்தப் பெண்ணுக்குக் கூறி வற்புறுத்துகிறார்கள்?





இதெல்லாம் மனப் பண்பைக் கெடாமல் காக்கும் மனோதத்துவ வழிகள்.

விடலைப் பிள்ளைகளுக்கு எதிர்ப்பாலினரோடு பேச, பழக ஆசையாகவே இருக்கும். 'இதனாலென்ன?' எனப் பெற்றோரே கட்டுப்படுத்தாது விட்டால், பிள்ளைகளினால் பிரச்னை வராமல் பார்த்துக் கொள்ளும் வாய்ப்பைக் கோட்டை விட்டதாகவே ஆகும்.



'நண்பர்கள்' எனப்படுவோர் - கல்லூரியில், பள்ளிகளில் படிப்போர் சங்கதியில் பெரும்பாலும் அநாவசியமே! வீட்டில் பெற்றோர் பராமரிப்பில் இருக்கும் பிள்ளைகளுக்குப் படிப்புதான் கவனத்திலிருக்க வேண்டும். அரட்டை, வெட்டிக் கலாட்டா, அசிங்க நடவடிக்கைகளுக்கே வெளியில் சும்மா அறிமுகப்படுபவர்கள் 'நண்பர்களாகக்' காணப்படுவர்.

'நண்பர்களிடம் நல்ல பேர் எடுக்க வேண்டும்' என்ற மனத்தன்மை, தகுதியற்றவரிடமும் கூட மதிப்பை நாடச் செய்து, படிப்படியாகத் தப்புத் தண்டாக்களில் இறங்க வைக்கும். இதனால் ஆணும், பெண்ணும் இருபாலரும் கெடுகின்றனர்.

'காதல்' வீட்டுக்குள்ளும் வெளியிலும் ஆபாசமாக மீடியாக்களால் நியாயப்படுத்தப்பட்டு விட்டதால், சரியாகக் 'காதல் என்ன?' என்று புரியாமலேயே, பெற்றோரை விரோதிகளாகக் கருதி வீம்புக்கேனும் செயல்படும் நிலை இன்றைக்குப் பிரச்னையாக பயமுறுத்துகிறது.

காரணம், கலாசாரச் சீரழிவே. இதனால், பெற்றோர் பாசமும், குடும்பப் பாசமும், கௌரவ நாட்டமும், பண்பும், ஆக்கபூர்வச் சிந்தனையும் போக்கும் வீணடிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் வாடி நிற்கிறார்கள்.

காரணம், சகிப்புத் தன்மைக் குறைவே!

உடல், உள்ள இச்சை தரும் தொல்லையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். மனம் புறம் போக்காக விடப்படாமல் பொறுமையால் அடக்கப்பட வேண்டும். அப்போதே நல்லவராக இருந்து சமுதாயம் கெடாமல் உதவ முடியும்.

"ஏன் இன்னும் கலியாணம் செய்துகொள்ளவில்லை?" என ஒருவரைக் கேட்டேன்.

"எந்தத் தப்பு செய்தாலும் யார்மேல் கோபமே வராதோ அப்படி ஒருவர் கிடைத்தால் மணக்கலாம்" என்றார்.

பழம் பண்பாடு, குடும்பம், வாழும் முறை போய்விட்டதால், பண்பு கலாசாரக் கலப்பு வேறு அதிகமாகிவிட்டதால், முன்பு போல திருமணங்கள் இனி வெற்றிகரமாக இருக்காது. அதாவது 50 வருடம், அறுபது வருடம் சேர்ந்து வாழும் பாசத் தம்பதிகளாகப் பழுத்தவரைப் பார்க்க இயலாது. இப்போதெல்லாம், 'கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் இல்லை; சகிப்புத் தன்மையின்மை என்ற மழையற்ற வறட்சி நிலம் ஆகிவிட்டது.

விழித்துக் கொண்டால் வெற்றி காணலாம். மனித உறவை, நட்பை

வீணடிக்காதவர் இச்சங்கதியிலும் வாடி நிற்க வேண்டாம்.

### வழக்கம்போல...

ஒரு முதலை இருந்தது. அந்த ஏரியின் கரையில் ஒரு நாவல் மரமிருந்தது. அதில் ஒரு குரங்கு வாழ்ந்தது. 'ஐயோ, பாவம்' என்று முதலை கரைக்கு வரும் போது, நல்ல நாவல் பழங்களை மரத்தை உலுக்கி அதற்குப் போட்டது. முதலையும் நிறைய நாள் தின்றது. இப்படி குரங்கின் நட்புறவு முதலைக்கு நலம் விளைவித்தது.

'நாவல்பழம் இந்த இனிப்பு இனிக்கிறதே, இதையே தின்று வாழும் இப்பெரிய குரங்கின் ஈரல் குலை எவ்வளவு சுவையாயிருக்கும். எப்படியாவது குரங்கின் ஈரலைத் தின்ன வேண்டும்' என்று முதலை திட்டம் போட்டது.

''குரங்கே, இதென்ன நாவல் மரம்? ஏரியின் அக்கரையில் பெரிய பெரிய நாவற் பழங்களுள்ள பெரிய மரம் ஒன்று உள்ளது; வருகிறாயா?'' என்றது.

''பரந்த நீர், ஆழமாக வேறு இருக்குமே? நான் எப்படி ஏரியைக் கடப்பது?'' என்று கேட்டது குரங்கு.

''என் முதுகில் ஏறிக் கொள். போகலாம்'' என்று முதலை கூற, குரங்கு அதன்மேல் தாவி ஏறிக் கொண்டது. முதலை நீரில் மிதந்தபடி நடுப்பகுதிக்குச் சென்றதுமே சிரித்தது.

''குரங்கே, மக்கே, உன் ஈரலைத் தின்னவே உன்னை முதுகில் தூக்கி வந்தேன். ஏமாந்து போனாயா?'' என்றது.

தூக்கிவாரிப்போட, குரங்கு சமாளித்துக் கொண்டு, ''முதலை நண்பரே, அடடா இதையேன் அங்கேயே சொல்லவில்லை? என் ஈரலை நான் அந்த மரக்கிளையிலன்றோ மாட்டி வைத்திருக்கிறேன். இப்போது என்ன செய்வது?'' என்றது.

உடனே முதலை, ''பரவாயில்லை, வா கரைக்கு மரத்திலிருந்து எடுத்துத் தா!'' என்று குரங்கைக் கரையில் கொண்டு வந்து சேர்த்தது. உடனே மரத்தில் ஏறிக் கொண்ட குரங்கு ''மக்கு முதலையே, எங்காவது உடலைவிட்டுத் தனியே யாராலாவது ஈரலை எடுத்து வைக்கமுடியுமா? தண்ணீரை உன் முதுகின் மேல் இருந்து கடக்க, என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பொய்யைக் கூறினேன். இனி உனக்கு நாவல் பழமும் கிடையாது'' என்றது.

இதோடு விடாத முதலை, ஏமாந்து போன கோபத்தால் குரங்கு, இறங்கி வரும்போது கொன்று தின்று விடுவதாக சபதமிட்டு மரத்தடியில் வந்து படுத்துக் கொண்டு வாயைப் பிளந்தபடியே இருந்தது. குரங்கு வரவே இல்லை. உடனே, 'மல்லாந்து படுத்திருந்தால் செத்துப்



போய்விட்டதாகக் குரங்கு அருகில் வரும், தின்று விடலாம்' என்று முதலை மல்லாந்து படுத்து அசைவின்றிக் கிடந்தது.

அப்போது, குரங்கு கூரான உறுதிமிக்க ஒரு கிளையை ஒடித்து முதலையின் வயிற்றைப் பார்த்து வீசியது. அது குத்தி முதலை உயிரை வீணே பறிகொடுத்தது.

நட்புறவை வீணடித்தால் இப்படித்தான்.

(தொடரும்.)



## கடித மஞ்சரி — வாசகர் எண்ணங்கள்

இதழ்களுக்குத் தலையங்கம் என்ற சடங்கு தேவையா என்று சில சமயங்களில் தோன்றும். அவசியம் என்று ஜூன் மாத மஞ்சரி உணர்த்தியது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு, அதை சரிவரப் பயில இலக்கிய இலக்கணம் எத்துணை அவசியம் என்பதை வலியுறுத்திய தலையங்கம் மகிழ்ச்சியடையச் செய்கிறது.

*- குவளை எழில், சென்னை-92*

கல்வி முறையில் மாற்றத்தை ஒப்புக் கொள்ளும் அதே வேளையில் பண்டைப் பெருமை வாய்ந்த தமிழ் இலக்கியங்களுக்கு தமிழகத்தில் இடம் தரா விட்டால் வேறு யார் தர முடியும்? தலையங்கம் எழுப்பியது கேள்வியல்ல, வழிகாட்டி!

*- அய்யாறு வாசுதேவன்*

டாக்டர் சி.கே.என் நாயரின் ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம் எனும் கட்டுரைத் தொடரைப் படித்து வருகிறேன். சர்.சி.பி.ராமஸ்வாமி ஐயர் திருவிதாங்கூர் சமஸ்தான திவானாக இருந்த காலத்தில் நான் கேரளா, பாலக்காடு மாவட்டம் பட்டாம்பியில் மேல்நிலைப்பள்ளி மாணவனாக இருந்தேன். அவர் ஒரு பெரிய மேதை என்பது அப்போதே தெரியும். வழக்கம் போல அந்த மேதைக்கிருந்த நண்பர்களைவிட விரோதிகளே அதிகம்! அவரது மேதைத்தனம் இந்திய அளவில் உபயோகப் படுத்தப்பட்டிருந்தால் பல நன்மைகளை பாரதம் அடைந்திருக்கும்.

*- கே.எஸ்.பட்டாம்பி ராமையர், புதுவை-8*

சுகத்தை விடாதீர் சோர்வை அடையாதீர் - ஸ்வாமியின் தன்னம்பிக்கைக் கட்டுரையில் சுகத்தையும் சோர்வையும் குறித்து எடுத்துச் சொன்ன விதம் குறித்து பிரமிப்படைந்தேன்.

*- ரா.சாலமோன், ஆலங்குளம்.*

ஸ்வாமியின் தன்னம்பிக்கைத் தொடர் மிகவும் சிறப்பாக இருக்கிறது. எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு, இத்தொடர் ஊக்கம் எனும் பொக்கிஷ மருந்தை அளிக்கிறது.

*- மா.மோகனராசன், காமநாயக்கன்பாளையம்,*

நெல்சன் மண்டேலாவின் இன்னொரு முகம் அறிந்து மகிழ்ந்தேன். சிறை வாழ்வே ஓவியத்தில் பிரதிபலிக்கிறது என்ற செய்தியை கட்டுரை வாயிலாகப் படித்து மெய்சிலிர்த்தோம்.

*- ஸ்ரீரங்கம் எஸ்.முரளி*

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் என்று சுட்டிக் காட்டியுள்ள அப்துல் கலாமின் பேச்சு, இந்தியர் நெஞ்சங்களில் புரையோடிப் போன புண்ணை ஆற்றுகின்ற மருந்து.

*- புலவர் திருலோக்கி ஞானசேகரன்*

ராஜஸ்தானி பாணி ஓவியங்களை நாளும் ரசித்துக் கொண்டிருக்கலாம் என்பதற்கு இந்தியாவின் மோனாலிஸா சரியான நிரூபணம்...

*-சாமி, திருவண்ணாமலை*

துணுக்குகளின் வாயிலாக அரிய செய்திகளை அறிந்து கொண்டேன்.


*-உடுமலை கார்க்கோ*

ஹிந்தியில் ஹைக்கூ வளர்ச்சி கட்டுரை என்னைப் போன்ற வளரும் கவிஞர்களுக்கு மிகவும் பயனளித்தது.

*-கன்னிக்கோயில் ராஜா*

தென்கச்சியாரிடம் கேட்கப்பட்ட கேள்விகள்சிறப்பானவை. பதில்கள் சிந்திக்க வைத்தன.

*-உடுமலை எஸ். பொன்னுசாமி*



ஹரித்வார் ஆரத்தி



# உலக எழுத்தாளர்களுடன் ஒரு புடவையின் பயணம்

மில்லினியம் கொண்டாட்டத்தில் உலகமே மூழ்கிக் கிடந்த வேளை... இந்தியத் தலைநகரிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு...




''ஷ்யாமாஜி... நமஸ்கார்... ஹம்... யு.பி. டூரிஸம் ஸே பாத் கர்தே ஹை....'' மிகக் குழைவான குரலில் என் காதில் ஹிந்தி பாய, நானும் ஹிந்திக்கு மாறினேன்.

''உலகப் பயண எழுத்தாளர்களுடன் உத்திரப்பிரதேச உலா போக தமிழ்நாட்டிலிருந்து உங்களை தமிழ்நாடு டூரிஸம் சிபாரிசு செய்திருக்கிறது. வாழ்த்துகள்... பயணப்பட்டியல்... மற்ற விவரங்கள் எல்லாம் உங்களுக்கு அனுப்பி விட்டோம். உங்களை டில்லியில் வரவேற்க நாங்கள் காத்திருப்போம். வாழ்த்துக்கள்'' உத்திரப்பிரதேச சுற்றுலா அதிகாரி கூறினார்.

என் பெயரை தமிழக சுற்றுலாத் துறைக்கு பரிந்துரைத்த இதயம்பேசுகிறது



ஆசிரியருக்கு நன்றிகூறி, என் பயண ஏற்பாடுகளில் மும்முரமானேன்.



மானஸ்தம்பத்தின் கீழ்

ஜனவரி 8. பனிமூட்டம் காரணமாக தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் பகல் மூன்று மணிக்கு புதுடில்லியை அடைந்தது. "Welcome Shyama from Tamilnadu - U.P. Tourism'' என்ற பெயர்ப்பலகை, கண்ணில்பட, பலகை நோக்கி நடந்து அதைத் தாங்கியவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டு அழைப்புக் கடிதத்தைக் காண்பித்தேன்... ராஜமரியாதை அந்த கணத்திலிருந்து ஆரம்பமானது...

வாய் நிறைய வரவேற்றார்கள். இந்தி பேசுகிறேன் என்று தெரிந்ததும் மேலும் சந்தோஷமானார்கள். ரயில் நிலைய வாசலில் ஒரு வெள்ளை அம்பாஸிடரில் ஏற்றிவிட்டு, ''நீங்கள் போய் ஓய்வெடுங்கள். மற்ற எழுத்தாளர்களையும் நாங்கள் வரவேற்று அழைத்து வருகிறோம்'' என்றார்கள்.

புதுடில்லியின் நக்ஷத்திர ஹோட்டல்களில் ஒன்றான 'வசந்த் விஹாரில்' வண்டி நின்றது.

உலக எழுத்தாளர்களுடன் 20 நாட்கள் இருக்கப்போகும் நான், தென் இந்தியக் கலாசாரத்தைப் பறைசாற்றும் ஒரு கருவியாக இருக்கவேண்டும் என்பதை முறையாகத் திட்டமிட்டு, என் உடைகளை சற்றே கவனத்துடன் தேர்ந்தெடுத்துப் போயிருந்தேன்.

அறையில், செய்திப்பெட்டியில் நாளை காலை 8 மணிக்கு ஹரித்வார் புறப்படுகிறோம் தயாராகி எங்கள் கோச்சுக்கு வந்துவிடுங்கள் என்கிற யுபி டூரிஸத்தின் செய்தி இருந்தது.

ஹரித்வார் நோக்கிப் பயணம்... நான்கு, ஐந்து சுற்றுலா அதிகாரிகள் கூடவே பயணப்பட்டார்கள். பத்திரிகையாளர்களின் அனைத்து தேவைகளையும் அளவுக்கதிகமாகவே பூர்த்தி செய்தார்கள்.

மைக்கில் 'ஹரித்வார்' பற்றிய அபூர்வமான விஷயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. கங்கா ஆரத்தியின் பெருமை விளக்கப்பட்டது.

ஹரித்வாரில் பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக உலா வரத் தொடங்கினோம்.

ஹர் கி.பிடியில் (ஹரியின் படிக்கட்டுகள்) கங்கைக் கரையில் அனைவருக்கும் தீபங்கள்



பாரதமாதா கோவில்

மலர்களுடன் கூடிய ஒரு தட்டு வழங்கப்பட்டது. அயல் நாட்டு பத்திரிகையாளர்கள் உள்பட அனைவரும் பயபக்தியோடு ஆரத்தியில் ஈடுபட்டனர். கங்கா மாதா.. பூஜிக்கப்பட்டாள். ஒரு சில நிமிடங்களில் தீபங்கள்... அழகாக கங்கையில் மிதந்தன. அனைவருக்கும் பிரஸாதங்கள் வழங்கப்பட்டன. மாலைகள் போடப்பட்டு இரவு விருந்திற்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். மாமிச உணவு பழக்கப்பட்டுப் போன அயல்நாட்டினர், வேகவைத்த காய்கறிகள் கேட்டார்கள். விதவிதமான பழங்களை விரும்பிச் சாப்பிட்டார்கள். சப்பாத்தியை பதம் பார்த்தார்கள்.


மறுதினம் காலை புறப்பட்டு, பாரத் மாதா மந்திர் போனோம். சுவாமி சத்ய மித்ரானந்த் கிரி கட்டுவித்த இந்த ஆலயம் எட்டு தளங்களைக் கொண்டது. பாரதத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வொரு தளத்திலும் பாரதத்திற்கு பெருமை சேர்த்த மகான்கள், வீரர்கள், பதிவிரதைகள், பெண் தெய்வங்கள் என அமைக்கப்பட்டிருந்தன.

பிறகு ஹரித்வாரில் புகழ்பெற்ற 'ஷாந்திகுன்ச்' ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். சுமார் 500 ஏக்கர் விஸ்




பருசாகர் கோட்டை

தீரணமுள்ள இந்த ஆஸ்ரமத்தின் தலைவியாகவும் சாந்த ஸ்வரூபியாகவும் திகழ்ந்த பெண்மணி பத்திரிகையாளர்களை வரவேற்று, ஆஸ்ரம முறைப்படி போஜனம் செய்வித்தார்கள். இந்த போஜனம் அயல்நாட்டினரால் பெரிதும் வரவேற்கப்பட்டது.


கோட்டையிலிருந்து பருசாகர் ஏரி

இந்த ஆஸ்ரமத்தில் 300 ஆண்டுகளாகத் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் அகண்ட ஜோதி இருக்கிறது. இடைவிடாமல், இரவு பகல் பாராமல் தொடர்ந்து காயத்ரி மந்திரம் உச்சரிக்கப்படும் பிரார்த்தனைக் கூடம் இருக்கிறது. இந்தக்கூடத்தின் அருகே நின்று, உள்ளே உச்சரிக்கப்படும் காயத்ரி மந்திரத்தை சிறிதுநேரம் கேட்டுக் கொண்டிருந்தாலே 'உடல் உபாதைகள் தீர்ந்துவிடும்' என்கிற நம்பிக்கையுடன் மக்கள் குழுமி நிற்கிறார்கள். மூலிகைப் பண்ணைகளில் நமது பாரம்பர்ய ஆயூர்வேத ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த ஆஸ்ரம வாழ்க்கை அனைவரையும் ஈர்க்கவே செய்தது.

அடுத்து எங்கள் பயணம் ரிஷிகேஷ். லக்ஷ்மண் ஜூலாவில் பத்திரிகையாளர்கள் சந்தோஷமாக உலா வந்தனர். சில ஆஸ்ரமங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்

டோம்.

மறுநாள் காலையில் ஹரித்வாரிலிருந்து ராம்நகர் வழியாக 225 கி.மீ. பயணப்பட்டு, திகாலாவிலுள்ள இந்தியாவின் மிகப் புகழ்பெற்ற தேசியப் பூங்காவான ஜிம்கார்பெட் பார்க் (Jim Corbett Park) கிற்குச் சென்றோம்.




தசாவதாரக் கோயிலில் நர நாராயணர் சிற்பம்

இந்தியாவின் முதன்மையான இந்தப் பூங்கா, சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் ஹிமாலயத்தின் காலடியில், ராம்கங்கா ஆற்றின் கரையை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது. ஹெய்லி நேஷனல் பார்க், ராம்கங்கா நேஷனல் பார்க் என்றெல்லாம் ஆரம்பத்தில் பெயர் கொண்டிருந்த இந்த வனவிலங்குப் பூங்கா 1957 ஆம் வருடத்திலிருந்து இதன் உருவாக்கத்திற்கு காரணகர்த்தாவும், வேட்டைப் புலியுமான ஜிம்கார்பெட்டின் நினைவாக, 'ஜிம்கார்பெட் பார்க்' என்று பெயரிடப்பட்டது. மிக அழகிய ஏரியைக் கொண்டுள்ள இந்த அடர்ந்த காட்டுக்குள் முதலைகளும் யானைகளும், புலி, சிங்கங்களும் விதவிதமான பறவைகளும் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பத்திரிகையாளர்கள் நடுக்காட்டிற்குள் அமைக்கப்பட்டுள்ள காடேஜ்களில் தங்குவதற்கென மத்திய அரசாங்கத்தின் வனத்துறையிடமிருந்து சிறப்பு அனுமதி பெறப்பட்டிருந்தது. எனவே பத்திரிகையாளர்களை ஜீப்புகளில் ஏற்றிக் கொண்டு, 10 கி.மீ. உள்ளே வனாந்திரத்திற்குள் அழைத்துப் போனார்கள். நட்ட நடுக்காட்டுக்குள் ஒரு கட்டடத்தில் இறக்கி தேநீரும், பிஸ்கட்டும், பனீர் பக்கோடாவும் (இதுதான் அதிகம்) வழங்கினார்கள். அதன் பிறகு திறந்த வெளி அரங்கு போல இருந்த ஒரு இடத்தில் மளமளவென்று இருக்கைகக







ஜெயின் தீர்த்தங்கரர்

ளைப் போட்டு அமரவைத்து ஜிம்கார்பெட் பூங்கா பற்றிய குறும்படம் ஒன்றைத் திரையிட்டார்கள்.

மறுநாள் காலை 6 மணிக்கு கதவு தட்டப்பட்டது. யானையுடன் ஒருவன்... Elephant Safari... யானைப் பயணம் காட்டிற்குள் ஆரம்பமானது. என் உதடுகள் கணேச மந்திரத்தை உச்சரித்தது. சுமார் 3 மணிநேரம் அடர்ந்த காட்டுக்குப் பள்ளங்களில் ஏறியும் இறங்கியும், மரங்களுக்கிடையே புகுந்தும் புலி வேட்டை தேடினோம். அதாவது ஆங்காங்கே புலிகள் இதர விலங்குகளைக் கடித்துக் குதறி, சம்ஹாரம் செய்திருக்குமே அந்த ரணகளக் காட்சியைத் தேடி பயணப்பட்டுக் கொண்டிருந்தோம்.

பெரும்பாலும் மான்களின் ரத்தக்களறியான பாகங்கள் கிடப்பதை பத்திரிகையாளர்கள் Zoom போட்டு படம் பிடித்துக் கொண்டார்கள். ''ஷ்யாமாஜி கொஞ்சம் சிரியுங்களேன்'' என்று அவ்வப்போது கிண்டலடித்தார்கள். என் முகம் பேயறைந்தது போல இருந்ததை நானே உணர்ந்திருந்தேன். ஒரு வழியாக பிள்ளையார் என்னைக் காப்பாற்றித் தன் முதுகில் இருந்து என்னை இறக்கிவிட்டார். மானசீகமாக, எங்கள் சந்தோஷத்திற்காக அந்த ஜீவன்பட்ட கஷ்டங்களுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். ஜிம்கார்பெட் பார்க் பயணம் முடிந்து லக்னோ நோக்கிப் புறப்பட்டோம்.

லக்னோவை அடையும் போது கிட்டத்தட்ட இரவு மணி 7. ஹோட்டல் தாஜ்மஹாலில் அறை ஏற்பாடு. ''ஓய்வெடுங்கள்... வேண்டுவதை வேண்டும் போது சாப்பிடுங்கள்'' என்று பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக விடப்பட்டார்கள்.

லக்னோ என்று அழைக்கப்படும் லக்ஷ்மணபுரியைப் பற்றி நாம் சொல்வதை விட, 'வில்லியம் ஹோவர்ட் எஸ்

ஸல்' 1875 ஆம் ஆண்டிலேயே என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? 'ரோம்... ஏதென்ஸ்... கான்ஸ்டாண்டிநோபிள்... இல்லை... இல்லை... நான் பார்த்த எந்த நகரமுமே இத்தனை அழகானதாக இல்லை. பார்க்கப் பார்க்க, இந்நகரின் அழகு என்னுள்ளே வளர்ந்து கொண்டேயிருக்கிறது...''

ஆம்... இன்றும் அப்படித்தான். லக்னோவில் எங்கு பார்த்தாலும் மாளிகைகள், சோலைகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டிடங்கள், இஸ்லாமியக் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் 'படா இமாம்பரா' எனப்படும் மாளிகை... 'பூல்பூலைய்யா' அதாவது... வழிமறந்து விடக்கூடிய குறுக்கும் நெடுக்குமான வியூகப் பாதைகளுடன் உள்ள இந்த மாளிகையைக் கண்டிப்பாக ஒரு துணையுடன்தான் சுற்றிப் பார்க்க முடியும். ஏறக்குறைய இது போன்றே 'சோட்டா இமாம்பரா'வும் அமைக்கப்பட்டுள்ளது. நாள் முழுவதும் வியக்கத்தக்க மாட மாளிகைகளைப் பார்த்து அயல்நாட்டினர் அசந்து போனார்கள்.


மறுநாள் காலை பயணத்தின் முக்கிய நோக்கமான உலகப்பயண இலக்கியங்கள் பற்றிய கருத்தரங்கம் நடந்தது... இக்கருத்தரங்கிற்கு பல முக்கியப் பிரமுகர்கள், சுற்றுலா அதிகாரிகள், சுற்றுலாத் துறை மாணவர்கள், பேராசிரியர்கள் வந்திருந்தனர். இந்தியாவில் பயண இலக்கியத்திற்கு பெரும் வரவேற்பில்லை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. சுற்றுலாத்துறையின் பலவீனங்கள் அலசப்பட்டன. இறுதியில் பத்து அம்சத்திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அனைவரிடமும் கையெழுத்து பெறப்பட்டது. பத்திரிகையாளர்கள் அவரவர் மாநிலத்தின் பயண இலக்கியம் பற்றிப் பேச வாய்ப்புக் கொடுக்கப்பட்டது... அயல்நாட்டினரில் அமெரிக்க சிங்கின், இத்தாலிய டோனாதா... ஆஸ்த்ரேலியாவின் பிலிப்பா (இவர் புகழ்பெற்ற Lonely Planet US எழுதுபவர், சொந்தமாக Saffron Road என்கிற பத்திரிகையை நடத்துபவர், இந்தியர்களில் கேப்டன் ஜியும், அமரேந்தரும் மிகச் சுருக்கமாகப் பேசினார்கள். நானும் என் பங்கிற்கு, பயணக் கட்டுரைகளுக்கு புகழ்பெற்ற அமரர் மணியன் பற்றியும், சிவசங்கரி பற்றியும் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு அமர்ந்தேன்.

அடுத்தநாள் காலை, நாங்கள் வாரணாசி நோக்கி பயணப்பட்டோம்... இப்போது எல்லோருமே சகஜமாகப் பழக ஆரம்பித்திருந்தோம். அவரவர்களின் ஆர்வங்கள், எழுத்துக்கள், எதிர்பார்ப்புகள், அறிவுப்பரிமாற்றங்கள் என்று சிறந்த பரிமாற்றம் ஏற்பட்டிருந்தது. மாலை 6 மணியளவில் வாரணாசியில் 'Taj Ganges' ல் தங்க வைக்கப்பட்டோம். அடுத்தநாள் காலை 5 மணிக்கு கோச்சுக்கு வந்துவிட உத்தரவு. அதன்படியே அத்தனைபேரும் ஆஜராகிவிட, கங்கைக்கரை நோக்கிச் சென்றோம். எங்களுக்கென பிரத்யேகமான மூன்று படகுகள் தயாராக இருந்தன. அந்த அதிகாலை வேளையில் கங்கை நதியில் எங்கள் படகுப்பயணம் ஆரம்பமானது.

இந்த அனுபவத்தை, என் உணர்வுகளை என்னால் எழுத்தில் கொண்டுவர இயலாமல் தோற்றுப் போய்விட்டேன்.



இருந்தாலும் எழுதுகிறேன். என் நெஞ்சத்தில் இந்தியா... இந்தியா மட்டுமே நிறைந்திருந்தது. எனக்கு வேறு எதுவும் தோன்றவில்லை. இந்த தேசத்திலா நாம் பிறந்து வளர்ந்து ஆளாகியிருக்கிறோம் என்ற சிந்தனைகள் என்னுள் பிறந்து அப்படியே கங்கையில் கரைந்து விட மாட்டோமா என்று ஏங்கினேன். என்னையறியாமல் என் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர்... மற்றவர்கள் நான் அழுவதாகப் புரிந்து கொண்டார்கள். ஏதேதோ கேள்விகள் கேட்டார்கள். நான் ஜடமாகியிருந்தேன். இறைவா இந்த வாய்ப்பிற்கு நன்றி என்று ஆயிரம் முறை கூறிக் கொண்டேன்.



சித்ரகூடம் ராணி கட்

படகுகள் மெல்ல நகர்ந்து கொண்டிருக்க திடீரென்று ஒரு குரல் ஓங்கி ஒலித்தது. ''தயவுசெய்து பத்திரிகையாளர்கள் தங்களது பேனாக்கள், புத்தகங்கள், பைகள், காமிராக்கள், வீடியோக்கள் அனைத்தையும் படகில் வைத்துவிட்டு வெறுமனே இருங்கள். அயல்நாட்டினர்களே... உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். கட்டுப்படுங்கள். இங்கே பொதுமக்களை எங்களால் கட்டுப்படுத்த முடியாது. உணர்ச்சி பூர்வமானவர்கள். எதையும் செய்யக் கூடியவர்கள். துப்பாக்கியால் சுட்டாலும் சுடுவார்கள்'' என்று அறிவிப்பு.

எல்லோரும் கட்டுப்பட்டார்கள். காரணம் இருந்தது. எங்கள் படகு 'மணிகர்ணிகா காட்' ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. இறுதிச் சடங்கிற்காக சடலங்கள் காத்திருந்தன. இந்திய நம்பிக்கைகளை விளக்க இரண்டு சமஸ்கிருத வல்லுனர்கள் (பானரஸ் பல்கலைக்கழகத்திலிருந்து) வந்திருந்தார்கள். அவர்கள் அந்திம யாத்திரை பற்றியும், இறந்தவர்களுக்கு இருப்பவர்கள் செய்யவேண்டிய கடமைகள் பற்றியும் முடிந்தவரை விளக்கினார்கள்.



சித்ரகூடம் ராம கட்

இதையெல்லாம் கேட்டு, நமது இந்தியக் குடும்ப அமைப்பு, அதற்கான பொறுப்புக்கள், வாழ்க்கை முழுவதும் நாம் கடைபிடிக்கும் நெறிமுறைகள் எல்லாம் பிடித்துப்போய் பாராட்டும் போதும், இவையெல்லாம் இங்கேயே நிலைகுலைய ஆரம்பித்திருக்கிறதே என்று அவர்களே வருத்தப்பட்டபோதும், அந்த நினைவுகளே என்னை மூழ்கடித்தன.

படகுப்பயணம் முடிந்து பத்திரிகையாளர்கள் காசிவிஸ்வநாதர் ஆலயத்திற்கருகே அழைத்துச் செல்லப்பட்டனர். அயல்நாட்டினர் ஆலயத்திற்குள் நுழைய அனுமதியில்லாததால் இந்தியப் பத்திரிகையாளர்களும் மரியாதை நிமித்தமாக கோயிலுக்குள் போகவில்லை. ஆனால் என்னால் அப்படி இருக்க முடியவில்லை. நான் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, ஆலயத்திற்குள் சென்றேன். அப்பப்பா... அங்கே காசிவிஸ்வநாதரின் ஆட்சி நடக்கவில்லை, மாறாக பக்தர்களைக் கொள்ளையடிக்கும் பண்டாக்களின் அட்டகாசமான ஆட்சிதான்... ரொம்பவும் கஷ்டப்பட்டு காசிவிஸ்வநாதரை தரிசித்துவிட்டு வெளியே வந்தேன். அதற்குள் அந்நிய பத்திரிகையாளர்கள் கடைகளை அலசி, விதவிதமான மாலைகளை வாங்கி கழுத்தில் அணிந்து கொண்டிருந்தனர்.

காசியின் கடைவீதிகளில் காலார நடந்துவிட்டு, 10 கி.மீ இல் உள்ள சாரணாத் நோக்கிப் புறப்பட்டோம்.


சாரணாத் - அமைதியே உருவாகக் காட்சியளித்தது. புத்தகாலத்து ஸ்தூபிகள், அசோகத்தூணின் இன்றைய நிலையைக் காணும்போது.. கண்டிப்பாக ஒவ்வொரு இந்தியனின் உள்ளத் துள்ளும் இஸ்லாமியப் படையெடுப்பால் இந்தியா இழந்த இந்தப் பொக்கிஷங்களை நினைத்து எரிமலை வெடிக்கவே செய்யும். பத்திரிகையாளர்களுக்கு இஸ்லாமிய படையெடுப்பிற்கு முன்னதான சாரணாத்தின் வரைபடம் (தயாரிக்கப்பட்டது) ஒன்றும் வரலாற்றுச் சுருக்கமும் வழங்கப்பட்டன.

தரைமட்டமாக்கப்பட்டுள்ள ஸ்தூபிகளும், சிதிலமாக்கப்பட்டுள்ள பௌத்தச் சிலைகளும்... மனதை ஆழமாய் தைக்கவே செய்தது.

வரலாற்றுச் சிதைவுகள் ஏற்படுத்திய மனபாரத்துடன் சாரணாத்திலிருந்து புறப்பட்டோம்.

பிறகு 40 கி.மீ தொலைவில் உள்ள சுனார் கோட்டை நோக்கி எங்கள் பயணம் தொடங்கியது. சுனார், கங்கையின் வலது கரையிலும் ஜிர்கோ நதியின் இடது கரையிலுமாக அமைந்துள்ள முக்கோணப்பகுதி. சுனாருக்கு நிறைய வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. புராணங்களில் இந்த இடம் 'சரணாத்ரி' என்றழைக்கப்படுகிறது. பகவான் விஷ்ணு, வாமன அவதாரத்தின் போது எடுத்துவைத்த மூன்று அடிகளில் முதல் அடி இங்கேதான் என்று சொல்லப்படுகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க 'சுனார்' கோட்டை, ஹுமாயூன், அக்பர், ஔரங்கசீப் ஆகிய முகலாய மன்னர்களால் பிடிக்கப்பட்டு பின் ஆங்கிலேய ஆட்சியின் போது, வாரன் ஹேஸ்டிங்ஸ் தன் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் நாடிவந்த இடமாக இருந்தது.

சுனார் கோட்டைக்குள், உஜ்ஜெயினியின் ராஜா விக்ரமாதித்தனின் சகோதரர் ராஜா பாரத்ஹரி உயிருடன் சமாதியான இடம், இப்போதும் பொதுமக்களால் பக்தியுடன் தொழும் இடமாக உள்ளது. நாம் சிவாலயங்களில் நந்தியின் காதுக்குள் துன்பங்களைச் சொன்னால் நிவர்த்தியாகிவிடும் என்று நம்புவது போல், இங்கேயும் உள்ளூர்க்காரர்கள் நம்பிக்கையோடு சமாதியுடன் பேசுகிறார்கள். இன்னும் சிலர், காதுகொடுத்து கூர்மையாகக் கேட்டால் உள்ளே ஒரு மனிதன் மூச்சுவிடும் சப்தம் கேட்கிறது என்கிறார்கள். எது எப்படியோ நம்பிக்கைதான் வாழ்க்கை.



கலிஞ்சர் கோட்டைச் சுவர் சிற்பம்

அதன்பிற கு, அலகாபாத் வழியாக சித்ரகூடத்தை நாங்கள் அடைந்த போது இரவு ஒன்பது மணி.

சித்ர கூடம்... - இராமாயணச் சிறப்புமிக்க எழில் கொஞ்சும் அற்புத வனாந்தரம். சுமார் 11 வருடங்கள் ஸ்ரீராமரும் சீதாவும், லட்சுமணரோடு அலைந்து திரிந்து வசித்த காடுகள்... புண்யதீர்த்தக் கரையாக சித்ரகூடத்தின் 'பயஸ்வினி' கருதப்படுகிறது. இங்குதான் ஸ்ரீராமர் தமது தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்து 13 வது நாளில் அனைவருக்கும் விருந்தும் படைத்ததாகக் கருதப்படுகிறது. அச்சமயம் ஸ்ரீராமரின் துயரத்தில் பங்கு கொள்ள அனைத்து தெய்வங்களும் சித்ரகூடத்திற்கு வந்திருந்த மகிமையும் உண்டு. அப்படி வருகைதந்த தெய்வங்களே... சித்ரகூடத்தின் இயற்கை எழிலில் மனம் லயித்து திரும்பிப் போக மனமின்றிப் போனதை உணர்ந்து கொண்ட வசிஷ்ட மகரிஷி, ஸ்ரீராமரின் சம்மதத்துடன் விசர்ஜன மந்திரத்தை உச்சரிக்காமல் விட்டுவிட, அனைத்து தெய்வங்களும் சித்ரகூடத்திலேயே இருந்துவிட்டனர் என்கிறது சித்ரகூட வரலாறு.

## நிகண்டு

செய்யுள் வடிவில் அமைந்த சொற்களும், ஒரு பொருள் உணர்த்தும் பலவகைச் சொற்களும் கொண்ட அகராதியே நிகண்டு ஆகும். பத்துவித நிகண்டுகள் இருந்ததாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு ஆகியவை இவற்றுள் சில.

- நெ. இராமன்

என்னவோ இங்கிருந்து யாருக்குமே திரும்பிப் போகும் மனம் வரவேயில்லை. சீதாதேவி குளித்த இடத்தை (ஜானகி குண்ட்) தன்னுள்ளே கொண்டுள்ள குப்த கோதாவரி எனப்படும் நதிக்குகை விசேஷ அனுமதியின் பெயரிலேயே திறந்து விடப்படுகிறது. குகைக்குள் கங்கையின் மற்றொரு பிரவாகம். குகைக்குள் நெஞ்சளவு தண்ணீரில் தான் நடந்து செல்ல வேண்டும். குகையின் இறுதிவரை சென்றால் கங்கை குகைக்குள் வரும் நுழைவு வாயிலைப் பார்க்கலாம் என்றார்கள். ஜானகிகுண்ட்டில் நம்மூர் கோயில்களைப் போல அர்ச்சனை செய்து பிரசாதம் தருகிறார்கள். சீதாதேவியின் பிரசாதமாக ஒருஜோடி சிவப்பு, பச்சை வளையல்களும், கங்காதேவியின் பிரசாதமாக 'சுனிரி' என்றழைக்கப்படும் ஜரிகை வேலைப்பாடு கொண்ட சிவப்பு ரிப்பன் போன்ற ஒரு துணியும் தருகிறார்கள். வளையல்களை அணிந்து கொள்ளும் பெண்களுக்கு சுமங்கலித்துவமும் 'சுனிரி'யை வாகனங்களில் கட்டிவிட்டால் வாகன விபத்துக்களிலிருந்து பாதுகாப்பும் அடையலாம் என்று நம்பப்படுகிறது.

குப்த கோதாவரியின் நுழைவு வாயிலில் 'வருகையாளர் பதிவேடு' ஒன்று வைத்திருந்தார்கள். நான், அதில் ''என் வாழ்க்கையின் பயனை இன்று அடைந்தேன். பாரதப் பெண்ணாக அதுவும் தமிழ்ப் பெண்ணாக அதுவும் ஒரு பத்திரிகையாளராகப் பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன். இனி வரும் பிறவிகளிலும் இப்படி பிறக்கவே ஆசைப்படுகிறேன்'' என்று எழுதி வைத்தேன்.

என் மனம் சித்ரகூடத்திலிருந்து விடுபடாத நிலையில், மஹோபாவை நோக்கிப் பயணம் தொடர்ந்தது. சித்ரகூடத்தில் குரங்குகளுடன் விளையாடி, புழுதியில் புரண்ட அமரேந்தர் அருகில் பயணப்படுவது சற்றே சிரமமாக இருந்தது. என் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்ட அமரேந்தர், ''எதற்கெடுத்தாலும் சுகாதாரம் பார்க்கும் இவன், பயணம் முழுவதும் சின்னச் சின்ன குறைகளைக் கண்டுபிடித்து கத்தி கூப்பாடு போட்டு சுற்றுலா அதிகாரிகளைத் திணறவைக்கும் இவன் எப்படிப் பட்டவன்'' என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் ஷ்யாமா! ஐம் ஐ கரெக்ட்?''

நான் தலையாட்டினேன். அதன் பிறகு நடந்த உரையாடலின் ஒரு சில வரிகளை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.





''நீங்கள் வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறீர்களா ஷ்யாமா?''

''தமிழ்நாட்டையே சரியாகப் பார்த்ததில்லை.''

''வெளிநாட்டுப் பத்திரிகைகள் படிப்பதுண்டா?''

''இல்லை'' என்று வெட்கத்துடன் உண்மையைச் சொன்னேன்.

''தமிழ்நாட்டின் மூலையிலிருந்து வந்திருக்கும் ஒரு பெண் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இல்லை. அதற்காக உங்களுக்கு இந்த விளக்கத்தை நான் அளிக்கிறேன்.''

''நாம் அயல் நாடுகளுக்குப் போனால், அதுவும் இதுபோன்று அழைக்கப்பட்டுப் போனால் இந்தியருக்கே உரிய இளகிய மனதுடன் நன்றி உணர்ச்சியுடன் நாம் அனுபவித்த துன்பங்களையெல்லாம் தவிர்த்துவிட்டு, அவர்களை, அவர்களது நாடுகள் பற்றிய விஷயங்களை ஆஹா... ஓஹோ... என்று ஒன்றுக்கு இரண்டாகப் பாராட்டித்தான் எழுதுவோம். ஆனால் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எப்படி தெரியுமா? நமது விருந்தோம்பலைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். தாஜ்மகாலைப் பார்ப்பார்கள். அதன் அழகைவிட்டுவிட்டு கைடுகளின் தொல்லையை எழுதுவார்கள். பிச்சைக்காரர்களைப் பற்றி எழுதுவார்கள். குற்றம், குறைகளை தேடிப்பிடித்துப் படம் பிடிப்பார்கள். நமது சின்னச் சின்ன பிரச்னைகள் பெரிய தலைப்புகள் இடப்பட்டு பரபரப்புப் படுத்தப்படும். நான் நிறைய அனுபவித்து வேதனை அடைந்திருக்கிறேன். ஆகையால்தான் சுற்றுலா அதிகாரிகளை நானே கத்தி 'சரி' செய்ய வைக்கிறேன். குடிக்கும் தண்ணீர், வைக்கும்



அமன் சிங் மஹால்



நூலகம்

உணவு எல்லாவற்றிலும் ஏதாவது கண்டுபிடித்துச் சொல்கிறேன். ஆனால் நான் புழுதியில் விழுந்து புரள்வேன். வானரங்களுடன் விளையாடி மகிழ்வேன். இது என் தேசம். இவை என் நண்பர்கள்.''

மஹோபாவில், சிலமணி நேரங்களே கழிக்க முடிந்தது. ஜான்சியிலிருந்து 140 கி.மீ தூரத்தில் உள்ள மஹோபா, கோட்டைகளும் ஏரிகளும் நிறைந்த வரலாற்றுச் (Chandela Period) சிறப்புமிக்க நகரம். ஆனால் இன்று விதவிதமான வெற்றிலைக்கு புகழ் பெற்று விளங்குகிறது.

கஜுராஹோ அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள கிரேனைட் சிவன் கோயில் இங்கு புகழ்பெற்றது. இதனை அடுத்துள்ள விஷ்ணுகோயிலும் அமர்க்களப்படுகிறது. இங்கெல்லாம் அதிகநேரம் செலவழித்து கட்டிட நுணுக்கங்களை, அதன் வரலாற்றுச் சிறப்புகளை அறியமுடியாமல் போனது வருத்தம்.

மறுநாள் காலை பருசாகர் நோக்கி பயணம்... கைடுகள் பருசாகரின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி விவரிக்க ஆரம்பித்தார்கள்.

ஜான்சியிலிருந்து கஜுராஹோ போகும் சாலையில் சுமார் 24 கி.மீ பயணப்பட்டால் பருசாகர் வருகிறது. மிக அழகிய கட்டிட வேலைப்பாடுகள் கொண்ட சிதிலமடைந்த கோட்டைகளின் கம்பீரம் கண்களை நிரப்ப, சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட மாபெரும் பருசாகர் ஏரியோ நெஞ்சம் நிறைக்கிறது.

பருசாகரில்தான் 1744 ஆம் ஆண்டு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, பேஷ்வர் மற்றும் புந்டேல் (Peshwa's and Bundela's) களுக்கும் இடையேயான யுத்தம் நடைபெற்றது. தற்போது இடிபாடுகளுக்கு இடையே இன்றும் தலைநிமிர்ந்து நிற்கும் சண்டேளா வகை (Chandela) கோயிலும், குப்தர் காலத்து கோயிலும் யாத்ரீகர்களைக் கவர்ந்திழுக்கின்றன. குப்தர் காலத்து கோயிலின் கருவறைக்குள் ஆஜானுபாகுவான ஆனால் சிதிலமடைந்த சிவன் பார்வதி சிலைகள் காணப்படுகின்றன. ஏரிகளின் அழகை சிலமணி நேரங்கள் ரசித்துவிட்டு ஓர்ச்சாவிற்குக் கிளம்பினோம்.


16 வது நூற்றாண்டில், ருத்ர ப்ரதாப் சிங் என்ற மன்னரால் பேட்வா நதிதீரத்தில் உருவாக்கப்பட்ட தீவு என்கிறார்கள். ஓர்ச்சாவில் கால்கடுக்க ஏராளமான கோட்டைகளில் ஏறி இறங்கினோம். ராம்ராஜா கோயில், லக்ஷ்மிநாராயண் கோயில், சதுர்புஜ் கோயில் எனக்கு சுவாரஸ்யமாக இருந்தன. ஆனாலும் போதிய விளக்கங்கள் கிடைக்கவில்லை.

ஓர்ச்சாவில் ஒரு மாபெரும் கோட்டையை சற்றே நவீனப்படுத்தி பெரிய மனிதர்கள் தங்குவதற்கான வசதிகளைச் செய்திருக்கிறார்கள். கோட்டைக்கு வெளியே, வெள்ளை வெளேர் என்று ஒரு அடி நீளத்திற்கு முள்ளங்கிப் பிஞ்சுகளை, அப்படியே உப்பு, மிளகாய்ப் பொடி தூவி விற்கிறார்கள். ஒரு ரூபாய்க்கு 4 முள்ளங்கிகள். அப்படியே கடித்துச் சாப்பிட ஆஹா முள்ளங்கி இவ்வளவு சுவையானதாக இருக்குமா? அன்றுதான் கண்டுகொண்டேன்.



எங்கள் பயணம் ஜான்ஸியிலிருந்து 123 கி.மீ தூரத்தில் உள்ள, லலித்பூர் மாவட்டத்திலுள்ள 'தியோகாரை' நோக்கி ஆரம்பமானது.

'தியோகார்' (Deogarh) உள்ளூர் மக்களால் 'தேவ்கர்' என்றும் அழைக்கப்படுகிறது. அது பொருத்தமானதும் கூட. கடவுளின் வீடு, கடவுளின் குடியிருப்பு என்று பொருள் கொள்ளக்கூடிய தியோகாரில் கண்ணில் படுவதெல்லாம் கடவுளின் சிலைகள். சாலைகளின் இருபுறமும் எங்கு நோக்கினும் கடவுளின் சிலைகள் சிதறிக் கிடக்கின்றன. தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இந்நகரத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.



பேட்வா நதியின் வலதுபக்க கரையில், லலித்பூர் மலைத் தொடர்களுக்கிடையே தெய்வீக மணம் பரப்பிக் கொண்டு அதி அற்புதமாகக் காட்சியளிக்கிறது தேவ்கர். (நாமும் அப்படியே கூறுவோம்) குப்தர்கள் காலத்திலிருந்து தொடங்கி, குர்ஜாரா ப்ரதிஹாரா, கோண்டர்கள், இஸ்லாமிய, மராத்திய, ஆங்கிலேயர்களது வரலாற்று முக்கியத்துவங்களைத் தன் அகத்தே கொண்டிருந்தது தேவ்கர். அயல்நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு 'அல்வா' வாக அமைந்திருந்த இந்த இடத்தை அவர்கள் சுட்டுக் கொண்டு (கேமிரா வீடியோவில்தான்) போனதைப்பார்த்தபோது, உள்ளுக்குள் எங்கே சிலைக் கடத்தலே நடந்துவிடுமோ என பயமாகவே இருந்தது.

தொல்பொருள் ஆராய்ச்சித்துறையில் கோயில் எண் 11, 12 என்று எண்ணிடப்பட்ட ஷாந்திநாத் கோயிலும், தேஷாவதார் கோயிலும் ''கடவுள்கள்'' உறைந்துள்ள இந்த இடத்தின் கிரீடங்களாகக் கருதப்படுகின்றன. தேஷாவதார் கோயிலில் விஷ்ணு தனது பரிவாரங்களு

டன் அனந்த சயனத்தில் குடிகொண்டு அனந்தசாயி என்றே பெயரும் கொண்டிருக்கிறார். துவாரபாலகர்களைப் போல இக்கோயிலின் நுழைவுவாயிலில் கங்காவும் யமுனாவும்.... வைஷ்ணவ சித்தாந்தங்களைச் சித்தரிக்கும் இதனகத்தே, கஜேந்திர மோட்சம், நர நாராயண தவம், அனந்தசாயி விஷ்ணு ஆகியவை மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இவை 6 வது நூற்றாண்டைச் சேர்ந்தவை.

தேவ்காரில் அடுத்து நம்மை வசீகரிப்பவை 8லிருந்து 17வது நூற்றாண்டைச் சேர்ந்த ஜைன சிற்பங்கள்.... ஜெயின் சித்தாந்தங்களை விவரிக்கும் தீர்த்தங்கரர்களின் சிலை வடிவங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இந்த ஜைனக் கோயிலின் நடுநாயகமாக இருக்கும் 'மனஸ் தம்பா' எனப்படும் தூண் அருகே எதை வேண்டிக் கொண்டாலும் நிறைவேறும் என்றும், இத்தூணின் அடிப்பாகத்தில் அமர்ந்து தங்கள் குறைகளையும், விருப்பங்களையும் சொன்னால் பலன் கிடைக்கும் என்றும் கைடு சொன்னது எனக்கு மட்டும்தான் காதில் விழுந்தது போலிருந்தது. வேறுயாரும் அலட்டிக் கொள்ளவில்லை. இருந்தாலும் பெண்ணாகப் பிறந்துவிட்ட எனக்கு அப்படி அலட்சியமாகப் போய்விட மனம்வரவில்லை. வேண்டிக் கொள்ளவும் மனம் விட்டுச் சொல்லிக் கொள்ளவும் குறைகளுக்கு பஞ்சமா என்ன! நான் மட்டும் மனஸ் தம்பத்தின் அடியில் வந்தமர்ந்து சற்று இளைப்பாறி பின் மனம் திறந்தேன். மனம் இலேசாகிப் போனதுபோல் தோன்றியது.

அகில உலக எழுத்தாளர்களுடனான எங்கள் பயணம் முடியும் கட்டம்... ஜான்சியிலிருந்து ஆக்ராநோக்கித் திரும்பினோம்.

மாலை 4 மணிக்கு தாஜ்மஹால் விசிட். வெள்ளை வெளேர் என்ற பளிங்கு மாளிகைக்கு போகப் போகிறோம் என்ற உணர்வே மேலோங்கியிருந்தது.

மறுநாள் ஃபதேபூர் சிக்ரி. ஆக்ரா கோட்டை நோக்கிப் புறப்பட்டோம். எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத இடங்கள் இவை. தாஜ்மகால் தூய வெள்ளை சலவைக்கற்களால் எழுதப்பட்ட கவிதை என்றால், ஃபதேபூர் சிக்ரி சிவப்பு சந்தனக் கவிதை எனலாம். பாபர், தனது வெற்றிக்கு, கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் செயலாக 'சிக்ரி' என்ற இந்த இடத்தின் பெயரை 'ஷுக்ரி' என்று (உருதுமொழியில் நன்றி) பெயர்மாற்றம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

ஃபதேபூர்சிக்ரியில், பிச்சைக்காரர்களின் தொல்லையும், வியாபாரிகளின் தொணதொணப்பும் புகைப்படக்

> **சொற்பொழிவு**
>
> தற்பொழுது நம்மிடையே நிலவி வரும் "சொற்பொழிவு" என்னும் அழகான தமிழ்ச் சொல்லை உருவாக்கியவர் திருநெல்வேலியைச் சேர்ந்த பால்வண்ண முதலியார் என்பவர். எப்படி மேடையில் பேசுவது என்பது பற்றி "சொற்பொழிவாற்றுப்படை" என்ற பெயரில் ஒரு நூல் இயற்றியுள்ளார்.
>
> - நெ. இராமன்



> **ஸ்நூக்கர்**
>
> ஸ்நூக்கர் விளையாட்டு, பில்லியர்ட்ஸ், பிளாக்பூல், பிரமிட்ஸ் ஆகிய மூன்று விளையாட்டுகளில் இருந்து உருவாயிற்று. முதன் முதலாக 1875-ல் இந்தியாவில் ஜபல்பூரில் விளையாடப்பட்டது. அடுத்த பத்தாண்டுகள் கழித்துதான் பிரிட்டனுக்கு இந்த விளையாட்டு பரவியது.
>
> - நெ. இராமன்

காரர்களின் ஓயாத தொந்தரவும் சகிக்க முடியவில்லை. அதுவும் அயல்நாட்டினரைச் சுற்றி அவர்கள் அடிக்கும்லூட்டி தாங்க முடியவில்லை. ஐயோ... நம்மவர்கள் இப்படி மானத்தை வாங்குகிறார்களே என்று தலைகுனிவாகவும் இருக்கிறது. இதுபோன்ற பன்முகப் பிரச்னைகளால் சிக்ரியின் அழகிய கட்டிடக்கலை நுணுக்கங்களில் மனம் லயிக்க முடியவில்லை. ஆனாலும் புலந்தர்வாஜாவும், 'சலீம்சிஸ்டி'யின் (அக்பரின் மகன்) 'தர்கா'வும் கண்களுக்கு விருந்தாயின.

மறுநாள் காலை ஆக்ராவில் ஜே.பி ஹோட்டலில் பத்திரிகையாளர்களுக்கான நிறைவு நாள் நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. பத்திரிகையாளர்கள் அனைவரும் தங்களது அனுபவம் பற்றி ஓரிரு வார்த்தைகள் பேச அழைக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் உ.பி சுற்றுலாத் துறை சார்பாக ஒரு அழகிய தாஜ்மகால் பரிசாக அளிக்கப்பட்டது. பிரியப் போகிறோமே என்ற பாரமான உணர்வுடன் புதுடில்லி திரும்பினோம்.

உலக எழுத்தாளர்களுடன் ஒரு புடவையின் பயணம் என்று தலைப்பிலேயே புடவைக்கு முக்கியத்துவம் தந்துள்ளமைக்கு பல காரணங்கள் உண்டு. இன்றைய யுவதிகள் புடவையைத் துறந்து அயல்நாட்டு உடைகளை விரும்புவது வருந்தத்தக்கது. ஏதோ அந்நிய உடைகள் உடுத்தினால்தான் தங்களை மதிப்பார்கள் என்பது போல் அவர்கள் நடந்துகொள்ளும் விதம் அவர்களது அறியாமையையே காட்டுகிறது. பெண் பத்திரிகையாளர்களே கூட ஏனோ ஜீன்ஸூம் தொளதொள ஜிப்பாவும் அள்ளிக் கிளிப் செய்த கூந்தல் அலங்காரமும் தான் தங்களை 'ஜர்னலிஸ்ட்'களாக காட்டுவதாக நினைத்துக் கொள்கிறார்கள். உண்மையில் ஜெயிப்பதற்கான கருவிகள் இவையல்ல.

உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் நாம் நாமாகவே இருந்தால் கிடைக்கும் பெருமைகளுக்கு அளவே இல்லை. அத்துடன் கொஞ்சம் இசை ஞானம், உலக ஞானம், இலக்கிய ஞானம், மனிதர்களை நேசிக்கும் இயல்பு இப்படி எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சமாவது நமக்குள் இருக்குமேயானால் 'ஜெயிப்பது நிஜம்' என்று நான் புரிந்து கொண்டேன்.

✠

> குறிப்பு: அமரர் தேவன் அறக்கட்டளையும் மஞ்சரியும் இணைந்து நடத்திய பயணக் கட்டுரைப் போட்டியில் பிரசுரிக்கத் தேர்வான இந்தக் கட்டுரையோடு பயணக் கட்டுரைத் தொடர் நிறைவுற்றது.

மாதம் வந்தது எப்படி?

# ஜூன்



ஆங்கிலேயக் காலண்டர்படி ஜூன் மாதம், ஆண்டின் ஆறாவது மாதம். ரோமர்களின் குமரக் கடவுளான ''ஜீனியஸ்'' என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்டது. ''ஜீவினஸ்'' என்பது ஜீனியஸ்ஸின் குடும்பப் பெயர் என்று ரோமர்களின் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோமர்களின் ஒரு பிரிவினர் ''ஜீனோ'' என்று கூறுகின்றனர். ஜீனோவின் திரிபே 'ஜீனியஸ்'!

டச்சுக்காரர்கள் இந்த மாதத்தை ''ஜோம்மர் மாண்ட்'' (ZOMER MAAND) என்று குறிப்பிட்டுள்ளனர்.

''ஜோம்மர்'' என்றால், 'ஸம்மர்' (SUMMER) கோடை மாதம் என்று கூறுகின்றனர். ''ஸெரமோனாத்'' (SEREMONATH) என்றும் பெயரிட்டழைக்கின்றனர். ''ஸெர'' (SERE) வறண்ட மாதம் என்றும் சொல்கின்றனர்.

ரோமானியர்களின் புராண வரலாற்றில் ''ஜீனோ'' என்பவர் காக்கும் கடவுளாம். பிறப்பு முதல் இறப்பு வரை மக்களைக் காக்கும் தெய்வம். மே மாதத்தை திருமணங்களுக்கு துரதிர்ஷ்ட மாதமாகக் கருதிய ரோமானியர்கள், ஜூன் மாதத்தை அதிர்ஷ்ட மாதமாகக் கருதுகின்றனர்.

ஜூன் மாதம் ஜூனோ தெய்வத்தின் மாதம். இந்த ஜூனோ மாதத்தின் 30 நாட்களிலும் திருமணங்கள் நடைபெறுமாம். ஜூனோ எனப்படும் ஜூன் மாதத்தில் திருமணம் செய்து கொண்டவர்களின் வாழ்க்கை, சீரும் சிறப்புமாக நெடுங்காலம் நீடிக்குமாம்.

- விஜயகீதா



# ஜூலை குவின்டிலிஸ்

ஆங்கிலேயர்களின் நாள் கணக்குப்படி, அவர்களின் காலண்டரில் ஜூலை மாதம் ஏழாவது மாதம். ரோமாபுரி மன்னன் ஜூலியஸ் ஸீசரின் பெயரை மார்க் அந்தோணி இந்த மாதத்துக்கு ''ஜூலை'' என்று சூட்டினார்.

இவர் காலத்திற்கு முன்பு ஏழாவது மாதமான ஜூலை, ஐந்தாவது மாதமாக, ''குவின்டிலிஸ்'' என்ற பெயரில் இருந்தது. ஜூலை மாதத்தை அவர்கள் ''ஹூயி மாண்ட்'' (Hooy - Maand) அதாவது ''ஹே மன்த்'' (Hay - Month) என்கின்றனர். இந்த மாதத்தில் மாடுகள் பெரும்பாலும் வெளியே போய் மேய்வதில்லை. வீட்டிலேயே தங்கி, வைக்கோல் தின்றிருக்குமாம்.

ஆங்கிலோ ஸாக்ஸோனியர்கள் இந்த மாதத்தை ''மோயட் - மோனாத்'' (Moedd Mont) என்று குறிப்பிடுகின்றனர். பிரெஞ்சு நாட்டுப் புரட்சிக்குப் பின் கணித்த காலண்டர் படி ஜூலை மாதத்தை அறுவடை மாதம் என்கின்றனர். இதையே ''மெஸ்ஸிடாக் மன்த்'' என்கின்றனர்.

ஜூலை மாதத்தில்தான் பிரெஞ்சுப் புரட்சி நிகழ்ந்தது. (அப்போது பத்தாம் சார்லஸ் மன்னன் அராஜக ஆட்சியின் கீழ் தத்தளித்துக் கொண்டிருந்தது பிரான்ஸ் நாடு.) மன்னர்களின் ஏகபோக உரிமை ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு குடியரசாகியது. ஆர்லியன்ஸ் பிரபுவான ''லூயிஸ் பிலிப்பே'' குடியாட்சித் தலைவரானார்.

- விஜயகீதா

Brewer's Dictionary of Phrase and Fable லிருந்து

## என்ன அழகு! எத்தனை அழகு!

பெர்னாட்ஷாவும் அவரது நண்பரும் ஒரு சமயம் இரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அந்த நண்பர் இயற்கைக் காட்சிகளை ரசித்துவிட்டு அளவுக்கு மீறி புகழ்ந்து கொண்டு வந்தார். ஷாவுக்கு அது எரிச்சலூட்டியது. நண்பர் ஒரு மலைக் குன்றைப் பார்த்துவிட்டு, ''ஆகா! என்ன அழகு! எத்தனை அழகு! இதை ரசிக்க எவ்வளவு சன்மானம் வேண்டுமானாலும் கொடுக்கலாமே! என்றார். ஷா பொறுமையிழந்து அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். உடனே ரயில் நின்று விட்டது. ''நண்பரே! இதற்கு ஐந்து பவுன்கள் தான் தரவேண்டும். நீங்கள் அதைத் தந்துவிட்டு உங்கள் இயற்கைக் காட்சிகளை எவ்வளவு வேண்டுமானாலும் ரசியுங்கள்'' என்றார்.

புதுவை. கே.என். மகாலிங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி

நான் சர். சி.பிக்கு நீண்ட கடிதங்கள் எழுதினேன். சீனாவின் யுத்த கால வாழ்க்கையைப் பற்றி, *40, 80, 100, 200* எனும் கணக்கில் ஜப்பான் போர் விமானங்கள் சுங்கிங் நகரத்தின் மீதும் எங்கள் பல்கலைக்கழகத்தின் மீதும் குண்டு மழை பொழிந்த பயங்கர இரவுகளைப் பற்றி, சுமார் இருபதினாயிரம் மாணவ மாணவியர் தங்கள் ஹாஸ்டல்களிலிருந்து வெளியேறி சுங்கிங் நதிக்கரையிலுள்ள குகைகளை நோக்கித் தங்கள் உடைமைகளைச் சுமந்தவண்ணம் பயந்தவாறு பயணித்த நடைப் பயணக் காட்சிகள், உணவும் தண்ணீருமின்றி பலமணி நேரங்கள் அந்தக் குகைகளில் தவியாய்த் தவித்த வேளைகள், தேவையான மருந்துகளோ வைத்திய உதவியோ இன்றி மரணத்தை எதிர்நோக்கிக் கிடந்த மாணவர்களின் நெஞ்சைப்பிழியும் அவல நிலை, இத்தகைய சூழலிலிருந்து இந்திய மாணவர்களைக் காப்பாற்றுவதற்குத் தேவையான மருந்துகள் இந்தியாவிலிருந்து சீனாவிலுள்ள பிரிட்டிஷ் எம்பஸிக்கு வந்ததும் அவற்றை இந்திய மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக, கே.பி.எஸ். மேனன் பட்டபா

# ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம்

டுகள் போன்ற கணக்கற்ற கண்ணீர்க் கதைகளைப்பற்றி நான் எழுதிய கடிதங்களைப் படித்துவிட்டுக் கண்கலங்கியதாக, நான் திரும்பி வந்தபோது சர். சி.பியே என்னிடம் கூறினார்.

*1944* ம் ஆண்டு இறுதியில் நான் சர். சி.பிக்கு ஒரு கடிதம் எழுதினேன். மேற்படிப்பிற்காக அமெரிக்கா செல்ல விரும்புவதாகவும், சீனாவிலிருந்து செல்வதுதான் சௌகரியமென்றும் எழுதியதோடு, அங்குள்ள கார்னல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து விவசாயம் பற்றிய வேதியியலில் பி.எச்.டி பட்டம் பெற விரும்புவதாகவும், எனவே அதற்குரிய மூன்று வருட வெளிநாட்டு ஸ்காலர்ஷிப்பும் ஏனைய சலுகைகளும் பெறுவதற்கு உதவவேண்டுமென்றும் எழுதியிருந்தேன். உடனே மகிழ்வளிக்கும் அந்த பதில் வந்தது - திருவிதாங்கூர் பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து!

இக்கடிதத்தின் அடிப்படையில் சுங்கிங்கில் இருந்த பிரிட்டீஷ் எம்



பஸி, அமெரிக்கா செல்ல பாஸ்போர்ட் வழங்கியது. ஆனால் அத்துடன் பிரச்னை தீரவில்லை. கே.பி.எஸ். மேனன் முக்கிய செய்தி ஒன்றைக் கூறினார்.

''மிஸ்டர் நாயர், இங்கிருந்து நீங்கள் நேரடியாக அமெரிக்கா செல்ல முடியுமென்று தோன்றவில்லை. போர் முடிவதுவரை, அமெரிக்க முப்படையைச் சேர்ந்தவர்கள் மற்றும் அமெரிக்க பிரஜைகள், அரசியலறிஞர்கள், இப்பொழுது நடக்கும் போரில் ஏதாவதொரு வகையில் அமெரிக்கன் ஏயர்ஃபோர்ஸ் அமெரிக்காவிற்கு ஏற்றிச் செல்லும். எனவே இவ்விஷயத்தில் நாம் பிரிட்டன்எம்பஸியை வற்புறுத்துவதில் ஒரு பயனுமில்லை. எனவே தாங்கள் முதலில் இந்தியாவிற்குச் சென்று பின் அங்கிருந்து அமெரிக்கா செல்வதுதான் நடக்கக் கூடிய காரியம்'' என்றார். இதே கருத்தைத்தான் சீனாவிலிருந்த அமெரிக்க விமானப் படை கமாண்டர் ஜெனரல் சென்னான்டாவும் கூறினார்.


சர்.சி.பி.ராமசாமி ஐயர்

*1945* ஏப்ரலில் நான் இந்தியா திரும்பினேன். மே மாதத் தொடக்கத்தில் சர். சி.பியைச் சந்தித்தேன். இம்முறை சர். சி.பி என்னிடம் ஒன்றரை மணி நேரம் பேசினார். பேச்சு முழுவதும் சீனாவைச் சுற்றியே சுழன்றது.

போரால் ஏற்பட்ட நாசங்கள், இழப்புகள், விமானத்தாக்குதல்கள், மரணங்கள், எச்.எச். குங், கிறிஸ்டியன் ஜெனரல், சியாங்கேஷேக் போன்றவர்களைச் சந்தித்தது போன்ற பலநிகழ்ச்சிகளை நான் சர். சி.பியிடம் விவரித்தேன். அதோடு வேறொரு செய்தியையும் கூறினேன். *1943* ல் சீனாவிலிருந்த போது நான் பெற்றது மாதந்தோறும் *300* சைனீஸ் டாலர். ஆனால் *1945* ல் சீனாவிலேற்பட்ட சைனீஸ் பண வீக்கம் காரணமாக எனக்கு ஒரு மாதச் செலவிற்கு மட்டுமே ஒரு லட்சம் டாலர் தேவைப்பட்டது. தாங்க முடியாத அளவிற்கு விலைவாசி உயர்ந்தது. இந்த நெருக்கடியைச் சமாளிக்க அன்றைய இந்திய சர்க்கார் நடைமுறைப்படுத்திய ''இராஜதந்திர ஏமாற்றுவித்தையை''ப் பற்றியும் (Diplomatic Cheating) அதை கே.பி.எஸ். மேனன் சாதுர்யமாகக் கையாண்டு பதிலடி கொடுத்த விதத்தைப் பற்றியும் விளக்கியதோடு, அதுவரை யாருக்குமே தெரியாதிருந்த பல புதுச் செய்தி

கள் பற்றியும் நான் சர். சி.பியிடம் கூறினேன்.

1955 ல் இந்தியன் யுனிவர்சிட்டி டெலிகேஷன் சீனா சென்ற போது அதற்குத் தலைமையேற்று வழி நடத்தியவர் அன்று காசி பல்கலைக்கழகத் துணை வேந்தராயிருந்த சர். சி.பி.தான். அங்குச் சென்று திரும்பியபின் நான் அவரைச் சந்தித்த போது கூறினார்...

''நாராயண், நான் சீனா சென்ற போது முதலில் என் நினைவிற்கு வந்தவை, பத்தாண்டுகளுக்கு முன் நீ எனக்கு எழுதிய கடிதங்கள்தாம். 1949 இல் சீனாவில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இருப்பினும் 1955 திலும் கூட அங்குள்ள பல்கலைக்கழகங்களின் வளர்ச்சி ஆமை வேகத்தில் தான் உள்ளன'' என்றார்.

சீனாவிலிருந்து இரண்டு பெரிய ஓவியங்களை நான் வாங்கி வந்திருந்தேன். ஒன்று சர். சி.பிக்கு. மற்றொன்று டாக்டர் முட்கிலுக்கு. இவ்விரு ஓவியங்களையும் எனக்காக வரைந்தவர்கள், ஓவியக் கலையில் உலகப் புகழ்பெற்ற இரண்டு பேராசிரியர்கள். அவற்றை சர். சி.பியிடம் கொடுத்து அவருக்கு விருப்பமான ஒன்றை எடுத்து என்னுடைய எளிய அன்பளிப்பாக ஏற்கும்படி கூறினேன்.

சர். சி.பி. முதலில் ஓர் ஓவியச்சுருளை விரித்துப் பார்த்தார். ஐந்தடி நீளமும் இரண்டரை அடி அகலமும் உள்ள ஓவியம். எனக்காக ஆலீஸ் கேட்டுக் கொண்டதற்கிணங்க பேராசிரியர் லீயுநியன் வரைந்த ''தடாகத்திலுள்ள தாமரை'' எனும் மிகச்சிறந்த அழகோவியம். அடுத்தது கருப்பு வெள்ளையில் வரையப்பெற்ற ''ஓடுகின்ற குதிரை'' (The Galloping Horse) எனும் ஓவியம். இந்த ஓவியத்தை சர். சி.பி சுமார் இரண்டு மூன்று நிமிடங்கள் உற்றுப் பார்த்து என்னிடம் கூறினார் -

''சார் நீங்கள் கூறியது சரிதான். இந்த ஓவியம் ஷிபெ பெய்ஹ்யூங் அவர்களே அவர் வீட்டில் வைத்து எனக்காக வரைந்தது. அது ஒரு தனிக் கதை. சொன்னால் நம்பமாட்டீர்கள், ஓவியம் வரைவதற்குத் தேவையான வர்ணங்களைத் தேர்ந்தெடுத்தபின் அவர் இந்த ஓவியத்தை வரைய எடுத்துக் கொண்ட நேரம் வெறும் பத்து நிமிடங்கள் தான்! என்னை அந்த ஓவியருக்கு அறிமுகப்படுத்திய ஆலீஸ், எனக்கு சீன மொழி கற்பித்த பேராசிரியர் மட்டுமல்ல, அங்குள்ள நேஷனல் சென்ட்ரல் யுனைவர்சிட்டியின் கீழுள்ள ஓவியக் கல்லூரியின் மாணவியும் கூட. அவருடைய பேராசிரியர் தான் ஷிபெய்ஹ்யூங்...

''நாங்கள் அறைக்குள் சென்றோம். அவர் டிராயிங் பேப்பரை மேசை மேல் விரித்து தேவையான வர்ணக் கலவையைத் தயார் செய்தார். அதன் பின்தான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. அம்மேதையின் கையும் பிரஷும் டிராயிங் பேப்பரில் சில நிமிடங்கள் அங்குமிங்கும் ஓடின. பத்து நிமிஷங்களில் ஓடுகின்ற குதிரையொன்று பேப்பரிலிருந்து வெளிப்பட்டது. வீரியமும் உயிர்த்துடிப்பும் யாரையும் மிதித்துத் தள்ளிவிட்டு முன்நோக்கிப் பாயும் வலிமையும் கொண்ட ஒரு முரட்டுக் குதிரை! அந்த ஓவியத்தின் கீழ் சீன மொழியில்



தன் கையெழுத்திட்டு முத்திரை குத்தியபின் அந்த ஓவியத்தை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். பின் என்னிடம், ''அன்புத் தம்பிக்கு என் எளிய அன்பளிப்பு. தயவு செய்து இதை ஏற்கவும்'' என்றார். சித்திரத்தின் ஒரு முனையை ஆலீஸ்பிடிக்க, மறுமுனையை நான் பிடித்தபடி அச்சித்திரத்தை விரித்துப் பார்த்தேன். படத்திலிருந்த குதிரை என்னை நோக்கி ஓடி வருவது போலிருந்தது! உடனே நான் ஆலீஸிடம், ''ஆலீஸ், படத்தை உடனே சுருட்டுங்கள். இல்லையேல் இக்குதிரை என்னை மிதித்துத் தள்ளிவிட்டு ஓடிவிடும் போலிருக்கிறது?'' என்றேன். இதைக் கேட்டு ஆலீஸ் வாய் விட்டுச் சிரிக்க, ஆங்கிலம் தெரியாத ஓவியர் ஆலீஸிடம் சிரித்ததன் காரணத்தைக் கேட்டார்.

ஆலீஸின் பதிலைக் கேட்ட அவரும் சிரிக்கத் தொடங்கினார். பின் என்னிடம் கூறுமாறு ஆலீஸிடம் கூறினார்...

''ஆகா! இதைவிட மிகச் சிறந்த ஒரு பாராட்டை யாரால் தர முடியும்? இந்நாட்டில் யாருமே என்னை இவ்வாறு பாராட்டியதில்லை. இங்குள்ள மூங்கில் காடுகளில் வந்து போகின்ற பல்வேறு விதமான பறவைகளைப் பல்வேறு வர்ணங்களில் வரைந்து உன் நண்பருக்குக் கொடுக்க விரும்புகிறேன் என்பதை ஆலீஸ், இவரிடம் கூறு'' என்றார்.

இக்கதையைக் கேட்ட சர். சி.பி. மிக்க மகிழ்ச்சியடைந்து குதிரை ஓவியத்தை எடுத்துக் கொண்டார். 1946 ல் திருவனந்தபுரத்திலிருந்த அவரது பக்தி விலாசத்திலும் 1950 ல் ஊட்டியில் அவர் வசித்த டிலைட் பங்களாவிலும் 1953 ல் அவர் தங்கியிருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பங்களாவிலுள்ள வரவேற்பறையிலும் 1955 ல் மீண்டும் ஊட்டி டிலைட்டிலும் நான் இந்த ஓவியத்தைப் பார்த்திருக்கிறேன். அவர் செல்லுமிடமெல்லாம் இந்த ஓவியத்தையும் கொண்டு சென்றார்.

என்னுடைய எதிர்காலத் திட்டம் பற்றி டாக்டர் முட்கிலிடம் பேசி முடிவெடுக்க வேண்டியிருந்தது. போர் முடிவதற்கு முன்பு அமெரிக்கா செல்வதென்பது இயலாத காரியமென எல்லா டிராவல் ஏஜென்ஸிகளும் பல்கலைக்கழகத்திடம் அறிவித்திருந்தன. அதுவரை தற்காலிகமாக அலகாபாத் விவசாய இன்ஸ்டிட்யூட்டில் சிறிது காலம் பணியாற்ற விரும்பினேன்.



**அழகு**

கவிதையொன்று
கண்டு
கொள்ளப்படாமல்...
விளக்கை
வட்டமிடும் நிழல்!

- நாகஷரண்,
ஜம்புமடை

இதை முட்கிலிடம் கூறியபோது அவர் அதை விமர்சித்தார்.

அதற்கு அடுத்த வாரம் நான் சர்.சி.பி.யை அவரது பங்களாவில் சந்தித்தேன். என்னைப் பொறுத்தவரை சர்.சி.பி.யைச் சந்திக்க எத்தகைய முன் அறிவிப்போ முன் ஏற்பாடோ தேவையில்லை.

சிதம்பரம் அவருடைய முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான தனிச் செயலர். சர்.சி.பி.யைப் பொறுத்தவரை சிதம்பரம்தான் எல்லாம். அவருடைய அனுமதியின்றி சர்.சி.பி.யின் அறையினுள் யாரும் அவ்வளவு எளிதாக நுழைந்து விட முடியாது. அத்தகைய சர்வ வல்லமை படைத்த சிதம்பரத்தினிடமே இப்பொழுது நான் மோத வேண்டியதாயிற்று. அன்று அவருக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை, அனுமதிக்கவில்லை. நான் பல முறை வேண்டினேன். அவர் பிடிவாதம் தளரவில்லை. என் பொறுமை எல்லை கடந்தது. நான் உரத்த குரலில் வெடித்தேன்.

''மிஸ்டர் சிதம்பரம்! என் முன் நந்தி மாதிரி நின்று வழி மறிக்காதீர். பரசுராமனைத் தடுத்த கணபதி பட்டபாடு தெரியுமல்லவா?'' என நான் சீறியதைக் கேட்டுக் கொண்டு வந்த சர்.சி.பி. சிரித்தபடி சிதம்பரத்திடம், ''சிதம்பரம், முன் அனுமதியின்றி என்னைக் காணும் உரிமை நாராயணனுக்கு உண்டு என்பது நீயும் அறிந்ததுதானே? பின் ஏன் அவனைத் தடுக்கிறாய்?'' என சிதம்பரத்தைக் கடிந்து கொண்டார். பின் என்னை அழைத்துக் கொண்டு தன் அறையினுள் சென்றார்.

நான் சர்.சி.பி.யிடம் அலகாபாத் செல்ல விரும்புவதாகக் கூறினேன். உடனே அவர், ''அலகாபாத் செல்வதால் உனக்கு ஏதாவது பயன்கிடைக்குமென நீ கருதினால் நீ அங்கு செல்வதில் தடையேதுமில்லை. இதற்காகப் பல்கலைக்கழகம் எந்தவிதமான செலவையும் மேற்கொள்ளத் தேவையில்லை. உனக்கு மாதந்தோறும் எவ்வளவு தொகை தேவையோ அதைச் சர்க்காரே அளிக்கும்படி நான் உத்தரவிட்டிருப்பதாக தலைமைச் செயலாளரிடம் கூறிவிடு. இனி மேலுள்ள உன் செலவு முழுவதையும் உன் அமெரிக்க டெப்யூட்டேஷனுக்காகத் தொடங்கவிருக்கும் அக்கௌண்ட் ஹெட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம். இச்செலவு முழுவதையும் சர்க்கார்தான் செய்கிறது. எனவே உனக்குத் தேவையான தொகையைத் தலைமைச் செயலரிடம் கூறி பெற்றுக் கொள். நான் இதுபற்றி ஜி.பி.யிடம் பேசிக்கொள்கிறேன். (ஜி.பி. ஜி. பரமேசுவரன்பிள்ளை, தலைமைச் செயலாளர்) உன் அமெரிக்கப் பயணத்தின் முன்னேற்பாட்டிற்காக நீ ஐயாயிரமோ அல்லது ஆறாயிரமோ பெற்றுக் கொள்ளலாம். வட இந்தியாவில் பணிபுரியச் செல்பவர்களுக்கு அலவன்ஸாக ரூ.450 மட்டுமே நான் அனுமதித்துள்ளேன். அலகாபாத்திற்குச் செல்லும் உனக்கு இதுபோதாது என நீ கருதினால் அது பற்றி எனக்கு எழுது'' என்று கூறி, ''நீ எப்பொழுது அலகாபாத் புறப்படுகிறாய்?'' என்று கேட்டார்.



''வருகிற அக்டோபருக்குள் அமெரிக்கா செல்ல எனக்கு டிக்கட் கிடைக்கவில்லையென்றால் நவம்பர் முதல் வாரத்தில் அலகாபாத் செல்ல எண்ணியுள்ளேன்'' என்றேன்.

எதிர்பாராத விதமாக அமெரிக்கா, ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் அணுகுண்டுகளை வீசியது. அதன் விளைவாக இரண்டாம் உலகப்போர் ஒரு முடிவிற்கு வந்தது.

நவம்பர் முதல் வாரத்தில் நான் அலகாபாத்திற்குப் புறப்பட்டேன். அதே நவம்பர் மத்தியில் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், தாமஸ் குக் சன்ஸ் கம்பெனியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு ஒரு கடிதம் வந்துள்ளதாகவும் அதில் என் அமெரிக்கப் பயணம் டிசம்பர் 14-ல் இருக்கலாமென்றும், கல்கத்தா துறைமுகத்திலிருந்துதான் என் பயணம் தொடங்குகின்றதென்றும் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் உடனே கல்கத்தாவிற்குப் புறப்பட்டேன். ஆனால் எதிர்பாராத சில காரணங்களால் அப்பயணம் தடைபட்டது.

சில நாட்களுக்குப் பின் தாமஸ் குக் கம்பெனியிடமிருந்து வேறொரு கடிதம் வந்தது. அதில் பசிபிக் பெருங்கடலில் ஜப்பான் போட்டிருந்த கண்ணிவெடிகளையெல்லாம் அகற்றுவது வரை சிவிலியன்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## சர்.சி.பியின் விசுவரூபம்

நான் அலகாபாத்திலிருந்தபோது என் வீட்டிலிருந்து பணத்தை வரவழைத்துச் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இது என்னை மிகவும் பாதித்தது. நான் இது பற்றி டாக்டர். முட்கிலுக்கு எழுதிய கடிதங்களுக்குப் பதிலே இல்லை. பிற்காலத்தில் ஒரு முறை இதுபற்றி முட்கிலிடம் கேட்டபோது அக்கடிதங்கள் அனைத்தையும் அரசின் பார்வைக்கு அப்பொழுதே அனுப்பிவிட்டதாக அவர்கூறினார்.

1945 நவம்பர் முதல் 1946 மே மாதம் வரை சுமார் ஏழு மாதங்கள் திருவிதாங்கூர் சர்க்காரின் குட்டித் தேவதைகள் என்னைப் படாத பாடு படுத்திவிட்டனர். மே மாதம் 15 ம் தேதியன்று இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பது பற்றி விவாதிப்ப

### முயற்சி

இரவுகளைத் தகர்க்க
உளிகளோடு
மின்மினிகள்

### வைகறை

ஒரு சரித்திரம்
உருவாகிக் கொண்டிருக்கிறது...
துளிர்விடும் தளிர்!

- நாகஷரண்,
ஜம்புமடை

### துளிப்பா...

பனைவெல்லாம் வாங்க
நகருக்குப் போனான்
மரமேறி!

மாட்டுவண்டிக்கும்
பிரேக் உண்டு...
மூக்கணாங்கயிறு!

- சஞ்சீவிமோகன்

தற்காக வந்த பிரிட்டீஷ் காபினெட் மிஷனின் விவாதங்களில் பங்கெடுக்க சர்.சி.பி. புதுடில்லிக்கு வந்துள்ள விபரத்தைப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். உடனே அவரைக் காண அலகாபாத்திலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டேன்.

மே 16 ம் தேதி சர்.சி.பி. தங்கியிருந்த இம்பீரியல் ஹோட்டலுக்கு சென்றேன். சிதம்பரத்தைச் சந்தித்தேன். ''சர்.சி.பி. அவர்கள் கேபினெட் மீட்டிங்கில் பங்கு கொள்வதற்குத் தேவையான விபரங்களைச் சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். யாருடனும் பேசுகின்ற நிலையில் அவர் இப்பொழுது இல்லை. அவரை இப்பொழுது பார்ப்பது அவ்வளவு உசிதமல்ல என எண்ணுகின்றேன்'' என்றார் சிதம்பரம்.



பின் அவருக்கு என்ன தோன்றிற்றோ, நேரே சர்.சி.பி.யின் அறையினுள் சென்று என் வருகை பற்றிக் கூறியுள்ளார். அடுத்த நிமிடம் உள்ளே வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. உள்ளே சென்றேன்.

நான் அவரிடம் கல்கத்தாவில் சரத் சந்திரபோஸின் வீட்டில் வைத்து பண்டித நேருவை சந்தித்தது பற்றியும், மார்ஷல் ஃபெங்யூஸ் யாங்கின் கடிதத்தை அவரிடம் கொடுத்தது பற்றியும் கூறினேன்.

சுமார் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்த பின் அவர் கேட்டார்:''நாராயண் உனக்கு இப்பொழுது பிரச்னை ஒன்றுமில்லையே?''

''சார், ஏராளமுள்ளன. வேறொரு நாட்டில் பணிபுரியும் ஒருவருக்கு மாதந்தோறும் கிடைக்க வேண்டிய அவரது சம்பளம் கிடைக்காவிட்டால் அவரது நிலைமை எப்படியிருக்கும்?''

''நாராயண், சொல்வதைச் சற்று தெளிவாகச் சொல்.''

''சார், நான் என் பணி நிமித்தமாக திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டு ஏழு மாதங்களாகின்றன. எனக்குச் சம்பளம் தரவேண்டும் என்பதையே அங்குள்ள அரசு அதிகாரிகளும் பல்கலைக்கழக நிர்வாகிகளும் அடியோடு மறந்து விட்டனர். அவர்கள் இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. ஆனால் நான் அப்படி கவலைப்படாமல் இருக்க முடியுமா? என் வீட்டிலிருந்து பணம் வரவழைத்தும் நண்பர்களிடம் கடன் வாங்கியும் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறேன்.''

''நாராயண், நீ என்ன சொல்கிறாய்? மாதந்தோறும் உனக்கு அனுப்ப வேண்டிய சம்பளத்தை அவர்கள் அனுப்பவில்லையா? இதற்கு யார் பொறுப்பு? இரண்டு மணி நேரத்திற்குள்



அந்த நபரை நான் டிஸ்மிஸ் செய்யப் போகிறேன்.''

''சார், அந்த ஆள் யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் நிச்சயமாக இது ஒரு ஆளுடைய வேலை அல்ல.''

''நாராயண், உனக்குக் கிடைக்கவேண்டிய தொகை எவ்வளவு?''

''என் சம்பளம் மற்றும் அலவன்ஸெல்லாம் சேர்த்து சுமார் ஐயாயிரம் ரூபாய் வரவேண்டியுள்ளது சார்.''

சர்.சி.பி உடனே சிதம்பரத்தை அழைத்தார்.

''சிதம்பரம், நாராயணனின் பாஸ்போர்ட் நம்பரைக் குறித்துக் கொள். அதன்பின் சீஃப் செக்ரடரியை ஃபோனில் அழைத்து அவரிடம் நான் கூறியதாக இந்தச் செய்தியைக் கூறு. 5000 ரூபாயை டெலகிராஃப் டிரான்ஸ்ஃபராக, இம்பீரியல் பேங்க் ஆஃப் இந்தியா, நியூ டெல்லி எனும் முகவரிக்கு உடனே அனுப்புமாறு கூறுவதோடு அந்த பணத்தை இந்த பாஸ்போர்ட் நம்பருள்ள பாஸ்போர்ட் ஹோல்டர் யாரோ அவரிடம் கொடுப்பதற்குரிய ஏற்பாட்டையும் உடனே செய்யும்படியும் கூறவும். நாளை இம்பீரியல் பேங்கின் வேலை நேரம் முடிவதற்கு முன்பாக பாஸ்போர்ட் ஹோல்டருக்கு பணம் கிடைத்திருக்கவேண்டும்'' என்றார்.

நான் மறுநாள் இம்பீரியல் பேங்க் ஆஃப் இந்தியாவிற்குச் சென்று என் பாஸ்போர்ட்டைக் காட்டி ஐயாயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்டேன்.

சர்.சி.பி.யின் நிர்வாகத் திறமை என்னை வியக்க வைத்தது. ஏழு மாதங்களாக என்னைப் பந்தாடிய திருவிதாங்கூர் அரசு அதிகாரிகள், சர்.சி.பி விசுவரூபம் எடுத்ததும் 24 மணிநேரத்திற்குள் எனக்குரிய தொகையை டில்லிக்கு உடனே அனுப்பி வைத்தனர். சர்.சி.பியின் நிர்வாகத் திறமைக்கு இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே.

அவர் திருவனந்தபுரத்திலோ அல்லது இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலோ இருந்தாலும் சரி, அரசு இயந்திரம் சீராக இயங்கிக் கொண்டிருக்கும். ஒரு சிக்கலான விஷயத்தை அவருக்கு நாம் புரியவைத்துவிட்டால் போதும், அடுத்த பதினைந்து நிமிடங்களுக்குள் அவர் அதற்குத் தீர்வு கண்டு விடுவார். அதற்காக அவர் திருவனந்தபுரத்திற்கு வரவேண்டுமென்ற அவசியமேயில்லை. அவர் எங்கிருக்கிறாரோ அங்கிருந்தே உத்தரவு பிறப்பிப்பார். எந்த ஒரு சிக்கலான விஷயத்திலும் விரைவாக முடிவெடுப்பார். உடனே மின்னல் வேகத்தில் செயல்படுவார். சர்.சி.பிக்கே உரிய தனித் திறமை இது!

ஜூன் மாதம் நான் மீண்டும் திருவனந்தபுரத்திற்கு வந்தேன்.

ஒருநாள் தலைமைச் செயலகத்திற்குச் சென்றிருந்தேன். டில்லி நிகழ்ச்சிக்குப் பின் முதல்முதலாக நான் அங்குச் செல்கிறேன். ஆனால் அங்கு ஒரு பெரிய பூகம்பம் வெடிக்குமென நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)

மலையாள மூலம் : மாத்ருபூமி
தமிழில் : செங்கோட்டை ஜனார்த்தனன்

வாஸ்து, ஃபெங்ஷுயி

மொழி பெயர்ப்பு நகைச்சுவை சிறுகதை

ஆபீஸிலிருந்து வந்து பார்த்தேன். வீடு பூட்டியிருந்தது. நன்றாக மடித்த ஒரு மெல்லிய காகிதம் பூட்டுக்கும் கதவுக்கும் நடுவில் செருகியிருந்தது.

*'அன்புள்ள சி.எம், (என் மனைவி எனக்குக் கொடுத்த செல்லப் பெயர்)*

*சாவி பக்கத்து வீட்டில் இருக்கிறது. சாப்பாடு சமையலறையில் இருக்கிறது. காபி ஃபிளாஸ்கில் இருக்கிறது. இரவு ஏழு மணிக்குள் சாப்பாட்டு மேஜையில் எடுத்துவைக்கவும். நான் எட்டு மணிக்கு வருவேன். நான் வாஸ்து சாஸ்திர கிளாஸ் சேர்ந்திருக்கிறேன்.*

*இப்படிக்கு*
*கமலா*

பக்கத்து வீட்டம்மா திருமதி கிருஷ்ணன் என்னை பரிதாபமாகப் பார்த்து சாவியைக் கொடுத் தார்.



ஒரு பண்புள்ள கணவன் செய்ய வேண்டிய வேலைகளை செய்தேன். என் மனைவி வருவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

கமலா புன்னகை தவழும் முகத்துடன் வந்தாள். கண்களை பேப்பர் மீது வைத்து, காதுகளை தீட்டிக் கொண்டு தயாரானேன். இப்பொழுதெல்லாம், இந்தக் கலையில் வெகுவாகத் தேறிவிட்டேன். எந்தக் கலை என்கிறீர்களா? பேப்பர் படித்துக் கொண்டே, கமலா சொல்வதை ஒரு வார்த்தை விடாமல் கேட்கும் என் திறமையில் எனக்கு ரொம்பப் பெருமை.

''நான் ஸ்ரீ வாசுதேவன் நடத்தும் வாஸ்து சாஸ்திர கிளாஸில் சேர்ந்துவிட்டேன்.''

''ஏம்மா நீ கத்துண்டது எல்லாம் போறாதா?''

''இப்பதான் முதல் தடவையா வாஸ்து சாஸ்திரம் படிக்கறேன்.''

''அது சரிம்மா. நீ இதுவரை போய் வந்த கிளாஸ் கணக்கு சொல்றேன் கேளு. ஜூஸ் கிளாஸ், எம்பிராய்டரி கிளாஸ், பொம்மை செய்யும் கிளாஸ், ஊறுகாய் செய்முறை கிளாஸ், ஜாம் செய்முறை கிளாஸ்ன்னு முதல்ல போனே.

அப்புறம் திடீரென்று பாதைமாறி கர்நாட்டிக் பாட்டு கிளாஸ், ஹிந்துஸ்தானி பாட்டுகிளாஸ், பஜனை கிளாஸ், ஸ்லோகம் கிளாஸ் என்று போயிட்டே.

> "நாய் வாலை நிமிர்த்தமுடியுமா? நான் கமலாவோடு விவாதங்களை வைத்துக் கொள்வதில்லை. இந்த இருபத்தி ஐந்து வருட திருமண வாழ்வில் ஒரு தடவை கூட நான் பேசி ஜெயித்ததில்லை."

அப்புறம் இன்னும் கொஞ்சம் மேல்தட்டுக்கு போய் வேதம் படிக்கும் முறை, வேதாந்தம் கிளாஸ், பகவத் கீதை கிளாஸ், உபநிஷத் கிளாஸ் என்று போயிட்டே.

மறுபடியும் தடால்னு கீழே இறங்கி செய்வினைப் பொருட்கள் கிளாஸ், ரங்கோலி கிளாஸ், ஸ்வெட்டர் பின்னும் கிளாஸ், குரோஷா பின்னல் கிளாஸ்ன்னு போக ஆரம்பிச்சே.

கடைசியா சுற்றுப்புற சூழல் சுத்தம் பற்றிய கிளாஸ், குப்பையில் போட்ட பழைய பொருளை எடுத்து வந்து அதை புதிய பொருளாக மாற்றும் கிளாஸ். இப்பதானே முடிச்சுட்டு வந்தே'' மூச்சு வாங்க சொல்லிவிட்டு நிறுத்தினேன்.

கமலா எப்பொழுதும் எதற்கும் சரியான பதிலை வைத்திருப்பாள். ''இப்போ எனக்கு வயசாயிடுத்து. இந்தக் கைவேலையெல்லாம் செய்ய முடியாது. அதனால வாஸ்து கிளாஸுக்குப் போறேன்'' என்றாள்.

"நாய் வாலை நிமிர்த்தமுடியுமா? நான் கமலாவோடு விவாதங்களை வைத்துக் கொள்வதில்லை. இந்த இருபத்தி ஐந்து வருட திருமண வாழ்வில் ஒரு தடவை கூட நான் பேசி ஜெயித்ததில்லை."

அவளை வாழ்த்தி அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. நாளை வரப்போகும் ஆபத்தை நினைத்து பெருமூச்சு விட்டேன்.

ஒரு வாரமாக நான் நிம்மதியாகத்தான் இருந்தேன். தினமும் கமலா எங்கள் புறாக்கூட்டு பிளாட்டின் ஜன்னல், கதவுகளின் அளவெடுப்பதைப் பார்த்தேன். சாதாரணமாக அரைகுற்றை விஷய ஞானிகளிடம் எனக்கு பேசப் பிடிக்காது. அதனால் அவளிடம் 'என்ன ஏது' என்று கேட்கவில்லை.

ஞாயிறு அன்று நேரங்கழித்து எழுந்து கொள்வது ரொம்பப் பிடித்த விஷயம். வாரநாட்களில் அதிகாலையில் எழுந்து ஆபீஸுக்கு ஓடுபவன் நான். சனிக்கிழமை அன்று கிரிக்கெட் மேட்ச் கண் முழித்துப் பார்த்துவிட்டு அந்த ஞாயிறு அன்று சுகமான தூக்கம் போட்டுக் கொண்டிருந்தேன்.

திடீரென்று 'ஒளியும் ஒலியும்' நிகழ்ச்சியோடு என் மனைவி என்னை எழுப்பினாள். ஜன்னல் கதவுகளை 'படார் படார்' என்று திறந்தாள். விடிகாலை நேரத்து சுகமான, சோம்பேறித்தனமான தூக்கத்தில் இருந்த

என் கண்களில் சூரிய வெளிச்சம்!

''என்ன... என்ன?'' நான் அதிர்ந்து போய் எழுந்தேன்.

''ஒண்ணுமில்லை. நீங்க தூங்குங்கோ.''

''இத்தனை சத்தத்திலும் வெளிச்சத்திலும் நான் எப்படி தூங்கறது? மணி என்ன ஆச்சு?''

''அஞ்சரை.''

என் கோபம் தலைக்கேறியது. ''ஏம்மா இவ்வளவு சீக்கிரம் என்னை எழுப்பறே?''

''ஒண்ணுமில்லை. வாஸ்து சாஸ்திரத்திலே கிழக்குப் பக்கம் இருக்கிற ஜன்னலைத் தொறந்து வைக்கணும்னு சொல்லியிருக்கு.''

என் கோபத்தை அடக்கிக் கொண்டு எத்தனை நிதானமாகக் கேட்க முடியுமோ, அத்தனை நிதானமாகக் கேட்டேன்.... ''ராத்திரியே ஏம்மா ஜன்னலை தொறந்து வைக்கலை?''

''திருடன் உள்ளே வந்துட்டா?'' கமலாவின் பொறுமை பிரசித்தம்!

''எப்படியோ எழுந்தாச்சு இல்லையா? இன்னிக்கி பரண் சாமான்களை எல்லாம் சுத்தம் செஞ்சுடலாம்.''

''என்னது? கார்த்தால அஞ்சரை மணிக்கு பரண் சுத்தம் செய்யணுமா?'' என்னால் நம்பவே முடியலை.

''இல்லை இல்லை. முதல்ல காபி குடிச்சுட்டு அப்புறம் ஆரம்பிக்கலாம்'' பேச்சு வராமல் முழித்தேன்.

வெகு சீக்கிரத்தில் நான் ஏணியில் ஏறி நின்றிருந்தேன். என் தலை பரணுக்குள் மாட்டிக் கொண்டிருந்தது. கீழே என் மனைவியிடமிருந்து கட்டளைகள் பறந்து வந்து கொண்டிருந்தன.

எல்லைப் பகுதியைக் காக்கும் ராணுவ வீரன், எதிரிகளின் குண்டுகளிலிருந்து தலை தப்பிக்க, பதுங்கு குழியில் தலையை மறைத்துக் கொள்வதைப் போல, என் தலை பரணுக்குள் பதுங்கியிருந்தது. மலையடிவாரத்திலிருந்து உத்தரவுகள் பிறப்பிக்கும் ராணுவ ஆபீசரைப் போல என் மனைவி உத்தரவுகள் கொடுக்க ஆரம்பித்தாள்.

முதல் கட்டளை ''அட்டைப் பெட்டி நம்பர் ஒன் எழுதியிருக்கு பாருங்கோ, அதிலே இருக்கிற சாமானையெல்லாம் எடுத்து, அது என்ன சாமான் அப்படின்னு சொல்லுங்கோ.''

''நீ என்ன பண்ணப்போறே? கீழே ஜாலியா நின்னுண்டு வேடிக்கை பார்க்கப் போறியா?'' என் வயிற்றெரிச்சல் தீரக் கேட்டேன்.

''சி.எம். என் கையில் ஒரு பட்டியல் இருக்கு. அதை சரி பார்த்து, வேண்டாத சாமான்களையெல்லாம் தூக்கிப் போடணும் அவ்வளவுதான்!''

''போன வருஷம் நீதான் எல்லாத்தையும் எடுத்து அட்டைப் பெட்டியில் அடுக்கி, கட்டி, மேலே வைக்கச் சொன்னே?''

காலை பத்து மணிக்குள் எனக்கு பாதி உயிர் போன மாதிரி இருந்தது. வந்த கோபத்தில் எல்லா சாமான்களையும் எடுத்து மேலேயிருந்து என் மனைவி தலையில் போடவேண்டும் போல தோன்றியது.

என் அன்பு மனைவி என்னைப் புரிந்துகொண்டு, இட்லி, சட்னி, சாம்பாரை மேலே அனுப்பினாள். ஏணிப்படியிலேயே உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டேன். நான் சாப்பிட்டு முடித்த உடனே ''சி.எம், நேரமாச்சு, சீக்கிரம் ஏணியில ஏறி பரண்ல நுழைஞ்சு சாமான்களை எடுக்கணும்.''


''மறுபடியுமா? எதுக்கு?''

''என்ன சி.எம் இது? வேண்டாத சாமானை எடுத்து குப்பையில போடணும்னு எத்தனை தடவை சொல்றது?''

''இந்த சாமானெல்லாம், நீ ஒவ்வொரு கிளாஸாகப் போய் கஷ்டப்பட்டு பண்ணினது. பொம்மைகள், கலர் கலரா நீ வர்ணம் தீட்டின துணிகள், நீ கையால செய்த பேப்பர் பைகள், துணிப்பைகள், எம்பிராய்ட்ரி செய்து நைந்து போன துணிகள், நம்ப குப்பையிலிருந்து எடுத்து புதிதாய் செய்த குப்பைகள், அடுத்த பெட்டியில் நம்ப குழந்தைகள் எல்.கே.ஜி, யூ.கே.ஜியிலிருந்து படித்த புஸ்தகங்கள். இப்போ அவா குழந்தைகள் ஸ்கூல் போயிண்டிருக்கா. மீதி இருக்கிற நாலு அட்டை பெட்டிகள் நிறைய நம்ப குழந்தைகளுக்கு வந்த பரிசுப் பொருட்கள். வேண்டாத சாமான்களையெல்லாம் நம்ப நண்பர்கள் பரிசுப் பொருட்களாக்கி நம்ப தலையில கட்டியிருக்கா. இதை நாம எடுத்து பரண்ல வெச்சிருக்கோம்.''


இருட்டில் பரணுக்குள் உற்றுப்பார்த்து என் கண்களின் எரிச்சலில் கோபம் அதிகமாகியது.

''வாஸ்து சாஸ்திரத்துல தெளிவா, எந்த குப்பைகளும் நம்ப தலை மேலே இருக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கு. இனிமே இந்த சாமானெல்லாம் வேண்டாம்னு சொன்னா புரிஞ்சுக்கவே மாட்டேங்கறேள்.''



''நிஜமாதான் சொல்றியா?'' என்னால நம்ப முடியலை. ஆனால் போன வருடம் நான் செய்த வேலைகளை நினைத்து என் முதுகு அழுதது.

''சத்தியமா சொல்றேன். எல்லாத்தையும் தூரப் போடலாம். எனக்கு மகிழ்ச்சியில் தெம்பு கூடியது. ''இந்தா பிடிச்சுக்கோ'' ஒவ்வொரு சாமானாகக் கீழே போட்டேன். மாலை வரை விடாமல் வேலை செய்தேன்.



அன்றிரவு எங்கள் வீடு குண்டுகள் பொழிந்த யுத்த பூமியைப் போல இருந்தது. காலியான அட்டைப் பெட்டிகள், கசங்கிய காகிதங்கள், உடைந்த பொம்மைகள், பழைய புத்தகங்கள் என்று இறைந்து கிடந்தன.

இரவு நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தேன். யாரோ விசும்பும் குரல் கேட்டு எழுந்தால், கமலா படுக்கை அருகில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

''என்னம்மா ஆச்சு?'' பயந்து போய்க் கேட்டேன்.

''ஒண்ணுமில்லை. இந்த சாமானையெல்லாம் பார்த்து நம்ப குழந்தைகள் ஞாபகம் வந்துடுத்து. நம்ப ரமேஷ் சின்ன வயசுல இந்த கிரிக்கெட் பேட் வெச்சு விளையாடுவான். உங்களுக்கு ஞாபகம் இருக்கா? அடுத்த சச்சின் டெண்டுல்கர் நம்ப ரமேஷ் தான்னு நினைச்சேன். ம்... ஆனா அவன் இன்ஜினீயராயிட்டான்'' கமலா கண்களை துடைத்துக் கொண்டாள்.

''அழுக்கு கரடி பொம்மையை எடுத்துப் பார்த்தேன். நம்ப காமினி எப்பவும், இந்த பொம்மையை கையில வெச்சிருப்பா. ஞாபகம் இருக்கா'' என் செல்ல மகளை நினைத்து அந்தக் கரடி பொம்மையை தடவிக் கொடுத்தேன்.

கண்ணீருடன் என் மனைவி புன்னகைத்தாள். ''நீங்க ஊரில இல்லாத போது இந்தக் கரடி பொம்மைதான்



அவளுக்கு அப்பா.''

எனக்கு பதிலாக இந்தக் கரடி பொம்மையா? ''நீங்க டூருக்கு போன போதெல்லாம், இந்த பொம்மைக்கு குட்நைட் சொல்லுவா.''

நானில்லாதபோது, என் இடத்தைப் பறித்த அந்தக் கரடி பொம்மையை பொறாமையுடன் பார்த்தேன். ''இதை வேணா வெச்சுக்கலாமா?''

''வேண்டாம் எல்லா குப்பைகளையும் தூரப் போட்டே ஆகணும்.'' கமலா தீர்மானமாக சொல்லி விட்டாள்.

பரணும் எங்கள் வீடும் 'பளிச்'சென்று ஆகி விட்டது. இனிமேல் நான் சாமான்களைக் கட்டி, ஏணியில் ஏறி, பரண்மேல் வைத்து... அப்பப்பா, இனிமேல் முதுகு வலி வராது. 'விடுதலை... விடுதலை... விடுதலை' என்று பாடவேண்டும் போலத் தோன்றியது.

கமலா போய் வந்த ஏகப்பட்ட கிளாஸில் வாஸ்து சாஸ்திர கிளாஸ்தான் உருப்படியானது. என் மனைவி 'டிப்ளமோ இன் வாஸ்து சாஸ்திரம்' வாங்கிய பொழுது நான் பெருமிதம் அடைந்தேன்.

அடுத்த வாரம் ஆபிஸிலிருந்து வரும் பொழுது வீடு பூட்டியிருந்தது. எப்பொழுதும் போல ஒரு சிறிய குறிப்பு பூட்டுக்கும் கதவுக்கும் நடுவில் சொருகியிருந்தது. எனக்கு கை, கால்கள் நடுங்கத் துவங்கின. மூச்சே நின்றுவிட்டது போல இருந்தது.

''அன்புள்ள சி.எம்,

*நான் ஃபெங்ஷுயி கிளாஸில் சேர்ந்திருக்கிறேன். நான் வரத் தாமதமாகும். பக்கத்து வீட்டில் சாவி வாங்கி, செய்ய வேண்டியதை செய்து வைக்கவும்.*

இப்படிக்கு கே.சி.எம்

கமலா உள்ளே வரும் பொழுதே, ''உங்களுக்குத் தெரியுமா? சைனீஸ் ஃபெங்ஷுயி நம்ப வாஸ்துவை விட நல்லாயிருக்கு.''

''அப்படியா சைனீஸ்காரா என்ன சொல்றா? நாம தூரப் போட்ட சாமானையெல்லாம் உள்ளே எடுத்துண்டு வரணுமா? அதே மாதிரி அவா நம்ப நாட்டின் எல்லையில் பிடுங்கிக் கொண்ட இடத்தை நம்பளுக்கு திருப்பிக் குடுத்தா நன்னாயிருக்கும்'' எனக்கு பட படப்பாக இருந்தது.



''ஃபெங்ஷுயிக்கும், நம்ப நாட்டு எல்லைக்கும் என்ன சம்பந்தம் இருக்கு? எனக்கு புரியவேயில்லை. அதை விடுங்கோ. என்ன சாமானெல்லாம் வாங்கணும்னு 'லிஸ்ட்' போட்டு குடுத்திருக்கா.''

என் அன்பு மனைவி பெரிய பட்டியலை எடுத்துப் படித்தாள். ''நாம ஒரு மீன் தொட்டி, ஒரு நிற்கும் புத்தர் சிலை, சிரிக்கும் புத்தர், ஒவ்வொரு அறைக்கும் காற்றில் ஆடும் மணி, ஒரு சின்ன தண்ணீர் நீர் வீழ்ச்சி...''

நான் மயங்கி விழுந்து விட்டதால் மீதியைக் கேட்க முடியவில்லை.

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**

*(ஈவ்ஸ் டச் - இதழிலிருந்து தமிழில்..... கதாசிரியரே தமிழில் மொழி பெயர்த்தது)*

நேயர் கேள்வி

# தென்கச்சி பதில்கள்


■ சுரேஷ் குமார், மைலாப்பூர்.

★ அந்தக்கால அரசியல்வாதிக்கும் இந்தக் கால அரசியல்வாதிக்கும் என்ன வித்தியாசம்?

● ஒரு முதலமைச்சர். அவருக்குத் திடீர் என்று நெஞ்சுவலி. அரசுப் பொது மருத்துவமனையிலிருந்து டாக்டர் வந்தார். முதல்வரைச் சோதிக்க முயல்கிறார். அதற்கு முன்னதாக முதல்வரின் உதவியாளர் ஓர் ஒப்பந்தப் பத்திரத்தை நீட்டுகிறார்.

''டாக்டர்! இதில் கையெழுத்திடுங்கள்!''

அதை வாங்கிப்படித்துப் பார்க்கிறார் டாக்டர்.



அதில் எழுதப்பட்டிருந்தது இப்படி:

''டாக்டர்! நீங்கள் எனக்கு சிகிச்சை அளித்த பிறகு, நீங்களோ உங்கள் குடும்பத்தினரோ எந்தச் சூழ்நிலையிலும் என்னிடம் எதற்காகவும் சிபாரிசு கேட்டு வரக்கூடாது. வரமாட்டோம் - என்று ஒப்புக் கொள்வதற்கு அடையாளமாக இங்கே கையெழுத்திடவும்.''

டாக்டரின் பெயர். இரத்தினவேல் சுப்பிரமணியம்.


முதல்வரின் பெயர். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

■ சரவணன், சின்னமனூர்

★ என்னுடைய இருபத்தேழு வருட வாழ்க்கையில் நான் நினைத்தது எதுவும் நடக்கவில்லை என்பதால் மனம் சோர்ந்து போயிருக்கும் எனக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

● உங்கள் மனம் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. நடக்காதவை எவை என்று மட்டுமே அது உங்களுக்குப் பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது. நடந்தவை எவை என்பதை உங்களிடமிருந்து அது மறைத்துவிடுகிறது.





விழித்துக் கொள்ளுங்கள். உண்மை புரியும். இன்னொரு உலகியல் உண்மையையும் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

அது: "Everything is interesting If you are interested!"

■ ஆர்.ஆர். சாமி, திருவண்ணாமலை

★ உங்களுக்கு மிகவும் பிடித்தது நேர்மையா? திறமையா?

● அதைவிட முக்கியமான ஒன்று இருக்கிறது. அதன் பெயர் பெருந்தன்மை.

ராஜாஜி முதலமைச்சராக இருந்த சமயம் நாகர்கோவிலுக்குப் போயிருந்தார். அங்கேயிருந்த தம்முடைய நண்பர் ஒருவரைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் கொண்டார். அதிகாரிகளிடம் அதைத் தெரிவித்தார். அவர்கள் சொன்னார்கள்.

''நீங்க ஏன் அவ்வளவு தூரம் போகணும்? நாங்க போய் அவரை இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடுகிறோம்.''

''அது சரியல்ல... அவர் கவிஞர்... எனது நண்பர்... அவரை அவர் வீட்டிற்குப் போய் சந்திப்பது தான் முறை. புறப்படுங்கள்!''

புறப்பட்டார்கள். போய்ப் பார்த்தார்கள்.

அந்தக் கவிஞர்: கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

■ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

★ தேர்தலில் உங்கள் வாக்கு யாருக்கோ?

● இதுவரையில் நான் ஓட்டுப் போட்ட எவரும் வெற்றி பெற்றதில்லை. பல சமயம் டெபாசிட்டைக் கூட இழந்திருக்கிறார்கள்.

அதற்குக் காரணம், கட்சி எது என்று பார்க்காமல் நல்லவர் யார் என்று மட்டும் பார்த்து வாக்களித்து விடுகிறேன்... அதுதான் தோல்விக்குக் காரணம்.

■ பொன்னாபுரம் சி. சிவக்குமார் பிரபு

★ இருந்தும் இல்லாதவர் யார்?

● இன்றைய வாக்காளர்தான் இருந்தும் இல்லாதவர்!

இல்லாதவர்களிடம் வாக்குரிமை இருந்தும் சரியான வாழ்க்கை இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

கடவுளின் ஆட்சியிலும் தேர்தல் உண்டு என்கிறார் ஒரு நீக்ரோ ஞானி. அங்கு மூன்று ஓட்டுகளே செல்லுபடியாகுமாம்!

''கடவுள் உங்களுக்கு ஆதரவாக ஓட்டளிப்பார். சாத்தான் எதிர்த்து ஓட்டளிப்பார். உங்கள் ஓட்டுத்தான் உங்கள் தலைவிதியை முடிவு செய்யும்!''

■ பார்கவி, திருச்சி - 17

★ சமீபத்தில் தங்களை மனம்விட்டு சிரிக்க வைத்த சம்பவம் ஏதேனும் உண்டா?

● நானும் சில நண்பர்களும் சிக்கிம் மாநிலம் சென்றிருந்தோம். ஒரு டாக்சி டிரைவர் சொன்னார்.

''அதோ தெரிகிறது பாருங்கள் ஒரு கட்டிடம்... அங்கே நீங்கள் தங்கினால் இலவச சாப்பாடு... தங்குவதற்கும் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை!''

''ஓ...! அது என்ன தர்ம சத்திரமா?''

''இல்லை... சிக்கிம் ஜெயில்!''


■ ஆடுதுறை கோ. ராமதாஸன்

★ அறிவையும் அறிவது சாத்தியப்படுமா?

● அறிவு என்றால் என்ன? என்று கன்ஃபூசியஸிடம் சீடர் ஒருவர் கேட்டார். இதற்கு அவர் சொன்ன விளக்கம்:

''தனக்குத் தெரிந்ததைத் தெரியும் என்றும் தெரியாததைத் தெரியாது என்றும் அறிவதுதான் அறிவு''

எனவே உங்கள் கேள்விக்கு 'சாத்தியப்படும்' என்பதே சரியான பதில்.



■ எம்.எஸ். சேகர், நீலிக்கோணாம்பாளையம்

★ உடும்புப்பிடி என்கிறார்களே... அது ஒரு மனிதனுக்கு எப்போது தேவைப்படுகிறது?

● மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்கிற போது அது அவசியம் தேவைப்படுகிறது!




■ கா. திருமாவளவன், திருவெண்ணெய் நல்லூர்

★ நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள என்ன செய்யவேண்டும்?

● அறிந்து கொண்டதையெல்லாம் அவ்வப்போது அசைபோட வேண்டும். எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

ஒருவன் விமான டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்துவிட்டான்.



பிறகு ஓடிப்போய் கவுண்டரில் கேட்டான்.

''மேடம்! தவறுவதலாக அங்கே போய்விட்டேன்... அடுத்த விமானத்துக்கு இதை மாற்றித்தர முடியுமா?''

''சாரி சார்! இப்ப நீங்க வந்திருக்கிறது பஸ் ஸ்டாண்ட்!''

★

■ பி. சிவக்குமார் பிரபு, திருப்பூர்

★ வாழ்க்கையின் வெற்றிக்கு படிப்பறிவு உதவுமா? அனுபவ அறிவு உதவுமா?

● முதலில் பாடம் - பிறகு பரீட்சை - இது படிப்பறிவு.

முதலில் பரீட்சை - பிறகு பாடம் - இது அனுபவ அறிவு.

படிப்பறிவு விசாலமானது.

அனுபவ அறிவு ஆழமானது.

வாழ்வின் வெற்றிக்கு இரண்டுமே தேவைதான்.

## பளிங்குக் கண்

''பிரபல ஆசிரியரான ஆஸ்கார் ஒயில்டும் ஓவியரான விஸ்லரும் நேற்று பிரைட்டனில் சந்தித்து வழக்கம்போல் தங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்'' என்ற ஒரு செய்தி ஆங்கில தினசரி பத்திரிகைகளில் வெளிவந்தது. அந்தச் செய்தியைக் கத்தரித்து ஆஸ்கார் ஒயில்டுக்கு அனுப்பி ''ஏன் ஆஸ்கார்! இந்தப் பத்திரிகைக்காரர்கள் சரியாக எழுதக் கூடாதா? நாம் இருவரும் என்னைப் பற்றித் தானே பேசிக் கொண்டிருந்தோம்?'' என்று விஸ்லர் கடிதம் எழுதினார்.

அதற்கு ஆஸ்கார் ஒயில்டு ''ஆம் விஸ்லர்! நாமிருவரும் நேற்று உம்மைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம். ஆனால் நான் என்னைப் பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்!'' என்று தந்தி கொடுத்தார்.

புதுவை. கே.என். மகாலிங்கம்

# வல்லாரை

## வலிமை தரும்

மனிதனுக்கு தேவையான சத்துக்கள், வைட்டமின்கள், தாதுப் பொருட்களை தாராளமாகக் கொண்ட கீரைகள் ஆரோக்கியத்தைத் தருவது மட்டுமின்றி உடல் வனப்பையும் வலிமையையும் தருகின்றன. அந்த வகையில் வல்லாரை மிகவும் சிறப்பானது. வல்லாரை என்றதுமே நம் நினைவுக்கு வருவது ஞாபகசக்தி. ஞாபக சக்தி மற்றும் மூளை பலத்தைத் தருவதிலும் இக்கீரைக்கு இணை வேறு எதுவும் இல்லை. எனவேதான் இக்கீரை சரஸ்வதி கீரை என அழைக்கப்படுகிறது. இக்கீரை எவ்விதமாக ஞாபகம் மற்றும் மூளையோடு தொடர்பு கொண்டுள்ளது என ஆய்வுகள் பல நடத்தப்பட்டு, இதிலிருந்து பல்வேறு மருந்துகளும் இன்று நவீன முறையில் தயாரிக்கப்படுகின்றன.

வல்லாரை இந்தியாவின் மிகப் பழமையான கீரை. இதன் தாயகம் இந்தியா மற்றும் இலங்கைப் பகுதிகள். நீர் நிறைந்துள்ள பகுதிகளிலும், குளங்கள், வயல் வரப்பு போன்ற பகுதிகளிலும் தானாகப் படர்ந்து காணப்படும். இக்கீரை, தரையோடு ஒட்டிப் படர்ந்து அதன் பின் வேர் விட்டுக் காணப்படும். இலை - இளம் பச்சை நிறத்திலும், ஓரம் வளைந்தும், நெளிந்தும், பூக்கள் - சிறியதாகவும் சிவப்பு நிறத்திலும், அடிக்காம்பு பச்சையாகவும் காணப்படும்.

இதன் தாவரவியல் பெயர் - செண்டுலா ஏசியாடிகா.


இந்தியன் பென்னிவொர்த் (ஆங்கிலம்) குலாகுடி (இந்தி) பாபஸா (தெலுங்கு) துல்கர்ஹி (வங்காளம்) குடகம் (மலையாளம்) வொண்டலாகி (கன்னடம்) போன்ற பெயர்களும் வல்லாரைக்கு உண்டு.

தமிழில் யோசனை, வல்லி, கசப்பி, பின்டீரி என்றும் சொல்லப்படுகிறது.

**இதில் அடங்கியுள்ள சத்துக்கள்:**

நீர்ச்சத்து -845%, புரதச்சத்து -21%, கொழுப்புச்சத்து - 0.5 %, நார்ச்சத்து - 42 %, மாவுச்சத்து - 6.0 %, தாது உப்புக்கள் - 27 % அளவிலும் உள்ளன. மேலும் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, மணிச்சத்து, சோடியம், குளோரின் போன்ற சத்துக்களும் உள்ளன. வைட்டமின் ஏ, பி, சி போன்றவைகளும் வல்லாரையில் உண்டு.

வல்லாரை இலையிலிருந்து ஒரு வகையான எண்ணை எடுக்கப்படுகிறது. இந்த எண்ணை தோல் பதனிடும் தொழிலில் பயன்படுகிறது. மேலும் கால்நடை தீவனமாகப் பயன்படுகிறது.



வல்லாரை இலைகளை வெறுமனே மென்று தின்னலாம். சாறு எடுத்து வெறும் சாறாகவோ அல்லது தேனில் கலந்தோ அருந்தலாம். இலைகளோடு உப்பு, மிளகு, புளி சேர்த்து துவையலாகச் செய்து உண்ணலாம். மோர்க்குழம்புடன் சேர்த்தும் உண்ணலாம். கூட்டு தயாரிக்கலாம். சூப் செய்து அருந்தலாம். வடை செய்யலாம். இவைதவிர, வல்லாரை கை மருத்துவம், சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளில் பொடியாக, கசாயமாக, காப்சூல்களாகவும் தயாரிக்கப்பட்டு மருந்தாகப் பயன்படுகிறது.

**குணங்கள்**

வல்லாரை ஒரு சிறுநீர்ப் பெருக்கி. உடலுக்கு நல்ல உரம் உண்டாக்கி, உடலைத் தேற்றி, இரத்தவிருத்தியும் செய்கிறது. தோல், நரம்புநோய்களை குணப்படுத்தும். வயிற்றுப்புண்களை ஆற்றும். இரத்த சோகையை குணப்படுத்தும். வெட்டை சூட்டைத் தணிக்கும். கண் எரிச்சலை நீக்கும். மூளை இயக்கத்தை மேம்படுத்தும். சுறுசுறுப்பை தரும். உடல் வலிமையைத் தரும்.

**மருத்துவ பயன்கள்:**

*1)* வல்லாரை இலைகளை அரைத்து, புண்கள் மேல் பூசி வர புண்கள் ஆறும்.

*2)* இலைகளைத் தின்று வர உடல் உஷ்ணம் நீங்கும்.

*3)* கீரையை அரைத்து ஒரு கப் பசும்பாலில், பட்டாணி அளவில் கலந்து காலை, மாலை இரு வேளை வீதம் ஒன்பது நாள் அருந்த மாலைக்கண் நோய் குணமாகும்.

*4)* கீரையை அரைத்து சொறி, சிரங்கு மேல் பூசி வர இவை மாறும்.

*5)* வெண்தாமரைப் பூக்களை நீரிலிட்டு (கைப்பிடி பூவுடன் அரை லிட்டர் நீர்) காய்த்து வடிகட்டி ஒரு

> ...க்கு நல்ல ...ம் உண் ...ராக்கி, உட... லைத் தேற்றி, இரத்தவிருத்தியும் செய்கிறது.

கப் கஷாயத்துடன் ஒரு ஸ்பூன் வல்லாரை இலைச் சாறை கலந்து காலை மாலை 15 நாட்கள் சாப்பிட்டு வர இதயம் பலம் பெறும்.

6) கைப்பிடி அளவு வல்லாரை இலை, இதே அளவு மணத்தக்காளி கீரை எடுத்து அரைத்து சாறு பிழிந்து காலை மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர இரண்டு வாரத்தில் இரத்த சோகை நீங்கும்.

7) வல்லாரை இலைகளை அரைத்து தினசரி காலை நெல்லிக் காயளவு வீதம் 21 நாள்கள் சாப்பிட வாய்வு விரை வீக்கம் தீரும்.

8) வல்லாரை இலைத்தூளுடன் சோம்புத்தூள் (சிட்டிகை அளவு) கலந்து தின்று, வெந்நீர் குடித்து வர உஷ்ண வயிற்று வலி தீரும்.

9) வல்லாரைப் பொடியுடன் (10 கிராம்) அதிமதுரத்தூள் (5 கிராம்) கலந்து இரவில் தூங்கப் போகும் முன் தின்று வெந்நீர் குடிக்க மலச் சிக்கல் தீரும்.

10) வல்லாரையை பால் விட்டு அரைத்து காலை, மாலை சாப்பிட இளமை பெருகும்.

11) சம அளவு வல்லாரை துளசி இலை (கைப்பிடி வீதம்) எடுத்து பத்து மிளகு சேர்த்து அரைத்து சிறிய உருண்டைகளாக உருட்டி காய வைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். காய்ச்சல் ஏற்பட்ட நேரத்தில் ஒரு நாள் மூன்று வேளை இரண்டு உருண்டைகள் வீதம் தின்று வெந்நீர் குடிக்க காய்ச்சல் குறையும்.

12) வல்லாரைக் கீரையை தினசரி காலையில் ஓரிரு இலைகள் தின்று வர உடல் வலிமை பெறும்.

13) வல்லாரைப் பொடியை சுடு நீரில் கலந்து அல்லது பாலில் கலந்து அருந்தி வர உடம்பில் சொறி சிரங்கு போன்றவை ஏற்படாது.

14) வல்லாரை இலைச் சாறுடன் தேன் கலந்து சிறுவர்க்கு கொடுத்து வர ஞாபகசக்தி கூடும். சுறுசுறுப்பு ஏற்படும்.

15) வல்லாரை இலைப் பொடியுடன் தேன் சேர்த்து சாப்பிட உடல் இயக்கம் சிறப்பாகும். மூளை சுறுசுறுப்பு ஏற்படும்.

16) இதன் இலைகளை துவையலாக அரைத்து சாப்பிட உடல் குளிர்ச்சி பெறும். கண் குளிர்ச்சி பெறும்.

17) வல்லாரை கஷாயம் உடல் சூட்டைத் தணிக்கும்.

18) வல்லாரைக் கீரையை குழம்பாக, கூட்டாக செய்து சாப்பிட்டு வர உடல் ஆரோக்கியமாகும். இரத்தவிருத்தி ஏற்படும். கண் எரிச்சல் தீரும்.

– அகஸ்தீஸ்வரம் அனந்தகுமார்







# தலையின் மதிப்பு


கலிங்க ராஜ்யத்தை ஆண்டவர் அசோகர். ஒரு சமயம் மந்திரியுடன் நகர்வலம் சென்றார். வழியில் ஒரு புத்த சந்யாசியைக் கண்டார். அவர் அருகில் சென்று அவரின் பாதங்களில் தனது தலையை வைத்து பக்தியுடன் வணங்கினார்.

மாமன்னரான அசோகரின் இச்செயல் அவருக்கு பெருமை சேர்ப்பதாக இல்லை என்று மந்திரி நினைத்தார். பிறகு இருவரும் நகர்வலம் முடித்து திரும்பினார்கள். அரண்மனைக்கு திரும்பிய மன்னரிடம் மந்திரி சொன்னார் : ''மகாராஜா தாங்கள் ஏன் அவ்வாறு நடந்து கொண்டீர்கள்'' என்றார். அசோகர் மெலிதாகப் புன்னகைத்தார்.

நாட்கள் சென்றன. ஒரு நாள் மந்திரியை அரசர் அழைத்தார். ''மந்திரி, எனக்கு மனிதன், ஆடு, புலியின்

தலைகள் வேண்டும். சீக்கிரம் கொண்டு வாருங்கள்'' என்றார்.

மந்திரி ஆச்சர்யம் அடைந்தார். ஆயினும் கொஞ்சம் பணம் தந்து மாமிசக் கடையிலிருந்து ஆட்டின் தலையைப் பெற்றார். காட்டிற்குச் சென்று வேட்டையாடி புலியைக் கொன்று தலையை எடுத்துக் கொண்டார். மயானத்திற்குச் சென்று அப்போது தான் இறந்திருந்த மனிதனின் தலையை வெட்டி எடுத்துக் கொண்டார்.



மூன்று தலைகளையும் எடுத்துக் கொண்டு மகாராஜாவின் முன் வந்தார். தலைகளைப் பார்த்த ராஜா சொன்னார் : ''நல்லது. இப்போது நீங்கள் கடைவீதிக்குச் சென்று மூன்று தலைகளையும் விற்று வாருங்கள்'' என்றார். அவற்றை எடுத்துக் கொண்டு மந்திரி கடைவீதிக்குச் சென்றார்.

மாமிசம் உண்பவர் ஒருவர் ஆட்டின் தலையை வாங்கிக் கொண்டார். அலங்காரப் பிரியரான ஒருவர் புலியின் தலையை வாங்கினார். இந்தத் தலையை என் வீட்டின் முன் பகுதியில் வைப்பேன் என்று அவர் நினைத்துக் கொண்டார். ஆனால் மனிதனின் தலையை யாரும் வாங்கவில்லை.

நினைத்தது நடக்காமல் மந்திரி அரண்மனை திரும்பி அரசரிடம் நடந்ததைச் சொன்னார். மீண்டும் அரசர் சொன்னார். ''இப்போது நீங்கள் இந்தத் தலையை இலவசமாகக் கொடுத்து விட்டு வாருங்கள்'' என்றார்.

மந்திரி மீண்டும் கடைவீதிக்குச் சென்று இலவசமாகத் தலையைப் பெற்றுக் கொள்ளும்படி கூறினார். முக்கிய வீதிகளில் சென்று கூடச் சொன்னார். ஆனால் ஒருவர் கூட இலவசமாகப் பெற்றுக் கொள்ள முன் வரவில்லை. மாலை வரை முயற்சித்த மந்திரி தோல்வியுடன் அரண்மனை திரும்பினார்.

மந்திரியைக் கண்ட அரசர் சொன்னார். ''இப்பொழுது ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். உயிருடன் வாழும் வரைதான் மனிதனுக்கு மதிப்புண்டு. இறந்த பின்னால் அவன் பிரயோஜனம் அற்றவனாகி விடுகிறான். அவன் தலை ஒரு விராட்டியின் மதிப்பைக் கூட பெறுவதில்லை. அதனால்தான் நான் உயிருடன் இருக்கும் போதே நல்லோர்கள் மற்றும் மகாத்மாக்களின் பாதத் தாமரையில் தலையை வைத்து வாழ்வின் பயனை அடைய முயல்கிறேன்.''

மந்திரிக்கு மனிதத் தலையின் மதிப்பு புரிந்தது.



# யாருக்கு வெற்றி



ஒரு கிராமத்தில் பந்தயம் கட்டி ஜெயிப்பதிலே நிபுணத்துவம் வாய்ந்த ஒரு இளைஞன் இருந்தான். அவனை யாராலும் பந்தயத்தில் ஜெயிக்க முடியாது என்ற நிலை இருந்தது. கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து அவனை சோதிக்க நினைத்தனர். அதற்காக ஒரு நாளையும் தேர்ந்தெடுத்தனர். அந்த நாளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் எல்லோரும் கூடினர். ஊர் மக்களுடன் ஒரு காவல் அதிகாரியும் இருந்தார். பந்தயம் ஆரம்பமானது.

பந்தயம் கட்டுவதில் சாமர்த்தியனான அந்த இளைஞன் சொன்னான். ''இங்கே அமர்ந்திருக்கும் காவல் அதிகாரியின் மார்பிலே ஒரு மச்சம் இருக்கிறது. நான் சொல்வது உண்மையானால் நீங்கள் எனக்கு ஐநூறு ரூபாய் தரவேண்டும். ஒரு வேளை அது உண்மை இல்லாது போயின் நான் உங்களுக்கு ஐநூறு ரூபாய் தருகிறேன்'' என்றான்.

இதை (ஊர்) மக்கள் ஒத்துக் கொண்டார்கள். மக்கள் காவலதிகாரியிடம் கேட்டுக் கொண்டார்கள்... ''ஐயா தயவுசெய்து தங்கள் சட்டையை நீங்குங்கள்.''

ஊர் மக்கள், பந்தயம் கட்டியவன் மற்றும் பெரியோர்கள் கூடியிருந்தார்கள். மக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து அவர்களை சந்தோஷப்படுத்தும் முகமாக அவர் தனது சட்டையை கழற்றினார். நன்கு பார்த்தும் ஒரு மச்சம் கூட அவர் மார்பில் இல்லை. மார்பில் மச்சம் இல்லாததை மக்களும் கண்டார்கள். அவனிடத்தில் சொன்னார்கள்: ''இந்தப் பந்தயத்தில் உன்னை ஜெயித்து விட்டோம்...''

இளைஞன் உடனே தன் பையிலிருந்து ஐநூறு ரூபாயை எடுத்து மக்களிடம் தந்தான். பிறகு வெற்றிக் களிப்பில் சிரித்தவாறு மக்களைப் பார்த்துச் சொன்னான்... முன்பே பெரிய பணக்காரரிடம் ஒரு பந்தயம் கட்டியிருந்தேன். அது யாதெனில் மக்களின் மத்தியிலே இந்தக் காவலரின் சட்டையைக் கழற்றுவேன். அதற்காக ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று சொல்லியிருந்தேன். அதை இப்போது செய்து விட்டேன். இப்போது உங்களிடம் ஐநூறு தந்தாலும் கூடுதலாக எனக்கு ஐநூறு ரூபாய் கிடைத்து விடும். எனவே இப்போதும் நானே ஜெயித்து விட்டேன்'' என்றான். ●

தமிழில்: குச்சனூர் தி. கோவிந்தராஜ்

*சமஸ்க்ருத மூலம்: ஸம்பாஷண சந்தேச: (சமஸ்க்ருத மாதப் பத்திரிகை)*

# வெற்றி தரும் பத்துக் கட்டளைகள்

வெற்றி அடைந்தவர்கள் நிரந்தரமாகப் பேசப்படுவதற்குக் காரணம், அவர்கள் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் நேர்கோட்டில் பயன்படுத்தி அறிவை ஆற்றலாக்கி அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள். நீங்கள் எப்போது நிகழ்த்தப் போகிறீர்கள்? அதற்கு மன உறுதி, தன்னம்பிக்கை, விடாமுயற்சி வேண்டும். இதில் வெற்றிகண்ட நாடு ஜப்பான். காரணம் நேரத்தைப் போற்றினார்கள். கூட்டாக மனித வளம் நாட்டு வளர்ச்சியில் அர்ப்பணித்துக் கொண்டார்கள். இதைத்தான் லெபனான் நாட்டுக் கவிஞர் கலீல் கிப்ரான்,

"நீ, நாடு என்ன செய்தது என்று கேட்காதே! நீ, நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேள்" என்று சொல்லிக் கொடுத்தவர். அதை மக்கள் முழக்கமாக்கியவர் அமெரிக்க நாட்டுத் தலைவர் கென்னடி.

வரலாறு என்பது எழுதப்படுவது அல்ல; அது நிகழ்த்தப்படுவது. இத்தாலி நாட்டு மக்கள்தலைவன் வீரர்களை நோக்கி, "நீங்கள் நாட்டுக்காகப் போரிட்டால் காயமும் மரணமும் கிடைக்கும். நீங்கள் காயப்படலாம்; மரணிக்கலாம். ஆனால் இத்தாலி விடுதலை பெறும்" என்று குறிப்பிட்டார். அந்த விடுதலைக்காகப் போராடிய மக்கள் இத்தாலியில் நிரந்தரமாகப் பேசப்படுகிறார்கள்.

நூறு கோடி மக்கள்தொகை கொண்ட இந்திய நாட்டில் விவேகானந்தர் அன்று எதிர்பார்த்த 'நூறு இளைஞர்கள்' இந்தியாவை மாற்ற இன்னும் கிடைக்கவில்லையா? அதனால் தான் நமது அணு விஞ்ஞானி குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் ஒரு லட்சம் இளைஞர்களை இந்தியாவின் எழுச்சிக்கும் ஏற்றத்துக்கும் சந்திக்கப் போவதாகச் சவால் விட்டுள்ளார்.

டாக்டர் எம்.ஆர். காப்மேயர், "வாழ்க்கையில் நீங்கள் முழுமையாக வாழவேண்டுமானால் உயர்ந்து நில்லுங்கள்" என்று கூறியுள்ளார்.

நம் வாழ்க்கையில் வெற்றி - தோல்வி என்பது முதலில் மனப்பான்மையினால்தான் நிச்சயிக்கப்படுகிறது.

ஒரு நிலையில் வாழ்ந்து சாதனை படைப்பது ஒரு வகை. ஆனால், பல பரிமாணங்களில் பல வகைகளில் சாதனை நிகழ்த்தியவர்களும் உலக வரலாற்றில் உண்டு. ஆல்பர்ட் ஸ்வைட்ஸர், நான்கு களங்களில் வித்தகத்தை விந்தையாக்கியவர்.

1. தத்துவ சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம்,
2. சமயம் தொடர்பாக டாக்டர் பட்டம்,
3. சங்கீதத்தில் டாக்டர் பட்டம்,
4. ஆப்பிரிக்காவிலுள்ள லம்போர்னியின் காடுகளை அழித்து மக்களுக்கு மருத்துவ சிகிச்சையில் சாதனை செய்து உலக வரலாற்றில் நேற்றும் வாழ்ந்தார்; இன்றும் வாழ்கிறார்.

வாழ்க்கையில் உங்களின் ஆளுமைத் திறனையும் செயலாற்றலையும் பெருக்கிப் பெருமையடைய மைக்கேல் ஜான்சன் பத்து வகையான திறன்களை (Skills) அறிமுகப்படுத்தியுள்ளார்.

இப்பத்துத் திறன்களையும் எல்லோரும் நாளும் நாளும் வளர்த்துக் கொள்வதும் - பயிற்சி செய்வதும் தனிமனித வளர்ச்சிக்கும் - நாட்டு உயர்ச்சிக்கும் பயன்படும் அடிப்படைத் தளங்கள். நீங்களே சோதித்துப் பாருங்கள்.

1. திட்டமிடுபவர், 2. நேரம் போற்றுபவர், 3. கவனிப்பவர், 4. படிப்பவர், 5. எழுத்தாளர், 6. வாசிப்பவர், 7.முடிவு எடுப்பவர், 8. பேச்சாளர், 9.சோதனையை எதிர்கொள்பவர், 10.சிந்திப்பவர்

இப்பத்துக் கட்டளைகளை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடங்கள் தொடங்குமுன் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளித்தால், மாணவர்களின் படிப்புத் திறனும், ஆசிரியர்களின் கற்பித்தல் முறையும் மேம்படும்.

இத்திறன்களின் சுயமதிப்பீட்டை நீங்கள் செய்து பார்த்ததில் உங்களுக்கு 'ஆம்' என்பதில் ஏழும், 'இல்லை' என்பதில் மூன்றும் வந்தால் நீங்கள் சராசரி மனிதர்களைக் காட்டிலும் மேம்பட்டிருக்கிறீர்கள் என்று கருதலாம்... 'ஆம்' என்பதில் நான்கும் இல்லை என்பதில் ஆறும் வந்தால், நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை.... உடனடியாக நீங்கள் இல்லை என்பதை 'ஆம்' ஆக்க முயலுங்கள். 'ஆம்' என்பதை மேலும் மேலும் வளர்க்க முயற்சி செய்யுங்கள்.

இத்திறன்களைப் பத்துக் கட்டளைகளாக உங்கள் வீட்டிலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு இப்போதிருந்தே பயிற்சி கொடுங்கள்... நிறுவனத்தில் பணியாற்றும் நிர்வாகிகளுக்கும் பணியாளர்களுக்கும் புத்தொளிப் பயிற்சியாக நடத்துங்கள்... கல்வி நிறுவனங்கள் இதில் முக்கியப் பங்காற்ற வேண்டும். இப்படிச் செய்தால், படிப்புத் திறன் மாணவர்களுக்கு உயரும்; தொழிலகத்தில் உற்பத்தி பெருகும்; நிர்வாகக் கட்டமைப்பின் பணித்திறன் மேம்படும்... இந்தப் பத்துக் கட்டளைகளை எல்லோரும் தொடர்ந்து பின்பற்றினால் நாம் நலமாக இருப்பதோடு வீட்டையும், நாட்டையும் திட்டமிட்டு வழிப்படுத்தி வளமுடன் வாழலாம்.

-பெ.சுபாசு சந்திரபோசு

# ஆரி(றி)யக் கொள்கை

முக்கிய விஷயம் ஒன்றை இந்திய மீடியாக்கள் வசதியாக மறைத்துவிட்டன. ஆனால் வெளியிடாமல் மறைத்து விடுவதால் மட்டும், முக்கிய விஷயம், அதன் முக்கியத்துவத்தை இழந்து விடாது. மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதால் மட்டுமே ஒரு பொய் உண்மையாகி விடாது. ஆரியப் படையெடுப்பும் அப்படிப்பட்ட ஒரு விஷயமே! ஆனால் இந்திய அறிவுஜீவிகள் தங்களது ஆங்கில அடிமை மனப்பான்மையிலிருந்து விடுபட்டதாகத் தெரியவில்லை!

இந்தியாவின் மீதான ஆரியப் படையெடுப்பு என்பது பொய் - இதுவே சர்வதேசகல்வியாளர்களின் ஒருமித்த தீர்மானம்.

2003 அக்டோபரில் அமெரிக்க கலிபோர்னிய மாகாணப் பல்கலைக்கழகம் ஒரு மாநாடு நடத்தியது. மாநாட்டின் கரு "சிந்து மற்றும் சரஸ்வதி நதிப் பள்ளத்தாக்குகளில் எழுச்சியடைந்த நாகரீகம்: அண்மைக்கால கண்டுபிடிப்புகள்."

இந்திய தொல்லியல் ஆய்வுக்கழகத்தின் முன்னாள் டைரக்டர் ஜெனரலான பேராசிரியர் பி.பி. லால், ஹரப்பா தமிழ் பிராமி எழுத்து கல்வெட்டு ஆய்வாளர் திரு. ஐராவதம் மகாதேவன், இடதுசாரி கல்வியாளர்கள் டாக்டர். ஷிரீன் ரத்னாகர், டாக்டர். வசந்த் ஷிண்டே, ராஜஸ்தான் ஜிலன்ந்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட டாக்டர் கிரிகோரி போஷல், தொல்லியலாளர் டாக்டர் ஸ்டீவ் பார்மர் மற்றும் டாக்டர் பிரையன் ஹம்பில் (அகழ்வாராய்ச்சியில் கிடைத்த மனித மண்டையோடுகளை ஆராய்ந்தவர்), ஹரப்பா அகழ்வாராய்ச்சியில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஜோனதான் மார்க் கெனோயர், டாக்டர் ரிச்சர்டு மேடோ, லாஸ் ஏஞ்ஜல்ஸில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர் டி.ஆர். சர்தேசாய், பாகிஸ்தான் பெஷாவர் பல்கலைக் கழகப் பேராசிரியர் இஷான் அலி மற்றும் பேராசிரியரின் காமின்ஸ்கை ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் ஒருமித்த குரலோடு ஆரியப்படையெடுப்பு என்ற கொள்கைக்கு இவர்கள் சமாதி கட்டினர். மாநாட்டு நிகழ்ச்சித் தொகுப்பாளர் டாக்டர் சர்தேசாய், இனி வரும் காலத்தில் இந்திய வரலாற்றை எழுதும் எவரும் இந்தியாவின் மீது ஆரியர்கள் படையெடுத்து வந்தனர் என்று எழுதக்கூடாதென உறுதிபட அறிவித்தார். இந்திய வரலாற்றுப் பாடநூல்களை எழுதும் ஆசிரியர்களைத் தொடர்பு கொண்டு, இம்மாநாட்டின் ஒருமித்த கருத்தாக நிறைவேற்றப்பட்டுள்ள முடிவைத் தெரிவிக்க பேராசிரியர் காமின்ஸ்கைக்கு இம்மாநாடு அதிகாரம் அளித்தது.

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் இன்றும் கூட அந்தப் பொய் பாடமாகவே உள்ளது. அமெரிக்கப் பள்ளிப் பாட நூல்களில் ஆரியப்படையெடுப்பு, வேத - ஹரப்பா கலாசாரம் குறித்த பாடங்களை மாற்ற வேண்டுமென பேராசிரியர் கெனோயர், நியூயார்க் பள்ளிப் பாடநூல் வெளியீட்டாளர்களைச் சந்தித்து எடுத்துக் கூறியுள்ளார். இந்தியாவிலுள்ள கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (NCERT) உட்பட, உலகம் முழுவதும் உள்ள பள்ளியளவிலான கல்வி அமைப்புகள் அனைத்திற்கும் இந்த மாநாட்டு அமைப்பாளர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

உலகம் இன்று ஆரியப்படையெடுப்புக் கொள்கையை உதறித் தள்ளியிருப்பது, வலிமையான சரஸ்வதி நதிக்கரையில் தொடங்கி வேத காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து வரும் ஆன்மிக கலாசார ரீதியான நாகரிகத்திற்கு கிடைத்த வெற்றி. வேத காலத்திற்கு முன்பு இருந்தவை குறித்து நம் நினைவில் எதுவுமில்லை! வேதங்களில் ஆர்ய என்ற வார்த்தை 'பண்புள்ளவர்' என்ற பொருளில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர, இன அடையாளத்துடன் அல்ல.

ஆரியர் என்பது இனம் என்ற கருத்து எந்தவித அடிப்படையும் இல்லாத கருத்து. இதை முன் வைத்து, வேதத்தையும் அது கூறும் செய்திகளையும் முதல் முதலில் தவறாக அர்த்தப்படுத்தத் துவங்கியவர் சர். வில்லியம் ஜோன்ஸ் என்பவர். அடிப்படையற்ற இந்தக் கொள்கையை கருத்துலக அடிமைத்தனத்திற்கு ஆட்பட்ட 'புதிய' அறிவுஜீவிகள் அப்படியே அள்ளிப் பூசிக் கொண்டனர். பிறகு நடந்தவை அனைத்தும் எல்லோரும் அறிந்த வரலாறு தான்!

ஜோன்ஸின் கொள்கைப்படி, சிவப்புத்தோல் ஆரியர்கள் கறுப்பு நிறமுடைய திராவிடர்களின் நிலங்களை அபகரித்து அவர்களை தெற்கு நோக்கி விரட்டிவிட்டனர். தொல்லியலாளர்களின் ஆய்வுச் சான்றுகளின்படி இந்த ஆரியக் கொள்கை திட்டமிட்ட பொய்யான வரலாறு. ஆனாலும் இக் கொள்கை பிரசித்தி பெறவும் ஆழமாக வேரூன்றவும் காரணம், அப்போது நிலவிய காலனியாதிக்க அடிமை நாடுகளின் மீதான கருத்துலக ஆதிக்கமே! இந்தத் தவறான கொள்கையால்தான் தனித்தமிழ் நாடு கோரிக்கையும் எழுந்தது. இக்கொள்கை தோன்றுவதற்கு முன்பு (ஏன் இப்போது கூடத்தான்!) தமிழகம் மேன்மையடைந்த இந்துப் பண்பாட்டின், பாரம்பரியத்தின் உன்னதச் சான்றாக விளங்கியதே!

சரஸ்வதி நதிதீரத்தில் நடந்த அகழாய்வுகளில் வெளியிட்ட மிக முக்கியச் செய்தி, ஹரப்பா - வேத கால நாகரீகமானது குறைந்தது கி.மு.2000 க்கு முற்பட்ட காலத்தில் நிலவியவை எனவும் ரிக்வேதம் இயற்றப்பட்டது கி.மு.2000 த்தில் இருக்கலாம் எனவும் நிர்ணயித்திருப்பதாகும்.

ஆரியப்படையெடுப்புக் கொள்கையை வலிறுயுத்துபவர்களின் கூற்றுப்படி, கி.மு.2000 க்குப் பிறகு தான் ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தனர். அவ்வாறு இருந்தால் இமயத்தில் தோன்றி கடலை நோக்கிப் பாய்ந்த, வலிமையும் வளமும் வனப்பும் கொண்ட சரஸ்வதி நதியைப் பற்றி அவர்களால் பாடியிருக்க முடியாது. மாறாக சரஸ்வதி நதி தீரத்தில் வாழ்ந்த மக்களால் வேதபாடல்கள் இயற்றப்பட்டவையெனில் அந்த நாகரிகத்தின் தொடர்ச்சிதான், பல்வேறு வரலாற்றுத் தடைகளையும் மீறி இன்றும் உள்ளது. அதாவது ஆரியர்கள் என்போர் அதிகாரபூர்வமாக நம்முடைய முன்னோர்களே! அதுவும், இந்துக்களே!

'ஆரியப்படையெடுப்பு உண்மையல்ல' என்ற அறிவுலகத் தடை தகர்ப்பு, இந்திய தேசத்தைப் பொறுத்த வரையிலும் மிக முக்கியமானது. காலனி ஆதிக்கத்தின் போலிக் கருத்து தகர்ந்தது என்பது மட்டுமன்றி, நம்முடைய அரசியல் கலாசாரத்திலும் உணர்வுகளிலும் பிரிவினையை வளர்த்து வந்ததின் ஊற்றுக்கண்ணும் அடைக்கப்பட்டுள்ளதே!

அஸீமா (மங்களூர், கர்நாடகா) மே '04 இதழிலிருந்து

– தகவல்: திருவள்ளூர் கு.துரைசுவாமி

தமிழில்: திருநின்றவூர் ரவிக்குமார்



## ஸ்ரீ ரமண மகரிஷி

திருவண்ணாமலை மகான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 125-வது ஜெயந்தியை முன்னிட்டு 'ஸ்ரீ ரமண ஞான ரதம்' அவர் பிறந்த விருதுநகர் மாவட்டம் திருச்சுழி நகரில் ஜூலை 17-ம் தேதி புறப்படுகிறது.

பயங்கரவாதம் ஒழிந்து சமய ஒற்றுமை தழைத்தோங்கும் வகையில் ரமணரின் அத்வைதம், அன்பு வழி ஆகியவற்றை நாட்டு மக்களிடம் வலியுறுத்தும் வகையிலான இந்த ரதம் தமிழ்நாடு, கேரளம், புதுவை, ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் பயணம் செல்லும் என ஸ்ரீரமணாஸ்ரமத்தின் (திருவண்ணாமலை) தலைவர் வி.எஸ். ரமணன், ஸ்ரீ ரமணாலயம் (ராஜபாளையம்) நிர்வாக டிரஸ்டி பி.லோகநாதராஜா ஆகியோர் நிருபர்களிடம் தெரிவித்தனர்.

அவர்களது பேட்டி:

யாத்திரையை முன்னிட்டு திருச்சுழியில் ஜூலை 15, 16, 17 தேதிகளில் 'அட்சர மணி மாலை' பாராயணம் நடைபெறும். கேரளம், ஆந்திரம், புதுவை மாநிலங்களிலும் பயணம் செய்யும் இந்த ரதம் 89 இடங்களில் ஆன்மிகக் கருத்துகளைப் பரப்பும். 3,000 கி.மீ தொலைவு பயணம் செய்த பின் திருவண்ணாமலையை ஆகஸ்ட் 30-ல் சென்றடையும்.

சென்னையில் ஜூலை 19 : இந்த ரதம் ஜூலை 19-ம் தேதி சென்னைக்கு வந்து, நான்கு நாள்கள் இருக்கும்.

ரதம் நிற்கும் இடங்களில் ரமணரின் ஆன்மிக உபதேசங்களை மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் ஆன்மிக உரைகள், பக்தி இசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

முன்னணிப் பாடகர்கள் சுதா ரகுநாதன், எஸ். சௌம்யா, பம்பாய் ஜெயஸ்ரீ, டி.எம். கிருஷ்ணா, சங்கீதா சிவகுமார் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

ரமண ஜெயந்தியையொட்டி ரமணோதயம், ரமண ஒளி என்ற தமிழ் இதழ்கள், 'தி மௌண்டன் பாத்' என்ற ஆங்கில இதழ் வெளியிடப்படும்.

மேலும், ரமணரின் வாழ்வை விளக்கும் வி.சி.டிக்கள் அட்சர மணிமாலை ஒலிப்பேழை ஆகியவையும் வெளியிடப்படுகின்றன.



2 ஆம் பக்கத் தொடர்ச்சி ...

குறிப்பிடும் அதே சமயம், தேசத்தை உலகளவில் பேசச் செய்த அணு வெடிப்புச் சோதனை மற்றும் சமீபகால விண்வெளித் துறை சாதனைகளை வேண்டுமென்றே மறைப்பது...

✱ மருத்துவ அறிவியலில் பாரதத்தின் பண்டைய மருத்துவ சாதனைகளை, சரகர், சுஸ்ருதர் போன்றோரைக் குறிப்பிடாமல் இருட்டடிப்பு செய்வது...

மத்தியில் நிகழ்ந்த ஆட்சிமாற்றத்திற்குப் பிறகு, கல்வி காவியிலிருந்து சிகப்புக்கு மீண்டும் மாறுகிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வரலாறு திருத்தப்படுவதாக இரு பக்கங்களிலிருந்தும் கூக்குரல்கள் எழுந்ததைப் பார்க்கும் போது, ஜோஷி செய்திருப்பதை முற்றிலும் சரியெனச் சொல்லவோ, இடதுசாரிகள் செய்துகொண்டிருப்பதை முழுவதும் ஏற்கவோ மனம் ஒப்பவில்லை.

ஜோஷிக்கு முக்கியம் எனத் தோன்றிய இந்துராஜ்யம் கண்ட சிவாஜியும், வித்யாரண்யர் நிறுவிய விஜய நகர சாம்ராஜ்யமும் விடுதலைப் போரில் சாவர்க்கரின் வரலாறும் எவ்வளவு முக்கியம் என நமக்கும் தோன்றுகிறதோ, அவ்வளவுக்கு இந்த நாட்டின் விடுதலை வரலாற்றில் காங்கிரஸ் பேரியக்கத்தின் பங்கும் மகாத்மா காந்தியின் பங்களிப்பும் முக்கியம் என்று நமக்குத் தோன்றுகிறது:

ஜோஷி, நமது நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு பகுதியை மறைக்க முயன்றதும் தவறு. இந்த நாட்டின் பெரும்பான்மையினர் கொடுங்கோலர்களின் ஆட்சியில் பட்ட துன்பங்களை வரலாற்றிலிருந்து எடுத்து அதைத் திரித்து, சகிப்புத் தன்மையற்ற ஔரங்கஜீப் போன்றவர்களை ஹீரோக்களாகச் சித்தரிக்கும் இடதுசாரிகளின் செயலும் மிகமிகத் தவறு.

ஆக இஸங்களின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ள திரிக்கப்பட்ட வரலாறு நாட்டுக்குத் தேவையில்லை. நாட்டின் எதிர்கால சந்ததி, நிமிர்ந்த நடையோடு உலகரங்கில் மதிப்பு பெற்ற சமுதாயமாக உலாவரும் வண்ணம், தன்னம்பிக்கையும் சுயபெருமிதமும் அளிக்கும் பாரம்பரிய நினைவூட்டல் கொண்ட பண்பாட்டுக் கல்வியே இன்றைய தேவை!

முற்போக்குவாதிகள் என்று அழைத்துக் கொள்பவர்களால் நாடு முன்னோக்கி எடுத்துச் செல்லப்படாது. NCERT போன்ற கல்வி அமைப்புகளில் இஸம் பேசுபவர்கள் அமர்ந்து கொண்டு, தங்கள் வக்கிரச் சிந்தனைகளை விதைப்பது நாட்டுக்குக் கேடு. இது போன்ற அமைப்புகளில் இருக்க வேண்டியவர்கள் தேசத்தின் மீது நன்னம்பிக்கை கொண்ட நடுநிலை அறிஞர்கள்/வரலாற்றாளர்கள்.

சீனாவில் கம்யூனிஸ அரசு அமைவதற்கு முன்னர், சீனர் களின் ஜீவாதார விஷயங்கள் மார்க்ஸியக் கொள்கைகளோடு ஒத்துப் போகும் வண்ணம், அறிவு ரீதியாக மக்களை மாற்றுகின்ற முயற்சி 20 வருடங்களாக நடந்து வந்தது. வரலாறு மார்க்ஸ் சொன்னபடி மக்கள் மனங்களில் பதிய வேண்டும் என்பதே இதன் நோக்கம்! இந்நோக்கம் நிறைவேற, சீனா கம்யூனிஸ மயமானது! இதுவும் வரலாறுதான்...

இந்தியாவிலும் அத்தகைய நடைமுறையைப் பின்பற்ற NCERT யை இடதுசாரிகள் கைப் பற்றியிருக்கின்றனர். அறிவுக்கொலை நிகழ்த்தி அரசியல் அதிகாரம் பெற எண்ணும் இம்முயற்சியால் நாளைய நம் சந்ததிக்கு இந்தியப் பாரம்பர்யமும் சுய மதிப்பும் தெரியாமலே போகும்...

காங்கிரஸின் தோளில் அமர்ந்து கொண்டு இடதுசாரிகள் தங்கள் துப்பாக்கிகளால் NCERT மற்றும் இந்தியாவின் பாரம்பரிய வரலாற்றைக் குறிபார்க்கிறார்கள். இதனால் வீழப்போவது NCERT என்ற அமைப்போ சில தனிப்பட்ட நபர்களோ அல்லர். தாக்குதலுக்குள்ளாவது இந்த தேசத்தின் எதிர்காலம்.

தமிழகத்தில் பள்ளிகள் திறந்து இன்னும் பாடநூல்கள் கிடைக்கவில்லையே என்பதில் ஆதங்கப்படும் நாம், நாட்டின் பாரம்பரிய உண்மை வரலாறே இந்தியா வில் இனி கிடைக்குமா என்பது குறித் தும் கவலைப்படவேண்டுமல்லவா? ✱

# உங்களோடு ஒரு வார்த்தை...

தமிழ் - செம்மொழியாக அறிவிக்கப்படுவது நீண்ட இழுபறிக்குப் பின் சாத்தியமாவது போல் தெரிகிறது. அதற்கு இந்த ஆண்டு இறுதிக்குள் என, காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்- உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை, சென்ற தே.ஜ.கூ அரசில், தமிழக கட்சிகள் அன்றைய பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்று, அதுபற்றி பரிசீலிக்கச் செய்தார்கள். இம்முறை, கூட்டணி அரசின் செயல்திட்டத்தில் இடம் பெற்ற கொள்கையாகவே அறிவிக்கச் செய்திருக்கிறார்கள். இதில் கலைஞரின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்று...

ஒரு மொழி செம்மொழியாக உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட என்னென்ன தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளனவோ, அதைக்காட்டிலும் சிறப்புற அமைந்துள்ளது நம் தமிழ் மொழி! முறையான இலக்கணம் (எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்றும், ஒவ்வொன்றுக்கும் பொதுவான மற்றும் தனித்தனி நூல்கள்) சொற்பொருள் திறன், எழுத்தொலிச் சிறப்பு, சொல்லோசை, ஓசை நீட்டம், அழுத்தம் போன்றவை மிகச் சிறப்பான வகையில் அமைந்துள்ளன. தொல்லியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வு முடிவுகளும் இக்கருத்துக்கு வலுச் சேர்க்கின்றன. தமிழ் ஆதி மொழி. தமிழிலிருந்து தோன்றியவை பல...

ஆக, இந்த வருட இறுதிக்குள் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதில் நாமும் ஆசை கொண்டுள்ளோம். செம்மொழிக்கான சிறப்போடு தமிழ் திகழ்கிறது... முக்காலும் உண்மை! செம்மொழியினர்க்கான சிறப்புகளோடு திகழ நாம் முன்வர வேண்டுமன்றோ?

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலம் கண்ணிய ஓம்படை....

(தொல்காப்பியம், பொருள் 90)

பாடாண் திணைத் துறைகளுள் ஒன்று ஓம்படை. நாள், நிமித்தம், புள் முதலியவற்றால் தமது வள்ளற்குத் தீங்கு உண்டாகுமோ என அஞ்சி, அவர்பால் அன்பு கொண்டு, அவரது வாழ்நாள் தீங்கின்றி நிகழ வேண்டும் என்று கருதி வாழ்த்திப் பாதுகாக்கும் நிலை - ஓம்படை....

தமிழ் - வாழவைக்கும் வள்ளல்; ஓம்புவதும் அதுவாக இருக்கட்டும்... தமிழின் வாழ்நாள் தீங்கின்றி நிகழ்வது தமிழராகிய நம்மிடம் அன்றோ உள்ளது...?

செங்கோட்டை ஸ்ரீராம்

Edited and Published by R.Narayanaswamy for and on behalf of the Kalaimagal Office. No.1, Sanskrit College Street, Mylapore, Chennai - 600 004. Ph: 24983099/24983799 And Printed at Rajam Offset Printers. 1, Portugese Church Street, 9th lane, Chennai-600001

## புத்தகம் அறிமுகம்


### கல்வியே வழி

நூலாசிரியர்: சுவாமி பஜனானந்தர்

வெளியீடு: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4

விலை: ரூ. 25/- பக்கங்கள்: 234

விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் இந்த நூலில் ... கல்வி கட்டாயத் தேவை, அதிலும் மனிதனை உருவாக்குகின்ற கல்வி, சொந்தக் காலில் நிற்கச் செய்கின்ற கல்வி என்று சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்துக்களுக்கு விளக்கங்கள் பல இந்நூலில் உள்ளன. ஆன்மிகமும் ஆளுமையும் கலந்த பண்பாட்டுக் கல்வியின் தேவைகளை ஆசிரியர் சிந்தனை வித்துக்களாக விதைத்திருக்கிறார்.




### ஜெமினி கேண்டீன்

நூலாசிரியர்: ஏ.என்.எஸ் மணியன்

வெளியீடு: சாந்தி பதிப்பகம், 27, அண்ணா சாலை, சென்னை - 2

விலை: ரூ. 30/- பக்கங்கள்: 112

ஜெமினி ஸ்டுடியோ காண்டீனில் சர்வராகச் சேர்ந்து, காண்டீனுக்கு உரிமையாளராகி பிறகு மெஸ் முதலாளியான இந்நூலாசிரியர் ஏ.என்.எஸ் மணியன், ஜெமினி ஸ்டுடியோவில் தமக்கேற்பட்ட அனுபவங்களை இந்நூலில் தருகிறார். ஔவையார் பட சூட்டிங், கே.பி. சுந்தராம்பாள், தில்லானா மோகனாம்பாள் வந்த விதம், நடிகர் சந்திரபாபு ஏன் தற்கொலைக்கு முயற்சித்தார்? என்.எஸ். கிருஷ்ணன் சிறைக்குப் போனது ஏன்? என்.எஸ்.கேயே எஸ்.எஸ். வாசனுக்கு நோட்டீஸ் அனுப் பியது ஏன்? சிவாஜி கணேசன் ஏன் ஜெமினிக்கு ஒத்துழைக்கவில்லை? - இப்படியாகப் பல ஏன்களுக்கு இந்த நூலில் நல்ல விளக்கம் கிடைக்கும். பழைய சங்கதிகளை அசைபோட விரும்புவோர்க்கு நல்ல சாப்பாடு.

### தஞ்சாவூரு ராணி

நூலாசிரியர்: கோ.சேதுராமன்

வெளியீடு: சாந்தி பதிப்பகம், 27, அண்ணா சாலை, சென்னை - 2

விலை : ரூ. 60 பக்கங்கள் : 256

வரலாற்று நாவல். பதினேழாம் நூற்றாண்டு முன்பு வரையிலான மராட்டிய, நாயக்கர்களின் ஆட்சியில் நடந்த சம்பவங்கள் தெரிய வருகின்றன. ராணி தீபாபாய் தான் நாவலின் கதாநாயகி. மன்னர் இறந்துவிடும் நேரம்... குலவழக்கப்படி உடன்கட்டை ஏறாமல் பிஞ்சுகளான குலவிளக்குகளைக் காத்து வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்று, உடன்கட்டையை மறுத்து புரட்சி செய்கிறார்.



REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER
REGD.NO.1105/57,POSTAL REGN.NO.TN/PMG(CCR)/549/03-05 & WPP NO.342/03-05

குருபார்க்க கோடிநிவர்த்தி! குரு பார்த்தால் குபேரனாக

# குருபகவான் ஸ்தலமான ஆலங்குடியில் குருபகவானுக்கா

# குரு பெயர்ச்சித் திருநாள் 19.8.2004 வியாழன் அன்

## ஸ்வாமி கண்ணன் பட்டாச்சாரியா தலைமையில் நடைபெறு

## மாபெரும் ஹோமத்திலும், அன்னதான பெருவிழாவிலும் கலந்து கொள்

## அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

**பேரன்புடையீர்! வணக்கம். ஆலங்குடி குருபகவான் தங்களுக்கு அனைத்து நலன்களையும், வளங்களையும் தந்தருளப் பிரார்த்திக்**

ஆலங்குடியில் அமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் **அருள்மிகு ஏலவார்குழலி உடனுரை ஆபத்சகாயர்** அருளாசியோடும், **ஸ்ரீ தட்** **யான குருபகவான்** திருவருளோடும், **ஆலங்குடியில் சிம்மராசியிலிருந்து கன்னிராசிக்கு பிரவேசமாகும் குருபெயர்ச்சி நாளான 19.8.04 வியாழன்** அன்று நடைபெ மாபெரும் ஹோமத்திலும், அன்னதானத்திலும் கலந்து கொண்டு குருபகவானின் பேரருளைப் பெற அனைவரையும் அன்புடன் அழை

கடந்த ஆறு ஆண்டுகளாக ஒவ்வொரு அமாவாசை நாளில் காசியிலும், ராமேஸ்வரத்திலும் ஒவ்வொரு பௌர்ணமி நாளில் திருஅண்ணாம அன்னதான திருப்பணி செய்து வரும் **ஆன்மீகம் தெய்வீக மாத இதழ்** சார்பாக நடத்தப்படும் **ஆன்மீக அன்னதான அறக்கட்டளை** மூலம். ஆல **சிறப்பு மூர்த்தியான ஸ்ரீ குருபகவான் சன்னதி** எதிரில், தெற்கு வீதியில் அமைந்துள்ள மீனாட்சி இலலத்தில் சென்னை திருவல ஸ்ரீயோக ஆஞ்சனேய சக்தி பீடாதிபதி, விருட்ச சாஸ்திர வித்வான், **பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சாரியா**, தமது வேத வித்வான்களின் கு குருபகவானால் ஏற்படும் சகலவித கிரக தோஷங்களுக்கு **"குருபகவான் பிரீத்தி மஹாஹோமம்"** நடத்துகின்றார். ஹோமத்திலும், குரு அன்று நடைபெறும் அன்னதானத்திலும் அனைவரும் கலந்து கொண்டு **குறைவற்ற மதிவளமும், நிதிவளமும்** பெற வேண்டு

மாபெரும் ஹோமத்திலும், அன்னதானத்திலும் பங்கு பெற விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடைகளை அனுப்பு **பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம்** மற்றும் தங்களது பிரார்த்தனை போன்ற விவரங்களையும் தெளிவாக எழுதி அனு அதற்கேற்ப ஹோமமும், அன்னதானமும் செய்து அதற்கான பிரசாதங்கள் அனுப்பிவைக்கப்படும். குருபெயர்ச்சி அன்று குடியில் நடைபெறும் மாபெரும் ஹோமத்திலும், அன்னதானத்திலும் குடும்பத்துடன் நேரில் கலந்துகொண்டு **பிரார்த்தனைகளை செலுத்தி, துன்பங்கள் நீங்கி நிம்மதியாக, இன்பமாக குருவின் அருளாசியுடன்** வாழ அன்புடன் அழைக்கி

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்ப

- ரூ. 500 - **அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் மூன்று மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படு**
- ரூ. 1000 - **அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.**
- ரூ. 5000 - **அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஐந்து வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படு**

மாபெரும் ஹோமத்திற்கும், அன்னதானத்திற்கும் நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு ஆலங்குடியில் குருபெயர்ச்சி நாளன்று ஹோமமும், அன்னதா ஹோமத்தில் பூஜிக்கப்பட்ட குரு பகவான் யந்தரம், வெள்ளி டாலர், குருபகவான் வண்ணப்படம், ஹோம பிரசாதங்களுடன் சிறிய அளவில் கோளறு பதிகம் புத்தகமும் அனுப்பி வை

ரூ. 5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக, ஆலங்குடியில் குருபெயர்ச்சி நாளான 19.8.04 வியாழன் அன்று ஹோ அன்னதானமும் செய்து ஹோமத்தில் பூஜிக்கப்பட்ட குரு பகவான் யந்தரம், வெள்ளி டாலர், ஹோம பிராசதங்களுடன் ஆண்டுகளுக்கு **ஆன்மீகம் மாத இதழ்** தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் அறையும் மங்கலம் பெற வேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ. 5000 - செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்க கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீ மத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கி

இந்த அன்னதானத்திருப்பணி (திருக்கோயிலுக்கு உட்பட்டது அல்ல) ஆன்மீகம் இதழ் வாசகர்களுக்காகவும், அன்னதான சேவ கைங்கர்யத தொண்டு புரிந்து வரும் அனைத்து அன்பர்களுக்காகவுமே நடத்தப்படுகிறது.

ஹோமத்திலும், அன்னதானத்திலும் பங்கு பெற விரும்பும் அன்பர்கள் **தங்கள் நன்கொடையை Aanmeeka Annadhana Chari Trust, Chennai** - 4 என்ற பெயரில் **Cheque / D.D/ M.O.** மூலம் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணி நலம் தரும் இறை பணி சேவைகளாக ஆன்மீக அன்னதான அறக்கட்டளை ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன வேண்டு



**நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.**

Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

## ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

**AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)**

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

**TEL : 24959302, 24617378. Fax : 044 - 5206 6525. E-mail:sivasiva @ vsnl.net**



**குருபெயர்ச்சி திருநாளன்று குருபகவான் திருத்தலமான ஆலங்குடியில் மஹா ஹோமமும் அன்னதானமும் செய்து குருபகவான் பேரருளை பெற**